விலை: 30 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 342 ஐப்பசி 17ஆம் நாள் சனிக்கிழமை 03 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

**வடமாகாண மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*
"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
-வாரன் பஃபெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

## எந்தப் பக்கம் எத்தனை பேர்?

நேற்று இரவு வரையான கட்சித் தாவல்களின் பின்னர் மைத்திரி - மகிந்த கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 104 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி வசம் 99 உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் 14 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியில் 6 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் ஒரு உறுப்பினருமாக உள்ளனர். (5)

# மகிந்தவிடம் சரணாகதியடைந்த வியாழேந்திரன் பச்சைத் துரோகி!

### சீறுகின்றனர் மட்டக்களப்பு தமிழ் மக்கள்

மட்டக்களப்பு, நவ. 3
பிரதி அமைச்சுப் பதவியைப் பெறுவதற்காக தமிழினத்தின் கொள்கையைப் பல கோடிகளுக்குப் பேரம் பேசி மகிந்த ராஜபக்சவிடம் சரணாகதியடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் பச்சைத் துரோகி. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அமைப்புக்களின் » 23


## ஐ.தே.க. உறுப்பினருக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, நவ. 3
ஐக்கிய தேசியக் கட்சியின் 6ஆவது நாடாளுமன்ற உறுப்பினரும் » 25

# தமிழ்க் கூட்டமைப்பிலிருந்தும் மகிந்த அணிக்குப் பாய்ச்சல்

## வியாழேந்திரன் எம்.பிக்கு பிரதி அமைச்சு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவம்பர் 3
கொழும்பு அரசியலில் ஆட்சியைத் தக்க வைப்பதற்காக மகிந்த அணி கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்காகப் பேரம் பேசல்களை முன்னெடுத்துள்ள அந்த அணி, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இதுவரை 6 நாடாளுமன்ற உறுப்பினர்களை தன் பக்கம் இழுத்துள்ளது. இவ்வாறானதொரு » 25



## கட்சியிலிருந்து நீக்கப்பட்டார் வியாழேந்திரன்

யாழ்ப்பாணம், நவ. 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் அமைப்பில் சார்பின் போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்ட » 25

## ஜி.எஸ்.பி. பிளஸ் பறிபோகலாம்

### ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 3
இலங்கை தனது வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கினால் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை நிறுத்துவது குறித்து சிந்திக்கவேண்டி வரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கைவிடுத்துள்ளது. » 25

## மகிந்தவை ஆதரிக்க முடியாது ரணிலை நம்பவும் முடியாது

### கூட்டமைப்பின் கூட்டத்தில் விவாதம் 4 எம்.பிக்கள் பங்கேற்கவில்லை » 25

## மீண்டும் இன்று கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம்

### ஊடக அறிக்கையும் வெளியாகும்

யாழ்ப்பாணம், நவ. 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் » 25

## யாருமே எதிர்பார்க்காத பலர் எம்முடன் விரைவில் இணைவர்

### சு.க. நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3
எவரும் எதிர்பார்க்க முடியாத பலர் விரைவில் அரசுடன் இணைந்து கொள்வார்கள். அவர்கள் யார் என்பதை இன்று அல்லது நாளை அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தெரிவித்துள்ளது. » 25

# நாடாளுமன்றம் புதன்கிழமை கூட்டப்படும்

### சபாநாயகர் நேற்று தெரிவித்தபோதும் அரசிதழ் அறிவிப்பு வெளியாகவில்லை

கொழும்பு, நவ. 3
எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று அரச » 22

அரசியல் நெருக்கடி

## மைத்திரியுடன் பேசினார் ஐ.நா. பொதுச் செயலர்

கொழும்பு, நவ. 3
இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக, ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் அரச » 25

see more news in newuthayan.com

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும்பான்மை இல்லை

### கணக்குச் சொல்கின்றது மகிந்த அணி

கொழும்பு, நவ. 3
ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லை. நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்திருந்திருந்த » 25

மகிந்தவுக்கு எதிராக

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகரிடம் கையளிப்பு

கொழும்பு, நவ. 3
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக, ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகர் » 23

## மகிந்தவின் நியமனத்துக்கு 118 எம்.பிக்கள் எதிர்ப்பு

### கூட்டமைப்பில் 3 பேரும் ஜே.வி.பியில் 4பேரும் பங்கேற்கவில்லை

கொழும்பு, நவ. 3
நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கேட்டுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகருக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை » 25

## நாடாளுமன்றக் குழுக்கள் அனைத்தும் கலைப்பு

கொழும்பு, நவ. 3

நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் 12 குழுக்களும் கலைக்கப்பட்டுள்ளன.

அரச தலைவரின் பணிப்புரைக்கமைய கடந்த 27ஆம் திகதி நாடாளுமன்றத்தின் இரண்டாவதுகூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.


இதனைத்தொடர்ந்து கோப் குழு. அமைச்சுகளுக்கான ஆலோசனை செயற்குழு. அரசமைப்புச் செயற்குழு உள்ளிட்ட12குழுக்கள்கலைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உயர் பதவிகளுக்குரியவர்களை நியமிக்கும் செயற்குழு, தெரிவுக்குழு ஆகியனதொடர்ந்தும்செயற்படுவதாக நாடாளுமன்றப் பிரதிச் செயலர் நாயகம் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார். (5)

## எங்களிடமே பெரும்பான்மை

# அமைச்சுக்குச் சென்று சம்பிக்க நேற்று அதிரடி

**கொழும்பு, நவ. 3**

**மகிந்த - மைத்திரி கூட்டிணைந்து அமைத்துள்ள சட்டவிரோத அரசில் புதியஅமைச்சர்கள்பலர் நியமிக்கப்பட்டாலும், பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு என்னுடையதே. இவ்வாறு ஜாதிக ஹெலஉறுமய உறுப்பினர்சம்பிக்கரணவக்க தெரிவித்தார்.**



கடந்த 26ஆம் திகதி புதிய தலைமை அமைச்சராகமகிந்தராஜபக்சநியமிக்கப்பட்டதைதொடர்ந்து புதியஅமைச்சர்கள் அரச தலைவர் மைத்திரிபாலவால் நியமிக்கப்பட்டனர்.

கூட்டுஅரசில் அமைச்சர்களாக அங்கம் வகித்தவர்கள் தமது அமைச்சுப் பதவிகளை கைவிட்டு, தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குஆதரவுதெரிவித்து வருவதோடு. அரசமைப்புக்கு முரணானவகையில்ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறி நாடாளுமன்ற அமர்வை உடனடியாக கூட்டுமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுப்பிற்பகல் பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு சென்ற சம்பிக்க ரணவக்க, அலுவலகத்தின் கதிரையில் அமர்ந்து இது என்னுடைய அமைச்சும் என்றும்நான்தொடர்ந்துஎனதுபொறுப்புக்களை முன்னெடுப்பேன் எனவும் அங்குள்ளவர்களிடம்தெரிவித்துள்ளார்.

இன்று (நேற்று) சபாநாயகர் நாடாளுமன்றத்தில்நடத்தியகூட்டத்தில்118நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர். எனவே பெரும்பான்மை எங்களிடமேஇருக்கின்றதுஎன்றுஅமைச்சில் வைத்துத்தெரிவித்துள்ளார். (5,71)

## கோத்தா – ரணில் சந்திப்பு: இரண்டு தரப்புமே அறிக்கை





கொழும்பு, நவ. 3

நாடாளுமன்றத்தைக் கூட்டி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்றே கோத்தபாயவிடம் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியதாக ரணில் தரப்பும், நாட்டில் எழுந்துள்ள நிலமை தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்ப்பை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலேயே ரணிலுடன் பேசியதாக கோத்தாவின் தரப்பும்அறிக்கைகள்வெளியிட்டுள்ளன.

முன்னாள்பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கும், தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்இடையில்அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பு 7 நிமிடங்கள் மாத்திரமே இடம்பெற்றுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் இரண்டு தரப்புமே அறிக்கைகள் எதனையும் வெளியிட்டிருக்கவில்லை. சந்திப்புத்தொடர்பானதகவல்கள் ஊடகங்களில்நேற்றுவெளிவந்ததைத் தொடர்ந்து இரண்டு தரப்புமே அறிக்கைகள்வெளியிட்டுள்ளன.

ரணில் தரப்பு அறிக்கையில், அலரிமாளிகையில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை வெளியேற்றுவது தொடர்பிலோ அல்லது வெளியேறும் போது ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புதொடர்பிலோஎதுவும் கலந்துரையாடப்படவில்லை. தற்போதுநாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிககளை இருவரும் கலந்தாலோசித்தனர். கோத்தபாயராஜபக்ச, அரசியல் நெருக்கடிகள் குறித்து ரணில்விக்கிரமசிங்கவுக்கு விளக்கியதோடு இது அரசமைப்புக்கமுரணானபிரச்சினை என்பதால், சுமூகமான பேச்சுக்கள் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பெரிய அளவில் பாதிக்கும்என்றுவலியுறுத்தியிருந்தார். ஐக்கியதேசிய கட்சியின்தலைவர்ரணில் விக்கிரமசிங்க, இந்த பிரச்சினைஅரசியல்கட்சிகளுக்கிடையிலேதனிப்பட்டநபர்களுக்கிடையிலான பிரச்சினையல்ல. மக்கள் ஆணைக்கும் நாட்டின் அரசமைப்புக்கும் இடையிலான பிரச்சினைக்கு நாடாளுமன்றத்திலேயே தீர்வு காண முடியும். உடனடியாகநாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோத்தபாயவிடம் கூறியுள்ளார் என்றுள்ளது.

கோத்தபாயராஜபக்சதரப்பு வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் காணப்படும் குழப்பகரமான நிலவரத்தால்பன்னாட்டுச்சமூகத்திடமிருந்து எதிர்பாராமல் எழக்கூடிய எதிர்மறையான குழப்பமான உணர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் மகிந்தவுக்குப் பெரும்பான்மை உள்ளது என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தையும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களையும் பாதுகாப்பதற்கான மக்களின்ஆதரவுதனக்குள்ளது என்று தெரிவித்துள்ள ரணில்விக்கிரமசிங்கதான் அதனை நிரூபிக்கத் தயார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றுள்ளது. (5,31)

### செயலர்கள் நியமனம்

கொழும்பு, நவ. 3

நான்கு புதிய அமைச்சுக்களின் செயலர்கள் நேற்றுப் பிற்பகல் அரசதலைவர்பணிமனையில் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர்.

திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலராக சுனில்ஹெட்டியாரச்சி, நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்தமுகாமைத்துவஅமைச்சின் செயலராக என். ஏ. சிசிர குமார, நிதி மற்றும்பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலராக எஸ். ஆர். ஆட்டிகல, கலாசார, உள்நாட்டலுவல்கள்மற்றும் பிரதேசஅபிவிருத்திஅமைச்சின் செயலராக தர்சனா சேனாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (5)

# கட்சி தாவ ரூ. 50 கோடி பேரம்பேசியமகிந்தஅணி

## *உண்மைகளை அவிழ்த்துவிட்டார் ரங்கே பண்டார எம். பி.*

கொழும்பு, நவ. 3

மகிந்த அரசில் இணைந்துகொள்ள 2.8 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதாகப் பேரம் பேசப்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ரங்கே பண்டார மகிந்த அணியுடன் இணையவுள்ளதாககடந்தசிலதினங்களாகத் பரபரப்பாக பேசப்பட்டது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் அவர் பங்கேற்றார். சபாநாயகரிடம்இந்தப்பேரம்பேசல் விவகாரத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இரண்டு தரப்பும் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு கடும் பிரயத்தனங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. மகிந்த ராஜபக்ச பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு இன்னமும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போட வேண்டியுள்ளது. இதற்காகக் குதிரைப் பேரம் பேசல் இடம்பெறுகின்றது. பசில் ராஜபக்சவே இவற்றை முன்னெடுப்பதாகக் கூறப்படுகின்றது. (5)

## அலரிமாளிகையில் ரணில் தொடர் சந்திப்புக்கள்



கொழும்பு, நவ. 3

2015ஆம்ஆண்டுஜனவரி8ஆம்திகதிஜனநாயகத்துக்காக முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டிருந்தசிவில் அமைப்புகளின் எதிர்பார்புக்களைதவிடுபொடியாக்கி ஜனநாயகத்துக்குஎதிராகவும், அரசமைப்பைமீறியும்முன்னெடுத்துச் செல்லப்படும் அரசியல் சூழ்ச்சிக்கு எதிராக மீண்டும் சிவில் அமைப்புகள் ஓரணியில் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில்சிவில்அமைப்புக்களுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அலரிமாளிகையில்நேற்றுச்சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அரசியல்நெருக்கடிகள்ஏற்பட்டதுமுதல் ரணில்விக்கிரமசிங்கசட்டத்துக்கு உட்பட்டு ஜனநாயக விழுமியங்களை பேணி நடந்துகொள்வதாக இதன்போது சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தைப்பாதுகாக்கவும், சட்டவாட்சியை நிலைநாட்டவும் முழுமையான ஆதரவளிப்பதாகசிவில்அமைப்புகள்இதன்போதுஉறுதியும்அளித்துள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வெயங்கொட, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து உட்படப் பல்வேறு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (5,10)

## டொலரின் பெறுமதி வீழ்ச்சி

அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபாவுக்கான பெறுமதி இன்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள தகவலின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 175.82 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபாவுக்கான பெறுமதி 177.32 ரூபாவாக காணப்பட்டது.

இந்த நிலையில் அண்மைக்காலமாக அமெரிக்க டொலர் ஒன்றுக்கான ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்த நிலையில், நேற்று ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. (4)

# ரணிலை நீக்கும் அதிகாரம் மைத்திரிபாலவுக்கு இல்லை!

### கடுமையாகச் சாடுகிறது தமிழ்க் கூட்டமைப்பு மகிந்தவை ஏற்கமாட்டோம் என்றும் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தலைமை அமைச்சரை நீக்குவதற்கான அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை. அவரின் செயற்பாடு முற்றிலும் அரசமைப்பை மீறிய சட்டவிரோதமானது. அதனால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை நாங்கள் தலைமை அமைச்சராக ஏற்றுக்கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கருஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், அரச தலைவரின் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 26ஆம் திகதி இரவு அரசதலைவர் செய்த செயல் முற்றிலும் சட்டவிரோதமானது. அரசமைப்புக்கும் எதிரானது. அரசமைப்பின் பிரகாரம் தலைமை அமைச்சரரை நீக்குவதற்கான அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை. 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு முன்னர் அவ்வாறு அதிகாரம் இருந்தது. ஆனால், தற்போது அவ்வாறான அதிகாரங்கள் நீக்கப்பட்டுள்ளன. அதனால் இது அரசமைப்புக்கு எதிரான செயற்பாடு.

அத்துடன், நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமையும் சட்டவிரோதமானது. நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது.

நாடாளுமன்றில் எவருக்கு ஆதரவளிப்பதென்று கூட்டமைப்பு இதுவரை தீர்மானிக்கவில்லை. மகிந்தவை நாங்கள் தலைமை அமைச்சராக ஏற்றுக் கொள்ளவும் இல்லை - என்றார். (4)

# தற்போது நடந்தது அரசியல் சூழ்ச்சி

### ஜே.வி.பி. சாடுகிறது

கொழும்பு, நவ. 3

அரசமைப்பின் பிரகாரமே தலைமைஅமைச்சர் பதவியில் மாற்றம் இடம்பெற வேண்டும். தற்போது நடந்துள்ளது அரசியல் சூழ்ச்சி என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் 6 கட்சியினரும் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

அதன்பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும். தலைமை அமைச்சர் பதவியில் மாற்றம் என்பது அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் ஊடாகவே இடம்பெற வேண்டும். ஜே.வி.பி. எம்.பிக்கள் 6 பேரினதும் நிலைப்பாடு இதுவாகவே இருக்கின்றது. ரணில் விக்ரமசிங்கவே தற்போது சட்டபூர்வமான தலைமை அமைச்சராக இருக்கின்றார். அவரையே எமது கட்சி தலைமை அமைச்சராக ஏற்றுள்ளது" - என்றார். (4)

# நாடாளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கே!

### *ராஜித எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 3

நாட்டில் நிலையற்ற அரசியல் சூழ்நிலைகள் காணப்படும்போது நாடாளுமன்றத்தைக் கூட்டக்கூடிய அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது. அதன் பிரகாரம் நாடாளுமன்றத்தை உடனடியாகச் சபாநாயகர் கூட்டுவார் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அத்துடன், மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படும் சந்தர்ப்பத்தில் முதலாவதாக அரச தலைவரின் சிம்மாசன உரை இடம்பெறும். அந்த உரைக்கு எதிராக வாக்கெடுப்புக் கோரப்பட்டு எதிராக பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில் அரசு தானாகக் கலையும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் 6 கட்சியினரும் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே ராஜித மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளோம். பேர் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் எங்களுடைய பெரும்பான்மையைக் காட்டினோம். இதில் 117 பேர் கலந்துகொண்டனர். ஒருசிலர் கலந்துகொள்ளவில்லை. நியமிக்கப்பட்டுள்ள அரசு சட்டவிரோதமானது எனக் கூறினோம்.

தமிழ்க் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளும் அரசமைப்புக்கு எதிரான இந்த ஜனநாயக விரோதச் செயற்பாட்டுக்கு எதிராகவே இருக்கும் என்று கூறினார்.

7ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதாக அரச தலைவர் உறுதிபூண்டுள்ளார். அவர் அதனை மீறிச் செயற்பட்டால் அவர் மீதுள்ள நப்பிக்கையை மக்கள் புரிந்துகொள்ளமுடியும். அனைத்துச் சிறுபான்மைக் கட்சிகளும் ஐ.தே.க. தலைமையில் எடுக்கப்படும் இந்தச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக உள்ளன.

7ஆம் திகதி நாடாளுமன்றத்தை அரசதலைவர் கூட்டுவதற்குப் பணிக்காவிடின் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் உள்ளது. அதன் அடிப்படையில் செயற்படுவோம்.

உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசு சட்டரீதியானதா? இல்லையா? என்பதை நாடாளுமன்றம் தான் தீர்மானிக்கும். நாடாளுமன்றம் கூடியவுடன் அரசதலைவரின் சிம்மாசன உரை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அந்த உரைக்கு எதிராக வாக்கெடுப்புக் கோரமுடியும். அதில் தோல்வியடைந்தால் அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டும் - என்றார். (4,10)

# ஐ.தே.கவின் பெரும்பான்மையை சபாநாயகருக்குக் காட்டியுள்ளோம்

### நாடாளுமன்றைக் கூட்டுங்கள் என்று சஜித் பிரேமதாச கோரிக்கை

கொழும்பு, நவ. 3

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ள பெரும்பான்மையை சபாநாயகரிடம் இன்று (நேற்று) இலக்கத்தில் காட்டியுள்ளோம். எனவே, நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் 6 கட்சியினரும் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடிய பின்னர் சஜித் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் எங்களுடைய பெரும்பான்மையைக் காட்டியுள்ளோம். அதனை இலக்கத்திலும் காட்டியுள்ளோம். எனவே, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்.

அரச தலைவரின் அனைத்துச் சூழ்ச்சிகளும் எமது கட்சியின் தலைவருக்குத் தெரியாதே நடந்துள்ளன. இது அரசமைப்புக்கு விரோதமான செயற்பாடு. அதனைத் தான் நேற்று அரசதலைவரை சந்தித்து நான் தெரிவித்திருந்தேன்.

மக்கள் தலைவர்கள் அனைவரும் அதிகாரத்தை ஒருபக்கத்தில் வைத்துவிட்டு முதுகெலும்புடன் ஜனநாயகத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும் - என்றார்.

இதேவேளை, நேற்று (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற சில விலை குறைப்புகள் மக்களுக்கானது அல்ல அதிகாரத்தை அடிப்படையாக முன்னிலைப்படுத்திச் செய்தவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (4)

# ஜனநாயகத்தின் குரலை நசுக்கியுள்ளார் மைத்திரி

### முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

கொழும்பு, நவ. 3

கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் குரல்வளையை நெருக்கி அரசமைப்பை மீறி அரசதலைவர் மேற்கொண்டுள்ள செயற்பாடு மிகவும் பயங்கரமானது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாடியுள்ளது.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் 6 கட்சியினரும் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவுப் கக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் அரசமைப்புச் சட்டத்தை மீறி எடுக்கப்பட்டுள்ள இந்த நிலைமையை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம், கவலையடைகிறோம். எங்களுடைய நாடாளுமன்ற சிறப்புரிமைகளின் பிரகாரம் நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள் என்று சபாநாயகரிடம் கோருகிறோம்.

இதேவேளை, கலந்துரையாடலில் எமது நிலைப்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தினோம். தேவையான பெரும்பான்மைக்கு அதிகமாகவே எங்களிடம் உள்ளது என்பதையும் தெளிவுப்படுத்தினோம்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏலத்தில் விடப்பட்டுள்ளனர். எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து சபாநாயகர் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும். தற்போதைய நிலைமை மிகவும் பயங்கரமானது என்பதுடன், ஊழல் மிக்கது.

அரசமைப்பை மீறி எடுத்துள்ள தீர்மானத்தால் நாடு நிலையற்றுள்ளது. கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் ஒற்றுமையாக உள்ளோம். இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தி ஜனநாயகம், ஊடகசுதந்திரம் மற்றும் நல்லிணக்கம், அபிவிருத்தி என்பவற்றை நாங்கள் உறுதிப்படுத்தியிருந்தோம் - என்றார். (4)

# மக்கள் ஆணைக்கு எதிராக செயற்பட்டுள்ளார் மைத்திரி

### *ரிசாத் எம்.பி. ஆவேசம்*

கொழும்பு, நவ. 3

மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராகச் அரசதலைவர் செயற்பட்டுள்ளார். நாடாளுமன்றில் அவர் முன்னெடுக்கும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயற்படும் என்று அதன் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் 6 கட்சியினரும் நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினர். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தை விரும்பும் கட்சி. முஸ்லிம் கட்சிகளுக்கென இந்த நாட்டில் தனி வரலாறு உள்ளது, காட்டிக்கொடுக்காது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்துக்கு எதிராகவும், மக்கள் அவருக்கு வழங்கிய ஆணைக்கு எதிராகவுமே செயற்பட்டுள்ளார். நாடாளுமன்றில் அரச தலைவர் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக நாங்கள் இருப்போம். ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவிக்குக் கொண்டு வருவதற்கான ஆதரவைத் தொடர்ந்து வழங்குவோம்.

எங்களுடன் பலர் பேச்சு நடத்தியிருந்தபோதும் ஒத்த கொள்கையில் நாங்கள் இருந்ததால் அவர்களால் எதனையும் சாதிக்க முடியாதுபோனது - என்றார். (4,10)

# இலங்கைக் குழப்பங்களில் சீனத் தலையீடு இருந்திருக்காது

## சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு,நவ.3

இலங்கையில் தற்போதைய அரசியல் நெருக்கடியில் சீனாவின் தலையீடு இருப்பதாகத் தெரியவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

"முன்னைய அரசும் சரி, தற்போதைய அரசும் சரி, சீனாவுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தன.

பல்வேறு திட்டங்களில் கூட்டு அரசு சீனாவுடன் இணைந்து பணியாற்றியது. சீனாவுடன் பொருளாதார உடன்பாடுகளிலும் கையெழுத்திட்டது.

எனினும், சில அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் சிலருடன் தனிப்பட்ட உறவுகளை வைத்திருக்கக் கூடும்.

விஜேதாச ராஜபக்ச தொடர்பாக, நான் முன்னர் கூறியது, இப்போது உண்மை என்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

அவர், அவன்ட் கார்ட் வழக்கை இல்லாமல் செய்வதற்கு இரகசிய சதியில் ஈடுபட்டுள்ளார் என்று நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினேன். மகரகமவில் அதனைக் கூறி, மக்களிடமும் அவருக்கு வாக்களிக்க வேண்டாம், அவரது இதயம் மகிந்தவிடம் இருக்கிறது என்று கூறினேன். அப்போது நான் சொன்னது இப்போது உண்மை என்றாகி விட்டது.

வடக்குகிழக்கை இணைக்க விடமாட்டேன் என்று இலங்கை அரச த்லைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார். அதற்கான எந்த நகர்வும் மேற்கொள்ளப்படவில்லை. அது பற்றி யாரும் பேசவும் இல்லை" என்றார்.

# பதவிக்கான அதிகாரங்கள் ரணிலிடமே இருக்கின்றன

## நாடாளுமன்று கூடினால் அவரே தலைமை அமைச்சர் விக்கிரமபாகு கருணாரட்ன சுட்டிக்காட்டு

கொழும்பு,நவ.3

நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் போது தலைமை அமைச்சராக செல்லக் கூடிய அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே உள்ளது என்று நவசம்சமஜ கட்சியின் தலைவரும் பேராசிரியருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச தலைவர் புதிய அரசொன்றை அமைத்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காது அரசமைப்பை மீறி இவ்வாறு செயற்படுவதானது சனநாயகத்துக்கு விரோதமானது.

19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தன்னிச்சையாக தலைமை அமைச்சர் ஒருவரை நியமித்து செயற்பட முடியாது என்பதுடன், தலைமை அமைச்சரை நீக்கும் அதிகாரமும் அரச தலைவருக்கு கிடையாது. இவை அனைத்தையும் நாடாளுமன்றமே தீர்மானிக்கும். ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும்வரை ஆயிரக்கணக்கானவர்கள் அலரிமாளிகையில் இருப்பார்கள். உயிர் தியாகங்களைச் செய்யவும் அனைவரும் இங்கு தயாராகவே உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியினர் மாத்திரமல்ல ஜனநாயகத்தை நிலைநாட்ட அனைத்துக் கட்சியினரும் இங்கு முகாமிட்டுள்ளனர்.

சனநாயகத்திற்கான புரட்சியை நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். மக்களாட்சிக்கு எதிராக நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சரை நீக்காவிடின் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடிக்கும்.

சட்டவாட்சிக்கு எதிராக அரச தலைவரின் செயற்பாடுகள் இருக்குமாயின் அதற்கெதிராக போராடுவதற்கு எமக்கு உரிமையுள்ளது.

நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை பெற்றுள்ள தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார். எனவே, 5ஆம் அல்லது 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது தலைமை அமைச்சராக நாடாளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை ரணிலுக்கே உள்ளது. அதன் பின்னர்தான் அரச தலைவரால் முன்மொழியப்பட்டுள்ள புதிய தலைமை அமைச்சர் தொடர்பில் நாடாளுமன்றில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது சபையில் தலைமை அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ரணிலுடைய பதவிகளும் விரைவில் பறிபோகுமாம்

## ஆருடம் கூறுகின்றார் அளுத்கமகே

கொழும்பு,நவ.3

ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து தலைமை அமைச்சுப் பதவி பறிபோனதை போன்று எதிர்க்கட்சி தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவிகளும் பறிபோகும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.


பத்தரமுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத கட்சியின் ஏராளமான உறுப்பினர்க்ள் எதிர்காலத்தில் பணம், சலுகைகள் வழங்கப்படாமலேயே அரசுடன் இணைந்துகொள்ளவிரும்புவார்கள்

**16 ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடும்**

நாடாளுமன்றம் எதிர்வரும் 16ஆம் திகதியே கூட்டப்படும்.

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றம் எதிர்வரும் 16ஆம் திகதியே கூடும் என்று அறிவித்திருந்தார். அதில் எந்த மாற்றமும் இல்லை. நாடாளுமன்றம் நாளை மறுதினம் கூட்டப்படும் என்று மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். ஆனால் அவர், அதற்குச் சாத்தியம் உள்ளது என்ற அடிப்படையில் தான் அப்படிக் கூறினார்' எனவும் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (5)




# நாடாளுமன்றத்தை உடன் கூட்டவும்

## விரிவுரையாளர்கள் கோரிக்கை

நாட்டில் ஜனநாயகத்திற்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான பிரச்சினை கிடையாது.

மகிந்த ராஜபக்ச எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளதாக தன்னிடம் அரச தலைவர் தெரிவித்ததாக நாட்டு மக்களுக்கு தெரிவித்துள்ளார். ஆனால் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு தெரிவித்ததாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். எமக்கு 5, 7 ஆம் திகதிகளோ நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய தேவையில்லை. நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி நாட்டில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை உடனடியாக தீர்க்கவேண்டும் என்றனர்.

# முறைகேடாக அரச சொத்தை பயன்படுத்துகின்றார் ரணில்

## சாடுகின்றார் சு.க. அமைப்பாளர்

கொழும்பு,நவ.3

ரணில் விக்ரமசிங்க அரச சொத்துக்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி வருகின்றமையினால் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் அவரை உடனடியாக கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் தெரிவித்தார்.



ஹட்டன் சிறிலங்கா சுதந்திர கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்சவை இந்த நாட்டின் தலைமை அமைச்சராக நியமித்து "மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர்" என முழு நாட்டுக்கும் வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவற்றைப் பொருட்படுத்தாது அலரிமாளிகையை தமது கைக்குள் வைத்துக்கொண்டு அதிகார முறைகேடு செய்து அரசசொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தி வருகிறார். எனவே அவரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரச தலைவர், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவை கேட்டுக்கொள்கின்றேன்.

ரணில் விக்ரமசிங்க, அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவையும் கொலை செய்வதற்கான திட்டங்களை தீட்டியுள்ளார் என்பது இன்று அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் பல்வேறு குற்றச் செயல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க உறுதுணையாக இருந்ததால் அவரை உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்.

இதே நேரம் தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்போது உருவாகியுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் வடக்கு மக்களின் உரிமையையும் அபிவிருத்திகளையும் வென்றெடுக்க முடியும். எனவே சம்பந்தன் இந்த நிலைமையை கருத்தில் கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என்றார்.

# அட்மிரல் ரவீந்திரவை கைது செய்ய உத்தரவு

கொழும்பு,நவ.3

**பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்னவை கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை முதன்மை நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது.**

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கின் சந்தேகநபரான முன்னாள் லெப்டினன்ட் கமான்டர் பிரசாத் ஹெட்டியராட்சிக்கு, மறைந்திருக்க உதவிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான வழக்கு நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தியபோதே நீதிபதி ரங்க திஸாநாயக்க எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் ரவீந்திர விஜேகுணரட்னவை கைது செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## உள்ளக விவகாரங்களில் பிரிட்டன் தலையிடக்கூடாது

*சீறுகிறது சிங்கள ராவய*


கொழும்பு, நவ. 3

பிரிட்டனின் அதிகாரத்துக்கு உட்பட்டுச் செயற்படுவதற்கு இலங்கை, அந்த நாட்டின் காலனித்துவ நாடு கிடையாது. அவர்கள் இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளவேண்டும். மீறினால் விளைவுகள் விபரீதமாகும். இவ்வாறு சிங்களராவய அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரங்களில் பிரிட்டன் தலையீடு செய்யக் கூடாது என்று தெரிவித்து கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்தில் சிங்கள ராவய அமைப்பு மனுக் கொடுத்திருந்தது. இது தொடர்பில் அந்த அமைப்பின் பொதுச் செயலர் மாகல கந்தே சுதந்த தேரர் தெரிவித்ததாவது,

இலங்கை சுயாதீனமான நாடு. இலங்கை விவகாரங்களில் தலையிடுவதற்கு பிரிட்டனுக்கு எந்த முகாந்திரமும் இல்லை. மைத்திரிபால எடுத்த தீர்மானம் அரசமைப்புக்கு அமைவானதே. இலங்கை உள்விவகாரத்தில் மேற்கு நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தால், அடுத்த கட்டத்துக்குச் சென்று நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டோம் - என்றார். (5.61)

## விமல் வழக்கிலிருந்து விலகினார் நீதிபதி



கொழும்பு,நவ.3

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்சவுக்கு எதிரான .வழக்கை தான் விசாரிப்பது பொருத்தமற்றது என கூறியுள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி, அந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யாந்துடுவவுக்கு பரிந்துரைத்துள்ளார்.

விமல் வீரவன்ச அமைச்சராக பதவி வகித்த காலத்தில் தனது சொத்துக்கள் மற்றும் வருமானத்தில் சம்பாதிக்க முடியாத, அளவிலான 75 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான பணம் மற்றும் சொத்துக்களை சம்பாதித்தமை தொடர்பான வழக்கையே வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

விக்கும் களுவாராச்சி ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான ஆணைக்குழுவின் உறுப்பினராக கடமையாற்றியதால், தான் இந்த வழக்கை விசாரிப்பது பொருத்தமற்றது என கூறி வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு பரிந்துரைத்துள்ளார்.

## சிறுபான்மைக் கட்சிகளாலேயே ரணில் ஆட்சியைப் பெறமுடியும்

*மனோ கணேசன் சுட்டிக்காட்டு*

கொழும்பு,நவ.3

சவாலில் வெற்றி பெற்று, மீண்டும் ரணில் அரசு உருவாகுமனால், அதற்கு முதன்மைக் காரணம் ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய மூன்று சிறுபான்மை கட்சிகளே.

நாங்கள் தடம் மாறி இருந்தோமானால், இந்நேரம் நிலைமை தலைகீழாக மாறி இருக்கும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மட்டக்குளியில் நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்கள் சிறுபான்மை கட்சிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து, பதவி கொடுத்து வாங்க எவ்வளவோ முயற்சிகள் நடந்தாலும் அவற்றை நாம் பொறுமையுடன் சமாளித்தோம்.

மிகப்பெரும் பேரங்களை பெரிய மனிதர்களே நேரடியாகப் பேசினார்கள். எனினும் நாம் விலை போகவில்லை.

இதுவரை கிடைத்துள்ள தகவலின்படி, மகிந்த அணிக்கு தாவியுள்ளவர்கள், ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே.

ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள சிறுபான்மை கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை பேரங்களை பேசி சலசலப்புகளை ஏற்படுத்த மாற்று அணி முயன்றாலும், தலைமைகளது நிர்வாகத்தால், அந்த முயற்சிகள் பிசுபிசுத்து போயுள்ளது.

மகிந்த ராஜபக்ச தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பீடம் ஏறுவது என்பது வேறு. ஆனால், நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு ஆட்சியை கலைத்து, தலைமை அமைச்சரையும், அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்து ஆட்சியை கைப்பற்றுவது முறைக்கேடான செயலாகும். இது இந்நாட்டு ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும். இதற்கு நாம் துணை போக முடியாது என நாம் முடிவு செய்தோம்.

எமது பங்களிப்பு இல்லாவிட்டால், ஐக்கிய தேசிய கட்சி இன்னமமும் பலவீனமடைந்து இருக்கும். இதையே ஐதேக தலைமைக்கும் நாம் அறிவித்துள்ளோம். அவர்களும் இதை இன்று புரிந்துக்கொண்டுள்ளார்கள்.

எமது கூட்டு முயற்சி வெற்றி பெற்று நாம் அடுத்த வாரம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம் என்றார்.

## ஓய்வு மண்டபம் திறப்பு



கொழும்பு,நவ.3

சோமாவதி புண்ணிய பூமியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடி ஓய்வு மண்டபத்தை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று திறந்து வைத்தார்.

சோமாவதி புண்ணிய பூமியில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரும் மகா சங்கத்தினர் மற்றும் பக்தர்களுக்குத் தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்த ஓய்வு மண்டபம் அமைக்கப்பட்டது.

சோமாவதி விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய பஹமுனே சிறி சுமங்கல நாயக்க தேரர் சமய கிரியைகளை நடத்தி அரச தலைவருக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் இந்த ஓய்வு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சிறிபால கம்லத் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## காமினி செனரத் உள்ளிட்ட 4 பேருக்கு எதிரான வழக்கு: பிரதிவாதிகளின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,நவ.3

முன்னாள் அரச தலைவரின் அலுவலக பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட 4 பேருக்கு எதிரான வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு, பிரதிவாதிகள் சார்பாக மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை மனு மீதான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வழக்கின் சாட்சிகளின் விசாரணைகளை எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து நடத்துவதற்கு நீதிமன்ற குழாம் தீர்மானித்திருந்தது. லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் நிதி மோசடி தொடர்பிலேயே காமினி செனரத் உள்ளிட்ட 4 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 1000 ரூபா கிடைக்காவிடின் பதவியைத் தூக்கி எறிவேன்

*கூறுகின்றார் ஆறுமுகன் தொண்டமான்*

கொழும்பு,நவ.3

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை பெற்றுக்கொடுக்காவிடின் அமைச்சுப் பதவியை தூக்கி எறிந்துவிட்டு மக்களோடு மக்களாக போராடுவேன் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.



22 பெருந்தோட்டக்கம்பனிகளுடன் தீபாவளி முற்பணம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஒரு கம்பனி மாத்திரம் தீபாவளி முற்பணம் வழங்குவதற்கு இணங்கியுள்ளது. ஏனையக் கம்பனிகள் அரசு இரண்டாயிரம் ரூபாவை தேயிலைச் சபையினூடாக வழங்கினால், தாங்கள் 8 ஆயிரம் ரூபாவை வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தன

தொழிலாளர்கள் தங்களது கடமையை சரியாகச் செய்கிறார்கள், ஆனால் கம்பனிகள் இப்படி தீபாவளி முற்பணம் கடன் வாங்கித் தர வேண்டும் என்கிற அவசியமிருந்தால், கம்பனிகளை அரசிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும்.

ஆயிரம் ரூபாய் கிடைக்கும் வரையில் முழுமையான போராட்டத்தை முன்னெடுக்கவே நாம் தீர்மானித்துள்ளோம். தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்கப்போவதாக உறுதியளித்துள்ளார்.


அதனால் தான் தொடர்ந்து பதவியில் நீடித்து வருகிறேன். புதிய அரசிலும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தலையிட்டு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்றால் தற்போதுள்ள அமைச்சுப் பதவியையும் தூக்கியெறிவேன் என்றார். (10)

## 25 ஹெக்ரேயர் நிலப்பரப்பில்

# யாழ். குடாநாட்டில் இம்முறை பெரிய வெங்காயம் செய்கை

**யாழ்ப்பாணம், நவ. 3**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்முறை பெரிய வெங்காயம் (பம்பாய்) பயிரிடப்படவுள்ளது. 25 வரையிலானஹெக்ரேயர்நிலப்பரப்பில் செய்கையாளர்கள்பெரியவெங்காயத்தைச் செய்கையிடவுள்ளனர் என்று மாவட்டவிவசாயத்திணைக்களம்தெரிவித்தது.**



தெல்லிப்பழை, கோப்பாய், கரவெட்டி போன்றபிரதேசங்களில்பெரியவெங்காயம் செய்கையிடப்படவுள்ளது. செய்கைக்குத் தேவையான விதைகளை விவசாயத் திணைக்களம் வழங்கவுள்ளது. அவற்றைப் பயன்படுத்திநாற்றுமேடைஅமைத்துஅதில் இருந்து முளைக்கும் பெரிய வெங்காய நாற்றுக்களை விவசாயிகள் நடுகைசெய்வதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

அராலியில் ஏற்கனவே பெரிய வெங்காயம்செய்கைபண்ணப்பட்டுஅந்த முயற்சி பெரும் வெற்றியளித்திருந்தது. அதைத் தொடர்ந்தே தற்போது இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.' (ம-17)

---



## விளக்கமறியல்

சாவகச்சேரி, நவ. 3

கசிப்பு உற்பத்திக்குப்பயன்படுத்தும்கோடாவைத்திருந்தநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்று.

சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி கிழக்குப் பகுதியில் உள்ள பற்றைப் பகுதியில் கடந்தஞாயிற்றுக்கிழமைநடத்தியதிடீர்சோதனையின்போது பற்றையின் மறைவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட கெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களைக்கைதுசெய்ததுடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும், உற்பத்திசெய்யப்பட்ட 18ஆயிரத்து750மில்லிலீற்றர் கசிப்பினையும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் 75 லீற்றர் கோடாவையும் கைப்பற்றியிருந்தனர். 18 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்று ஒருவர் மீதும் 75 லீற்றர் கோடா வைத்திருந்தார்என்றுமற்றொருவர்மீதும் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம்விசாரணைக்குஎடுக்கப்பட்டன. கசிப்பு வைத்திருந்த இளைஞரை பிணையில் செல்ல அனுமதித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, கோடா வைத்திருந்த இளைஞரை எதிர்வரும் 13ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

---

# இலக்கைநோக்கிச்செயற்பட்டால் நிச்சயம் அது வெற்றியைத் தரும்

### தென்மராட்சி கல்வி வலய, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரேமதாஸ் தெரிவிப்பு

கொடிகாமம், நவ. 3

இலக்கைநோக்கியசிந்தனையுடன்எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொண்டால்நிச்சயம்அதுவெற்றியையேதரும். எமது பெற்றோர்களால் சொல்லித் தரப்பட்ட மாதா, பிதா, குரு ஆகியோரின் அறிவுரையைக் கடைப்பிடித்து ஒழுகினால் இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும் என்றுதெரிவித்தார்தென்மராட்சிக்கல்வி வலய, கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ்.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின்பரிசில்நாள்நிகழ்வுநேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:



ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சிறு வயதில்வழங்கப்படும்அறிவுரைகள் நற்போதனைகள் அவர்களின் எதிர்காலவளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் போன்றோர் மாணவர்களுக்கு நல்ல உபதேசங்களைப் புகுத்த வேண்டும். எதிர்காலத்தில் என்ன நிலைக்கு வர வேண்டுமென்ற இலக்கைச் சிறு வயதிலேயே ஊட்ட வேண்டும். இன்றைய காலத்தில் பல குழந்தைகள் தமது நேரத்தில் கணிசமான அளவை அலைபேசிகளுடன்செலவிடுகின்றனர். வேண்டத்தாகாத, விரும்பத் தகாத ஒளிப்படங்கள், காணொலிகளை சிறுவர்களும் குழந்தைகளும் பார்க்கும் நிலையும்கூட ஏற்படலாம்.

இப்படியேசென்றால்இன்னும்பத்துவருடங்களின் பின்னர் இன்றும் மோசமான சமூகத்தை நாம் காண வேண்டியிருக்கும். இதற்குமுழுக்கமுழுக்கபெற்றோரே காரணமாக அமைகின்றனர். நல்லொழுக்கங்களை போதிக்கக் கூடிய நூல்களைவாங்கிக்கொடுத்துசிறுவர்களைப் பக்குவப்படுத்த பெற்றோர் முயற்சிக்கவேண்டும். வாசிப்பை நோக்கி சிறார்களை உந்தித் தள்ள வேண்டும். வாசிப்பு வாழ்க்கைக்கு இன்றியமையாதது - என்றார்.

இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிரதீபன், மதிப்புறு விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை சுகுணசோதி சின்னையா மற்றும்அயல்பாடசாலைஅதிபர்கள்ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-9,159)

---

## வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் 20 மில்லியனில் அபிவிருத்திகள்

வலி. தென்மேற்கு, நவ. 3

வலி. தென்மேற்குப்பிரதேசத்தில்தேசிய ஒருமைப்பாடு மற்றும்அரசகருமமொழிஅமைச்சின்நிதிஉதவியுடன் சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் பல அபிவிருத்தி வேலைகள்இடம்பெறவுள்ளன. இதற்கானசகலஒழுங்குகளையும் தவிசாளர் மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளில்வருமானம்குறைந்தசபைகளில்வலி. தென்மேற்குப் பிரதேச சபையும் ஒன்றாகும். இந்தப் பிரதேசத்தில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் மக்களின் தேவைகளை, அபிலாசைகளை நிறைவேற்ற முடியாத நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அவசரமான பலவேலைத்திட்டங்களைமேற்கொள்ளமுன்வந்துள்ள தவிசாளர்அ.ஜெபநேசன், அண்மையில்யாழ். குடாநாட்டுக்குவருகைதந்தமுன்னாள்அமைச்சர்மனோகணேசனைநேரில்சந்தித்துச்சபையின்நிலைப்பாடுகுறித்தும் மக்களின் எதிர்பார்ப்பு பற்றியும் எடுத்துக் கூறி நிதியுதவி வழங்குமாறு கோரியிருந்தார்.

இவரின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர், அபிவிருத்தி வேலைகளுக்காக 20 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தார். இந்த நிதியிலிருந்து பல வருடங்களாக மாதகலில் வாடகை வீட்டில் இயங்கி வரும்பண்டத்தரிப்புஉபஅலுவலகம்மாதகலில்உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் 10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. 5 மில்லியன்ரூபாசெலவில்வீதிகளுக்குமின்குமிழ்கள்பொருத்தப்படவுள்ளன. 5 மில்லியன் ரூபா செலவில் வீதிகள், சந்தைகள், மயானங்கள், தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள்ஆகியவற்றுக்குப்பெயர்ப்பலகைகளும் பிரதேசத்தின் எல்லைப் புறங்களில் எல்லைக் கல்லுகளும் அமைக்கப்படவுள்ளன. (ம-11)

---

## வயோதிபர்களைத் தாக்கி பணம், நகை கொள்ளை

### சுன்னாகத்தில் அட்டகாசம்

சுன்னாகத்தில், வயோதிபத் தம்பதியரைக் கடுமையாகத் தாக்கி வீட்டில் இருந்த நகை, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளன. முகத்தை மூடிக்கட்டியவாறு வாள்களுடன் வந்த குழுவினரே கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். சுன்னாகம், பெரியமடத்தடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனிமையில் வீட்டில் வசித்து வந்த முதியவர்களை அடித்து, அவர்களை மிரட்டிக் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டித் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் 15 பவுண் நகைகள், 89 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரிய வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

**சங்கானை**

கோவிலை உடைத்து அங்கிருந்த 3 பவுண் நகை மற்றும் பணம் திருடப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்கானைப் பகுதியில் உள்ள முத்துமாரி அம்மன் கோவிலிலேயே நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் பூசை வழிபாடுகள் நிறைவடைந்ததும் ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டன. நேற்றுக் காலை ஆலயத்துக்கு வந்தபோதே திருட்டு இடம்பெற்றது தெரியவந்தது என்று ஆலய் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டே திருட்டு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,26)

---

# கொலை செய்தமைக்காக இரண்டு பேருக்குத் தூக்கு

### வவுனியா மேல் நீதிமன்று நேற்றுத் தண்டனை விதிப்பு

வவுனியா, நவ.3

ஒருவரைத் தாக்கிக் கொலை செய்தமைக்காக இருவருக்கு வவுனியா மேல் நீதிமன்று நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்தது. மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் தூக்குத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.

2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முல்லைத்தீவில் அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றில் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது. அதில் இராசையா சுரேஸ் என்பவரைத் தாக்கிக் கொலை செய்தமைக்காகவே இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிவான் மன்றில் நடைபெற்று 2017ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. எதிரிகளுக்கு எதிராக குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வந்த நிலையில் தீர்ப்புக்காக நேற்றுத் திகதியிடப்பட்டிருந்தது.

வழக்கின் முதலாம் எதிரியான வள்ளிபுனத்தைச் சேர்ந்த காளிமுத்து சிவராசாவும், இரண்டாம் எதிரியான முனியாண்டி தயாபரனும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதால் நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டத்தரணி ஐ.எம்.எம். பாகில் வழக்கை நெறிப்படுத்தினார்.

இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றிருந்தது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய சசி மகேந்திரன் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்குக்காக நேற்று வவுனியா நீதிமன்றுக்கு வந்திருந்தார்.

(ற-110)

## பரிசளிப்பு நிகழ்வுகள்

**யாழ். மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி**
பருத்தித்துறை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 2018ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் பொ.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவுக்கு முதன்மை விருந்தினராக மருத்துவர் சிவபாலன் நிரோசன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் தம்பிராஜா சந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்**
தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் இரா ஶ்ரீநடராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர். ச.சுகிர்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்**
கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் கா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண பிராந்திய அலுவலக தேசிய சேமிப்பு வங்கி நிறைவேற்று அலுவலர் திருமதி மிதிலா மயூரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராக துசா பல்மூக்குக் கண்ணாடியக உரிமையாளரும் லயன்ஸ் கழக மாவட்ட தலைவருமான ரி.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**அன்பொளி கல்வியகம்**
அன்பொளி கல்வியகத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-159,9,108)

### யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய


# 7 உணவகங்களுக்கு சீல் வைத்தது மன்று

**வலி.தென்மேற்கு, நவ. 3**
**யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய ஏழு உணவகங்கள் சீல் வைத்து மூடப்பட்டன.**

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் யாழ். மாநகர சுகாதாரப் பரிசோதகர்களான சுரேஸ்குமார், பா.சஞ்ஜீவன் வண்ணார் பண்ணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகிய மூவரும் அண்மையில் குருநகர், வண்ணார் பண்ணை, யாழ். நகர் ஆகிய பகுதிகளிலுள்ள உணவகங்களை திடீர் சோதனைக்கு உட்படுத்திய போது சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் ஏழு உணவகங்கள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்தமை தெரியவந்தது.
இதையடுத்து அந்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏழு உணவகங்களின் உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து ஏழு பேருக்கும் ஒரு லட்சத்து 18 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்று கடைகளை மூடி 'சீல்' வைக்குமாறும் உத்தர விட்டது.
கடைகளின் நிலைப்பாடு குறித்து சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கை நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட பின்னர் உணவகங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.
(ம-115)

## ஆக்கப் பொருள் கண்காட்சி

கொடிகாமம், நவ. 3
கைதடி பிரதேசக் குடும்ப முன்பள்ளிகளின் ஆக்கப் பொருள் கண்காட்சி கைதடி பராசக்தி பாலர் பகல் இல்ல மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது. முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ச.அரியநாயகம், சிறப்பு விருந்தினராக கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, கவிராஜ் பயிற்சி பாடசாலையின் அதிபர் பா.டசீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-9,159)



## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 3
யாழ்ப்பாணம் தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் தந்தை செல்வா நற்பணி மன்றமும், கொழும்பு கொட்டாஞ்சேனை அரிமாக் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனையும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கலும் இன்று நடைபெறவுள்ளன. காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம-63)

## சுகாதார அமைச்சர் இல்லாதமையால் டெங்குப் பரிசோதனைகள் நிறுத்தம்!

தென்மராட்சி, நவ. 3
சுகாதார அமைச்சர் இன்மையால் நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற ஏற்பாடாகியிருந்த டெங்குப் பரிசோதனைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகால் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நேற்றும் நேற்றுமுன்தினமும் நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. திடீரென சுகாதார அமைச்சர் மாற்றப்பட்டதால் ஏற்பட்ட குழப்பநிலை தொடர்வதால் டெங்கு பரிசோதனைகள் நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
டெங்குப் பரிசோதனையில் ஈடுபடுபவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு சுகாதார அமைச்சரின் அனுமதி தேவையென்பதால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் காரணமாக டெங்குப் பரிசோதனைகள் நடத்த முடியவில்லையென சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ம-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 3
திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய "பலன் தரும் பெயர் சூட்டுவோம்" நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.
கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)




*யாழ்ப்பாணம் - மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஒளிவிழா நேற்றுமுன்தினம் நண்பகல் 11 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் கிறிஸ்தவ மன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-70)*


வடமராட்சி புலோலி வடமேற்கு காந்தியூர் ஞானவைரவர் ஆலயத்தின் குடமுழுக்கு அண்மையில் நடைபெற்றது. (ம)



## மாணவர்கள் மதிப்புறுத்தல் நிகழ்வு

கொடிகாமம், நவ. 3
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து இந்த வருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் காலை 9 மணி முதல் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் க.தர்மலிங்கம், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், வலயக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
198 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி நவாஸ்கன் நதி நிகழ்வில் வைத்து அனைவராலும் சிறப்பான முறையில் பாராட்டப்பட்டார். (ம-9,159)





விசுவமடு தொட்டியடி கிராமத்தில் கிராம அலுவலரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக கிராம மக்கள் ஒன்றாக இணைந்து பொது இடங்கள் மற்றும் வீதிகளில் இறங்கித் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (222)

## வெடுக்குநாரி மலை ஆதிலிங்கேஸ்வரர்

# ஆலயத்தைச் சீரமைக்க நிதி கிடைத்தும் அனுமதி இன்மையால் பணிகள் முடக்கம்

**முல்லைத்தீவு,நவ.3**

**நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்லும் பிரதான பாதையை சீரமைக்க நிதி அனுமதி கிடைத்தும், தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி இன்மையால் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

நெடுங்கேணி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாடுகள் தடுக்கப்பட்ட நிலையில் ,பெரும் சர்ச்சை எழுந்து பின்னர் வழிபாட்டிற்கு அனுமதிக்கப் பட்டபோதும், அந்த ஆலயத்தில் எந்தப் பணியினையும் மேற்கொள்ளவிடாது தொல்பொருள் திணைக்களத்தினர் தடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதி முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில் ஆலயத்தின் அண்மித்த பகுதி அன்றி அயற்பிரதேச வீதியினை சீர் செய்வதற்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராயா 15 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

இவ்வாறு ஒதுக்கிய நிதியில் குறித்த பணியின் ஆரம்பப்பணிகளை முன்னெடுக்க முயன்றவேளையில், தற்போது மீண்டும் தடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வருட இறுதிக்குள் குறித்த பணியினை நிறைவு செய்ய முடியாதுவிடின், ஒதுக்கிய நிதி மீளச் செல்லும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆலயத்திற்கான ஏணிப்படிகள் தயார் செய்ய முயன்ற நிலையில் பொலிஸாரினால் தடுக்கப்பட்டு, பின்னர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் அனுமதியின் பேரில், ஏணி தயார் செய்யப்பட்டபோதும் இதுவரை பொருத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஆலயத்திற்கான சீரமைப்பு பணிகளை நிறுத்தியிருந்த நிலையில் தற்போது ஆலயத்திற்கான வீதியினையும் அமைக்க முடியாது தடை விதிக்கப்படுவதாகக் கூறப்படு கின்றது. (105)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளால் தொல்லை

முல்லைத்தீவு,நவ.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்துஜயன்கட்டு ,பனிக்கன் குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் யானைகளின் வருகையால் தமதுஜீவனோபாயத் தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் யானைவேலிகளை உடன் அமைத்துத்தர வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மேலும் பனிக்கன்குளம், மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தில் மக்கள்குடியேறி வாழமுடியாதுள்ளதாகவும் தெரிவித்தமக்கள் பனிக்கன்குளத்தின் கீழ் உள்ளகிழவன்குளம், கற்குவாரி ஆகிய குளங்களின் கீழ்ப்பயிர்களை மேற்கொள்ள முடியாமல் இருப்பதால் உடன் யானைவேலிகளை அமைத்துத்தருமாறு அப்பிரதேச மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (500)

## ஈருருளி வழங்கல்




வவுனியா,நவ.3

இலங்கைப் புன்னகை அமைப்பின் நிர்வாகத்தினர், வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன் ஆகியோரால் நேற்றுமுன்தினம் ஈருருளி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

வெளிச்சம் அறக்கட்டளையின் கோரிக்கைக்கு அமைவாக "புன்னகை "அமைப்பின் ஏற்பாட்டில் கனடா வாழ் முருகதாஸ் பாமா தம்பதிகளின் மகள் மு.அக்சினியின் 10 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மிக வறிய நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவரும் சமளங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் ஆ.டினுஷாவிற்கு செட்டிகுளம் பிரதேச செயலர் க. சிவகரன் மற்றும் இலங்கைப் புன்னகை அமைப்பின் நிர்வாகத்தினர் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் ஆகியோரால் நேற்றுமுன்தினம் ஈருருளி வழங்கி வைக்கப்பட்டது. (110)

★ ★ ★

புதுக்குடியிருப்பு,நவ .2

புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவர்கள் இருவருக்கு ஈருருளிகள் வழங்கிவைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பழைய மாணவனும் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருபவருமான மோகன்ராஜின் மகளின் பிறந்த நாளினை முன்னிட்டு, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இரண்டு மாணவர்களுக்கு நேற்று ஈருருளிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உதவிச் செயலர் ஜெனமேஜனந்தின் ஏற்பாட்டில் இந்த உதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (ரி -3)

## பூந்தோட்டத்தில் மரநடுகை விழா

வவுனியா, நவ. 3

விவசாய அமைச்சின் "வனரோபா" வேலைத் திட்டத்தின் கீழ் மரநடுகை விழா வவுனியா பூந்தோட்டத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பிரதே செயலர் கா.உதயராசா கலந்து கொண்டார். அவர் மர நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

முன்னதாக பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் இது தொடர்பான விளக்க உரையாடல் நடைபெற்றிருந்தது.

மரநடுகையின் முக்கியத்துவம் தொடர்பாகப் பிரதேச செயலர் விளக்கமளித்தார்.

பின்னர் பூந்தோட்டம் நரசிங்கர் வீதியில் மர நடுகை ஆரம்பித்து வைக்கபட்டது.

நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான த.பரதலிங்கம், பாலசிங்கம் பிரசன்னா, பூந்தோட்டம் மகா வித்தியாலய அதிபர் திருமதி கி.நந்தபாலன், தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பாளர் ந.கருணாநிதி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், பாடசாலை மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (4,110)






## பரிசில் நாள் நிகழ்வு

கொடிகாமம், நவ. 3

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தின் பரிசில் நாள்நிகழ்வுநேற்றுமுன்தினம்பாடசாலையின்முதன்மை மண்டபத்தில் காலை 9 மணியளவில் அதிபர் க. இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் சி.திரவியம், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி சிற்றி மெடிக்கல் உரிமையாளர் சு.நகுலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம்சென்றமாணவர்களும், ஜி.சி.ஈ சாதாரணதரப்பரீட்சையில்சிறந்தபெறுபேற்றைபெற்றவர்களும்மதிப்பளிக்கப்பட்டதுடன்பதக்கமும்நினைவுச்சின்னமும்வழங்கப்பட்டன. (159)



## வெடிக்காத நிலையில் வெடிபொருள் மீட்பு

வவுனியா,நவ.3

தனியார் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் வெடி பொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரமனாளங்குளம் நீலியாமோட்டை பகுதியில் உள்ளகாணியைஅதன்உரிமையாளர்நேற்றுமுன்தினம் நிலத்தை பண்படுத்தும் போது அப்பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டு இருப்பதனை அவதானித்துள்ளார். இதனைய்டுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பறயனாளங்குளம் பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டதுடன் அவதானிக்கபட்ட ஒருவெடிபொருளை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (110)

## பல குற்றங்களுடன் தொடர்புடையவர் கைது

கிளிநொச்சி, நவ.3

பல்வேறுகுற்றச்சாட்டுகள் தொடர்பாக தேடப்பட்ட நபரை கைது செய்துள்ளதாகப் பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, செம்பியன்பற்று மருதங்கேணிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், தொடர்சியாக பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பாகத் தேப்பட்டு வந்த நிலையில், கடந்த இருதினங்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மீண்டும் தப்பிச் செல்ல முயற்சித்தபோதும், பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இவருக்கு எதிராக வாளினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டு, மோதல்களில் ஈடுபட்ட முறைப்பாடு, பொதுமக்களின் வேலிகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடு ஆகியன காணப்படுவதாகவும், குறித்த நபர் உடமையில் வைத்திருந்த வாள் ஏற்கனவே மீட்கப்பட்டு ,நீதிமன்றில் பாரப்படுத்தபட்டதாகவும், அப்போதே அவர் தப்பிச் சென்றிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றர்.

கைதுசெய்யப்பட்டநபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது, சந்தேக நபரை 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. குறித்த நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றிலும் வழக்குகள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (6)



## கட்டுத்துவக்குடன் விசுவமடுவில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, நவ. 3
கட்டுத்துவக்குடன் மிருக வேட்டைக்குச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விசுவமடு இளங்கோபுரம் பகுதியைச் சேர்ந்த குடும்பத் தலைவரே கடந்த புதன்கிழமை கைதானார். அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (4,ரி3)

## மரித்த ஆன்மாக்களின் நினைவு நாள்

மன்னார், நவ. 3
மரித்த ஆன்மாக்களின் நினைவு நாள் நாட்டின் பல பாகங்களிலும் நேற்று நினைவு கூறப்பட்டது.
மன்னார் மாவட்டத்திலும் மரித்த ஆன்மாக்களின் நினைவு நாள் நினைவு கூறப்பட்டுள்ளது.
பேசாலை புனித வெற்றி அன்னை கத்தோலிக்க சேமக்காலையில் பங்குத் தந்தை அருட்பணி பசில் கிளைன் அடிகளார் தலைமையில் பங்கு தந்தையும் சட்ட முதன்மை குருவுமான அருட்பணி ச. தேவராஜா கொடுதோர் ஆகியோர் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.
காலை 6 15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட திருப்பலியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு மரித்த ஆன்மாக்களை நினைவு கூர்ந்தனர்.
இதேவேளை மன்னார் மாவட்டத்தில் மரித்த ஆன்மாக்கள் அடக்கம் செய்யப்பட்ட பல்வேறு அடக்க ஸ்தலங்களில் நினைவு கூறப்பட்டது. (4,56,60)

மிளகாய்ச் செய்கைக்கான

# தூவல் நீர்ப் பாசனக் கருவியை மானிய முறையில் பெறுங்கள்

### இதுவரை 100 பேர் பெற்றுள்ளனர்

யாழ்ப்பாணம், நவ. 3
அரசதலைவர் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மிளகாய்ச் செய்கைக்கான தூவல் நீர்ப் பாசனக்கருவியை மானிய முறையில் பெற்றுக்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுபற்றிமேலும்தெரிவிக்கப்பட்டதாவது, அரசதலைவர் செயலகத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கைக்கான தூவல் நீர்ப் பாசனக் கருவிகள் 30 வீத மானிய அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் யாழ்ப்பாணமாவட்டத்தில் 200 பயனாளிகள்பயன்பெறும்வகையில்இந்தமானிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இதுவரை100 பயனாளிகளே மானிய அடிப்படையில்மிளகாய்ச்செய்கைக்கானதூவல் நீர்ப்பாசனக் கருவியைப் பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளார்கள். மிகுதி 100 கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் முன்வரவேண்டும். மிளகாய்ச் செய்கைக்கான விதைகளை 50 வீத மானிய அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் திட்டம் இருப்பதால் மிளகாய்ச்செய்கைக்குநீரைச்சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய தூவல்,நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்துவது சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## குடும்பத் தலைவருக்கு இரவில் வாள்வெட்டு

கத்திவெட்டுக் காயங்களுக்கு இலக்கான குடும்பத் தலைவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கெற்பேலியில் நேற்றுமுன்தினமிரவு சம்பவம் இடம்பெற்றுள்ளது.
தனித்துச்சென்ற அவரை வழிமறித்த ஒருவர் கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளார். காயங்களுக்கு இலக்கான அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)



## சிறிசுப்பிரமணிய வித்தியில் நவீன திறன்வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 3
புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட அதிநவீன திறன்வகுப்பறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வு தரம் 2 மாணவி செல்வி தோ. அன்பரசி தலைமையில் நடைபெற்றது.
ரட்ணம் பவுண்டேசன் (ஐக்கிய ராட்சியம்) நிதியுதவியில் அமைக்கப்பட்ட அதிநவீன திறன்வகுப்பறையை பவுண்டேசன் நிறுவுநர்கள் கலாநிதி இ. நித்தியானந்தன், திருமதி சறோஜினிதேவி நித்தியானந்தன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. சுப்பிரமணியேஸ்வரன் ஆசிரிய ஆலோசகர் கு. ரகு உதயகுமார் மற்றும் கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர்.
இந்த வகுப்பறையானது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்ட அடுத்த தலைமுறை திறன்வகுப்பறை. ரட்ணம் பவுண்டேசன் முல்லைத்தீவு வலய பாடசாலைக்கு வழங்கும் இரண்டாவது திறன்வகுப்பறை இது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## பாடசாலை மாணவர்களுக்கு வர்ணச்சீருடைகள் வழங்கல்




வவுனியா, நவ. 3
வவுனியா புதுக்குளம் பாடசாலை மாணவர்களுக்குக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான வர்ணச்சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.
தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் அவற்றை நேற்று வழங்கினார்.
புலம் பெயர்ந்து நெதர்லாந்தில் வசித்து வரும் தாயக உறவான சுசீலனின் நிதி உதவியில் சுசீலன் பவுண்டேசனின் மீள் வாழ்வளிக்கும் திட்டத்தின் ஊடாக சீருடைகள் வழங்கப்பட்டன.
புதுக்குளம் மகாவித்தியாயலம் எதிர் கோவில்குளம் இந்துக்கல்லூரி பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் புதுக்குளம் பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைவாக வர்ணச்சீருடைகள் பாடசாலையின் அதிபரிடம் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரால் கையளிக்கப்பட்டுள்ளன. (4)





முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. பெருங்கருவேப்ப முறிப்புக் குளம் வான்பாய்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,500)



## நெடுங்கேணியில் சிறப்புற்ற முதியோர் சிறுவர் நிகழ்வுகள்

வவுனியா, நவ. 3
நெடுங்கேணி மாறயிலுப்பை சமுர்த்தி சங்கத்தினரால் முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வு கடந்த புதன்கிழமை மாறயிலுப்பை அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.
சமுர்த்திச் சங்கத் தலைவர் சுகுந்தன் கருணா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்
முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினர் பாரி, பிரதேச சபை உறுப்பினர் பார்த்திபன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாகப் பாடசாலையின் அதிபர் பாக்கியநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர் சிவநேசன், மீள்குடியேற்ற பிரதிஅமைச்சர் காதர் மஸ்தானின் பிரத்தியேகச் செயலாளர் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் முதியோர் மற்றும் சிறுவர்கள் விருந்தினர்களால் மதிப்பளிக்கப்பட்டனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (4,110)

குடத்தனைச் சம்பவம்:

## சிகிச்சை பயனளிக்காது மற்றையவரும் இறந்தார்

வடமராட்சி குடத்தனையில் வீடுகளுக்குள் அதிகாலை புகுந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை மாளிகைத்திடல் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இரண்டு வீடுகளுக்குள் புகுந்த தாக்குதலாளி உறக்கத்தில் இருந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த கணவன் மனைவி மீது தாக்குதல் நடத்தினார். ஒருவர் அன்று உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்திருந்தனர்.

படுகாயமடைந்திருந்தவர்களில் ஜெயஸ்ரீ நிர்மலாதேவி (வயது - 53) என்பவரே சிகிச்சை பயனளிக்காது மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். சம்பவ தினத்தன்று உயிரிழந்த பரம்சோதி ஜெயஸ்ரீ (வயது - 66) என்பவரின் மனைவியே நேற்று உயிரிழந்தார்.

எம். சித்திரவடிவேல் (வயது - 50). அவரது மனைவி சி. ஜெயந்தி (வயது -40) ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த தர்சன் என்பவரே தாக்குதல் மேற்கொண்டார் என்றும், தாக்குதலுக்கு இலக்கான சித்திரவடிவேலின் மகளைத் திருமணம் முடித்து அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது எனவும். குறித்த தாக்குதலாளி போதைப் பாவனைக்கு அடிமையானவர் என்பதால் வீட்டில் குடும்பத் தகராறுகள் ஏற்படுவதாகவும் அயலவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்ட தர்சன் சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

சம்பவ தினத்தன்று கசிப்பு அருந்தி போதையில் இருந்தேன். போதையிலேயே தாக்குதல் நடத்தினேன் என்று சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை பொலிஸார் கடந்த புதன் கிழமை பருத்தித்துறை நீதிவான் மன்றில் சந்தேக நபரை முற்படுத்தினர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4,37,29,160)

குற்றம் பார்க்கில் சுற்றமில்லை

# பொதுக் கொள்கைகளை இயற்றிவிட்டு சிலருக்காக ஒதுங்குவது துரோகச்செயல்

முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 3

கட்சிகள் தமது கொள்கைகளில் திடமாக இருக்க வேண்டும். ஆனால் தேர்தல் என்று வந்தவுடன் ஒரே கொள்கைகளில் இருக்கும் கட்சிகள் தேர்தல் உடன்பாடுகளில் இறங்குவதில் பிழையில்லை என்றே நான் நினைக்கின்றேன். குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. எமது கொள்கைகள் மக்களுக்காக இயற்றப்பட்டவை. நாம் அவ்வாறான பொதுக் கொள்கைகளை இயற்றிவிட்டுச் சிலரின் முகங்கள் எமக்குப் பிடிக்கவில்லை என்று ஒதுங்கிச் செல்வது மக்களுக்குத் துரோகம் செய்யும் செயலாக முடியக் கூடும்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பும் வாரத்துக்கொரு கேள்வி பதிலில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

**கேள்வி:** ஒரு மக்கள் அரசியல் பேரியக்கத்தையும் ஒத்த கொள்கைகளையுடைய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றாகச் சேர்த்து, பயணிக்க வேண்டும் என்ற கருத்துகள் வலுவாகக் கூறப்பட்டுவரும் நிலையை இப்போது எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:** நாங்கள் யாவரும் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துகளும் இருக்க முடியாது. கொள்கை ரீதியாக நாம் பயணிக்க விரும்பினால் எம் கட்சிகளின் நலவுரித்து பின் ஆசனத்துக்குப் போகவேண்டிவரும்.

கட்சி நலன்களையும் எமது முன்னைய பின்னணிகளையும் மற்றையவர்களின் முன்னைய பின்னணிகளையும் கணக்கில் எடுத்து பயணிக்கத் தொடங்கினோமானால் எமது ஒற்றுமை குலைந்து விடும்.

ஒரே கொள்கைகள் உடைய சில கட்சிகள் தமது கட்சி நலன்கள் சார்ந்து வேற்றுமைப் படப் பார்க்கின்றன.

நான் மக்கள் இயக்கம் பற்றி குறிப்பிட்ட கருத்து தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்குவது என்பது அதிகாரம் அற்ற இயக்கத்தின் ஆதங்க வெளிப்பாடாக இருக்கும் என்று கூறியது தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது.

சாத்வீக அடிப்படையிலான மக்கள் இயக்கப் போராட்டங்கள் நாம் யாருக்கு எதிராக போராடுகின்றோமோ அவர்களின் "மனசாட்சியை " அசைத்துப்பார்ப்பதன் ஊடாக வெற்றி பெற எத்தனிப்பவையாகும். ஒத்துழையாமை இயங்கங்கள் மூலம் மிகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்கு சவால் இடுவதன் மூலம் வெற்றி பெற மேற்கொள்ளப்படுகின்றன. இவை இரண்டுமே சிங்கள அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பெருமளவில் பயன்படுத்தப்பட முடியாதவை என்பதையே வரலாற்றின் மூலம் நாம் பார்க்கின்றோம். அவர்கள் மனசாட்சி அசைந்து கொடுக்கப் போவதில்லை.

எமக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பாகுபாட்டு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் எமக்கான அதிகார பரவலாக்கம் வேண்டியும் நாம் அகிம்சை வழியில் கடந்த காலங்களில் முன்னெடுத்த போராட்டங்கள் சிங்கள ஆட்சியாளர்களின் அதிகாரத்தை ஆட்டம் காணச் செய்யவில்லை. மாறாக நாம் எதிர்பார்த்தவற்றை அடைய முடியாது போனதே வரலாறு. இதற்கு காரணம் எண்ணிக்கை அடிப்படையில் தமிழர்கள் மிகவும் குறைவாக இருப்பதே.

குறைந்த எண்ணிக்கையான மக்கள் சாத்வீக இயக்க போராட்டங்களின் மூலம் சிங்கள ஆட்சியாளர்களின் அதிகாரத்தை அசைக்க முடியாமல் போய்விட்டது.

இன்றைய காலகட்டத்தில் எமது இலக்குகளை அடைவதற்கு அரசியல் மற்றும் ராஜதந்திரப் போராட்டம் எமக்கு மிக அவசியமாக காணப்படுகின்றன. அதேசமயம் எமது மக்கள் மத்தியில் நான் முன்னர் குறிப்பிட்டவாறு, அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் சிந்தனையை எழுச்சி பெற வைப்பதற்கும், சந்ததிக்குப் பின் சந்ததியாக வெற்றிபெறும் வரை போராட்டத்தை முன்னெடுப்ப தற்கும், அரசியல் சமூக பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக எமது மக்களை வலுப்படுத்துவதற்கும், சிங்கள மக்கள் மத்தியில் எமது போராட்டம் பற்றிய நியாயத்தை, உண்மையை எடுத்துக் கூறுவதற்கும் மக்கள் போராட்டம் மிக மிக அவசியமாகின்றது.

தமிழ் மக்கள் கூட்டணி ஊடாக அரசியல் ராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை நான் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவை ஊடாக மக்கள் இயக்கப் போராட்டங்களிலும் ஈடுபடுவேன். நான் எனது உரையில் குறிப்பிட்டபடி பழைய குரோதங்கள் மற்றும் கசப்பான சம்பவங்களைப் புறந்தள்ளி கொள்கை அடிப்படையில் கட்சிகள் ஒன்றுசேர்ந்து செயற்படுவது அவசியம் என்பதே எனது விருப்பம் - என்றுள்ளது. (4)

# வேலணை செட்டிபுலம் பாடசாலைக்கு மாணவர்கள் நேற்றும் செல்லவில்லை!


அதிபர் தன்னிச்சையாகச் செயற்படுகிறாரென்று பெற்றோர் குற்றஞ்சாட்டி போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாணம் வேலணை செட்டிபுலம் அ.த.க பாடசாலைக்கு மாணவர்களைப் பெற்றோர்கள் நேற்றும் அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பாடசாலைச் சமூகத்தின் கருத்துக்களைச் செவிமடுக்காமல் தன்னிச்சையாகச் செயற்படுகிறார் ,என்று தெரிவித்தே மாணவர்களை அனுப்பவில்லை என்று பெற்றோர் கூறியுள்ளனர்.

இது தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்ததாவது.



பாடசாலை அதிபர் உணவு வழங்கல் மற்றும் கட்டட வேலைகள் போன்றவற்றில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கருத்துகளைக் கேட்காமல் முடிவெடுக்கிறார். இதனால் கணக்குகளில் தவறுகள் நடந்துள்ளன. தன்னிச்சையாக நிதியைக் கையாள்கிறார். கையொப்பம் இடுகிறார். பாடசாலைச் சமூகத்துக்கு உரிய மரியாதையை அவர் கொடுப்பதில்லை.

ஆகவே அதிபரை இடம்மாற்றும் வரையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டோம். பாடசாலை அலுவலகம் திறக்கப்பட்டுக் களவுகள் இடம்பெற்றுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் அதிபர் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

நேற்றும், நேற்றுமுன்தினமும் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லவில்லை. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துப் பாடசாலைச் சமூகத்தினர் வேலணை வலயக்கல்விப் பணிமனையில் குழுமி நின்றனர். ஆனால் அவர்களுக்கு உரிய பதில் வலயக் கல்வி அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பாடசாலை அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது.

நான் தன்னிச்சையாகச் செயற்படவில்லை. பல தடவைகள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டும் அவர்கள் வரவில்லை. அதனால் அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைகளை அதிபர் என்ற முறையில் நானே செய்தேன். இரண்டு நாள்களாகப் பாடசாலைக்குப் பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்பவில்லை. இதுதொடர்பில் வலயக் கல்விப் பணிமனைக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். ஒரு சிலரின் தனிப்பட்ட விரோதம் தற்போது கல்விச் சமூகத்தையே திசைதிருப்ப வைத்துள்ளது. பாடசாலை அலுவலகம் மற்றும் நூலகக் கதவுகள் உடைக்கப்பட்டு அசிங்கப்படுத்தப் பட்டிருந்தன. ஆகவே சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். நான் வெளியேறினால்தான் பாடசாலைக்குள் மாணவர்கள் கால் வைப்பார்கள் என்ற நிலை காணப்படுகிறது. ஆகவே இடம்மாற்றம் தொடர்பில் அதிகாரிகளுடன் கதைத்துள்ளேன் - என்றார். (4,7)




# போலி லேபிலுடன் தயாரிக்கப்பட்ட 6,000 குடிதண்ணீர்ப் போத்தல்கள்

மாநகர சுகாதாரத்துறை மடக்கியது

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போலி லேபல் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வந்ததாகக் கூறப்படும் 6 ஆயிரம் குடிதண்ணீர்ப் போத்தல்களை யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் திடீர் சோதனை மேற்கொண்டு அள்ளிச் சென்று நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இயங்கிய விநியோக வர்த்தக நிலையத்தின் மீது நேற்றுக் காலை சுகாதார உத்தியோகத்தர்கள் அதிரடிச் சோதனை நடத்தினர். இதன்போது குடிதண்ணீர்ப் போத்தலில் நிறுவன பதிவு இலக்கம் இன்றித் தயார் செய்யப்பட்ட நிலையில் ஓர் இலக்கமும் அதன்மேலே மற்றுமோர் போலி இலக்கமும் ஒட்டப்பட்டிருந்தமையும், மத்திய சுகாதார அமைச்சின் அனுமதிப் பதிவு இலக்கம் என்று தனியான சிறிய ஸ்ரிக்கர் அச்சிடப்பட்டே ஒட்டியுள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். வழக்கை ஆராய்ந்த நீதிவான் சி.சதீஸ்தரன், மாவட்டத்தின் விநியோகஸ்தரோடு முதன்மைச் சந்தேக நபருக்கு அழைப்பாணை அனுப்புமாறும் அதுவரை சான்றுப்பொருள்களை மன்றில் தடுத்துவைக்குமாறும் உத்தரவிட்டார். வழக்கு டிசெம்பர் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4,105)

# வவுனிக்குளம் நீர்ப்பாசன எல்லையின் கீழ் இந்த வருடம் 9, 632 ஏக்கரில் நெற்செய்கை

## பொறியியலாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், நவ. 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குட்பட்ட குளங்களின்கீழ் இந்த வருடமும் 9 ஆயிரத்து 632 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ். விகர்ணன் தெரிவித்துள்ளார்.

காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பித்துள்ளநிலையில்தற்போது நாடுமுழுவதும் கடும்மழைபெய்துவருகிறது. வடக்குமாகாணத்திலும்கடந்தமூன்றுநாள்களாகமழையுடன்கூடியகாலநிலை தொடர்கிறது. இந்த நிலையில் விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளனர்.

விவசாயிகள் மழைக்கு மத்தியிலும் வயல்களில்பராமரிப்புவேலைகளைமேற்கொள்கின்றனர்.

முல்லைத்தீவுமாட்டத்திலும்விதைப்புமும்முரமாகஇடம்பெற்றுவருகிறது. விதைப்புத் தொடர்பாகப் பொறியியலாளர் கருத்துத் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குட்பட்ட குளங்களின் கீழ் உள்ள வவுனிக்குளத்தின் கீழ் 5ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பிலும், அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 559 ஏக்கரிலும், கோட்டைகட்டிய குளத்தின் கீழ் 376 ஏக்கரிலும், தென்னியங்குளத்தின் கீழ்647 ஏக்கரிலும், மருதங்குளத்தின் கீழ் 213 ஏக்கரிலும் நெற்செய்கைமேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

ஐயன்கன் குளத்தின் கீழ் 891 ஏக்கரிலும், தேறாங்கண்டல்குளத்தின்கீழ்292ஏக்கரிலும், மல்லாவி குளத்தின் கீழ் 299 ஏக்கரிலும், கல்விளான் குளத்தின் கீழ் 496 ஏக்கரிலும், பழையமுறிகண்டி குளத்தின் கீழ் 359 ஏக்கரிலுமாக மொத்தம் 9ஆயிரத்து 632ஏக்கரில்காலபோகநெற்செய்கைமேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, ஏனைய சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள பயிர்ச் செய்கை நிலங்கள் மானாவாரி நிலங்கள் ஆகியவற்றிலும் விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (21)

# வெங்காயப் பிடிகளை காயவிட கொட்டில்கள்

## அமைக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்பு

சாவகச்சேரி, நவ. 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவோருக்கு வெங்காயப் பிடிகளைக் கட்டித் தொங்க விடுவதற்கான கொட்டில்களை அமைக்க மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பணியகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தைக் காயவிடுவதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் போதிய வசதிகள் இல்லாததால் அறுவடைக் காலத்தில் அவற்றைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது என்று வெங்காயச் செய்கையாளர்கள் விவசாயத் திணைக்களத்திடம் முறையிட்டிருந்தனர்.

அதனையடுத்து வெங்காயம் காயவிடுவதற்கான கொட்டில்கள்தேவையானவிவசாயிகளிடம்விண்ணப்பங்களைக் கோரியிருந்தனர்.

கொட்டில் அமைக்க 27 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதன்படி தலா 57 ஆயிரம் ரூபா செலவில் கொட்டில்கள்அமைக்கவிவசாயிகளிடம்ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஒப்பந்தம் செய்த விவசாயிகளிடம் கொட்டில் அமைப்பதற்கானஏற்பாடுகளைஆரம்பிக்குமாறும் வேலைகளின் தன்மைக்கேற்ப கட்டம் கட்டமாக கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வெங்காயம் காயவிடுவதற்கான கொட்டில்களை அமைக்கும் பணிகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி, வேம்பிராய், மீசாலை வடக்கு, கல்வயல், மந்துவில், கச்சாய், எழுதுமட்டுவாழ், உசன், மிருசுவில், வரணி, மறவன்புலவு, நாவற்குளி, உட்பட பெரும்பாலான பகுதிகளிலும், ஏனைய பல பகுதிகளிலும் வெங்காயச்செய்கை இடம்பெறுகிறது. (4,9,159)




# கிளிநொச்சியில் ராணுவத்திடமிருந்த பொதுநூலகக்காணி நேற்று விடுவிப்பு

ராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கடந்த 9 ஆண்டுகளாக இருந்த கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசப் பொது நூலகக் காணி நேற்று 13 ஏக்கர் விடுவிக்கப்பட்டது. 3ஏக்கர் விடுவிக்க வேண்டும்.

குறித்த காணி 2009ஆம் ஆண்டு தொடக்கம் ராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து வந்துள்ளது. நேற்றுப் பிரதேச சபை நிர்வாகத்திடம் காணி கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம்நடைபெற்றகாணிவிடுவிப்புத்தொடர்பான கலந்துரையாடலிலும் குறித்த காணி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதை விடுவிக்கவேண்டுமென்று கரைச்சிப் பிரதேச சபையின் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுதீர்மானத்தின்பிரதிகள்படைத்தரப்புமற்றும்சம்பந்தப்பட்டஅதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

இந்த நிலையில் நேற்று நூலகக்கட்டடம் விடுவிக்கப்பட்டது.

இதனைப் பொறுப்பேற்ற கரைச்சிப் பிரதேச சபை நிர்வாகம் காணிக்கான பெயர்ப் பலகையை நட்டுள்ளனர். குறித்த பொதுநூலகம்2010ஆம்ஆண்டுதொடக்கம்இடநெருக்கடிகளுக்கு மத்தியில் மாற்றிடத்தில் இயங்கியது. (4,21)

# விசாரணைக்கு அழைப்பு

முல்லைத்தீவில்சமூகசேவைசெய்துவரும் முல்லை ஈசன் என்று அழைக்கப்படும் தம்பையா லோகேஸ்வரனைப் பயங்கரவாத விசாரணைப்பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப்பிரிவுக்கு நாளைமறுதினம் வருமாறு அவருக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,ரி3)

# வாள் வைத்திருந்தாரென்று மோசடி வழக்கு யாழ்.நீதிமன்றில் சட்டத்தரணி குற்றச்சாட்டு

## அலைபேசியில் சுற்றுக்காவல் இடங்களின் படங்கள் இருந்தன என்று பொலிஸார் காரணம் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 3

முச்சக்கரவண்டியைவாடகைக்குஅமர்த்திப் பயணித்தவர்கள்பொலிஸாரைக்கண்டதும் குதித்துத் தப்பியோடியுள்ளனர். ஆனால் முச்சக்கர வண்டிச்சாரதியைப்பொலிஸார்கைது செய்ததோடு அவரிடமிருந்து வாள் ஒன்றை மீட்டதாகநாடகமாடுகின்றனர்என்றுநீதிமன்றில் பொலிஸாருக்கு எதிராகச் சட்டத்தரணி குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டவாள்மீட்புத்தொடர்பானவழக்கில் முச்சக்கரவண்டிச் சாரதி சார்பில் முற்பட்ட சட்டத்தரணி மேனகா ஜீவதர்ஷன் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

"யாழ்ப்பாணத்தில்வாள்வெட்டுவன்முறைகளைப் பொலிஸாரே ஊக்குவிக்கின்றனர். சந்தேகநபர்ஒருவரைக்கைதுசெய்துதாங்களே வாள்ஒன்றைவைத்துவிட்டுஅதைச்சந்தேகநபரிடமே மீட்டதாக நீதிமன்றில் முற்படுத்துகின்றனர்"

யாழ்ப்பாணம்கொக்குவில்தொடருந்துநிலையத்துக்குஅருகில்முச்சக்கரவண்டியில்ஆபத்தான சிறியரகவாள் ஒன்றைவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாயைச்சேர்ந்த 20 வயதுடைய இளைஞனைக் கோப்பாய் பொலிஸார் கடந்த புதன்கிழமை மாலை கைதுசெய்தனர். நேற்றுமுன்தினம்மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரிடம்மீட்டதாகக்கூறிச் சிறியரகவாள்ஒன்றைப்பொலிஸார்மன்றில் சான்றுப் பொருளாகச்சமர்ப்பித்தனர்.

அதன்போதேசட்டத்தரணி இந்த விடயத்தை மன்றில் தெரிவித்தார்.

"சந்தேகநபர் தனது முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திய 2 ஆண்கள் ஒரு பெண்ணை தொடருந்து நிலையத்தில் இறக்கிவிடச்சென்றார். தொடருந்துநிலையத்துக்கு அண்மையாக நின்ற பொலிஸாரைக் கண்டதும்வாடகைக்குஅமர்த்திவந்தவர்கள்ஓட்டம் எடுத்தனர்.

அவர்களில் ஆண்கள் இருவரையும் கைது செய்த பொலிஸார், முச்சக்கர வண்டி சாரதியான இந்தச் சந்தேகநபரையும் கைதுசெய்தனர். அவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று வாள் ஒன்றை அவரிடம் மீட்டதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகளை பொலிஸாரே ஊக்குவிக்கின்றனர்" என்றும் சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் செய்து சந்தேகநபர் சார்பில் பிணை விண்ணப்பம் செய்தார்.

"சந்தேகநபரிடமிருந்துகைபேசிஒன்றுகைப்பற்றப்பட்டது. அதில்அவர்பொலிஸார்மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் வீதிச் சுற்றுக்காவலில் ஈடுபடும் இடங்களின் ஒளிப்படங்கள் இருந்தன.

சந்தேகநபர், மானிப்பாய் பகுதியில் எடுத்த அந்தப் படங்களை, வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு அனுப்பிபொலிஸார் மற்றும்சிறப்புஅதிரடிப்படையினர்சோதனையில் ஈடுபடும் இடங்கள் தொடர்பில் அவர்களுக்குதகவல்வழங்கியுள்ளார்" என்றுபொலிஸார் மன்றுரைத்தனர்.

இருதரப்புசமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிவான்சி.சதீஸ்தரன், சந்தேகநபரைவரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, சந்தேகநபரால்முச்சக்கரவண்டியில் ஏற்றிவந்து இறக்கிய இருவர், விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர். (4,103,37)

# தமிழ் அரசுக் கட்சியின் இளையோர் மாநாடு நாளை

வவுனியா, நவ. 3

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மாபெரும் மாவட்ட இளைஞர் மற்றும் மகளிர் மாநாடும் தொழில்முயற்சியாண்மை தொடர்பான வலுவூட்டல் கருத்தரங்கும் நாளை இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இது நடைபெறவுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞரணித் தலைவர் பா.சிந்துஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினராக நாடாளுமன்றஉறுப்பினர் எ.ஏ.சுமந்திரன், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராசா, சி.சிவமோகன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (4,110)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஆட்சியில் அமர யாரை கூட்டமைப்பு ஆதரிப்பது?

இலங்கையின் அரசியல் குழப்பத்துக்கான தீர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தப் பக்கம் சாயப்போகிறது என்று உலகமே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில், மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நாங்கள் ஏற்கவேயில்லை என்று திடீரென அறிவித்திருக்கிறது கூட்டமைப்பு.

சபாநாயகர் கரு ஜெயசூரியவைக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சந்தித்துப் பேசியிருந்தனர். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இந்த அறிவிப்பை விடுத்தார். ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளும் சபாநாயகருடனான சந்திப்பில் பங்கேற்றிருந்தன.

இந்தச் சந்திப்பின் பின்னர் சுமந்திரன் தெரிவித்த கருத்து, மகிந்த ராஜபக்சவை நிராகரித்துவிட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கே கூட்டமைப்பு ஆதரவளிக்கப்போகிறது என்கிற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது. ஆனால், அப்படியேதும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, யாருக்கு ஆதரவளிப்பது என்பதைக் கூட்டமைப்பு இன்னும் தீர்மானிக்கவில்லை என்பதையும் மறக்காமல் அங்கு கூறி விட்டுப்போனார் சுமந்திரன்.

யாருக்கு ஆதரவளிப்பது என்பதைக் கூட்டமைப்புத் தீர்மானிக்கவில்லை என்று சுமந்திரன் கூறுவதிலிருந்தே, மகிந்த அல்லது ரணில் இருவரில் யாராவது ஒருவருக்கு ஆதரவளிப்பது என்கிற முடிவுக்குக் கூட்டமைப்பின் தலைமை வந்திருக்கிறது என்பது தெளிவாகுகின்றது. முன்னதாக, புதிய அரசமைப்பு உள்ளிட்ட இனப் பிரச்சினைத் தீர்வை அடையும் வகையில் இரண்டு கட்சிகளும் இணைந்த தேசிய ஆட்சியே தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்கிற நிலைப்பாட்டையே, ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து முடிந்த கையோடு கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருந்தது. இப்போது அந்த முடிவில் இருந்து அது நழுவி யாரையாவது ஆதரிப்பது என்கிற முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

மகிந்த மற்றும் ரணில் என இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்பதைப் போருக்குப் பின்னரான கடந்த ஒரு தசாப்த காலமே தெளிவாக உணர்த்திவிட்டது. தமிழர்களின்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு இருவருமே முன்வரப்போவதில்லைஎன்பதையும், ஒருவரையொருவர்சாடிக்கொண்டுகாலம் கடத்துவதையே இவர்கள் இருவரும் செய்வார்கள் என்பதையும் கடந்த காலங்களிலேயே அவர்கள் நிரூபித்துவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காகப் பேரம் பேசல்கள் மூலம் அடுத்த கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத்தன்பக்கம் இழுத்துவரும் மகிந்தவின் போக்கு, அவர் கடந்த காலங்களில் இருந்ததில் இருந்து எந்த வகையிலும் மாறவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. எனவே தமிழர் பிரச்சினை தொடர்பில் மகிந்த வழங்கக்கூடிய எந்தவொரு வாக்குறுதியும், எழுத்து உறுதியும் நிறைவேற்றப்படாது என்பதை உறுதியாக நம்பலாம்.


அதுபோன்றே, மகிந்த மற்றும் சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றிப் புதிய அரசமைப்பையோ, தமிழர்களுக்கான தீர்வையோ ரணில் விக்கிரமசிங்கவும் தரப்போவதில்லை என்பது திண்ணம். நாடாளுமன்றத்தில் எந்தவொரு தரப்பும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலமை ஏற்பட்டு, பொதுத் தேர்தல் ஒன்று வந்தால் அதில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுமா? என்பதும் கேள்விக்குரியது. இத்தகைய நிலையில் ரணிலை ஆதரிப்பதென்பதும் தமிழர்களுக்கு நன்மை தராததொரு நகர்வே!

ரணிலை ஆதரிப்பதன் மூலம் பன்னாட்டுச் சமூகமும் இந்தியாவும்தமிழர்களுக்கானதீர்வுஒன்றுக்குஆதரவாகநிற்க்கூடும் என்றால், கடந்த காலங்களில் இந்த இரண்டு தரப்பையும் திருப்திப்படுத்துவதற்காகத் தமிழ்த் தலைமைகள் காட்டிய அர்ப்பணிப்புக்கானபெறுபேறு அந்தத்தரப்புகளிடம் இருந்து கிடைக்கவில்லை. கொழும்பைத் தமது வழிக்கு வரவைப்பதற்குத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொள்ளும் பழக்கத்தையே இந்த இரண்டு தரப்புகளும் கொண்டுள்ளன.

இப்படிப்பட்டதொருநிலையில், தமிழர்களின்பிரச்சினையை அடியோடு தூக்கி எறிந்துவிட்டு அதிகாரத்துக்காக அடிபட்டுக் கொள்ளும் சிங்கள ஆட்சித் தரப்புகளில் யாரையும் ஆதரிக்காது ஒதுங்கிநின்று அவர்களைப் பலப்பரீட்சை நடத்த விட்டுவிடுவதே தமிழர்களுக்குச் சிறந்தது. பெரும்பான்மைத் தமிழ் மக்களின் கருத்தாகவும் அதுவே இருக்கிறது.

# மேற்குலகின் எதிர்ப்புக்களுக்கு ஈடுகொடுக்குமா இலங்கை?

சேரலாதன்



நாட்டின் தற்போதைய அரசியல் குழப்ப நிலை தொடர்பாக மேற்குலக நாடுகள் கடும் அக்கறைகாட்டி வருகின்றன. இலங்கையின் அரசமைப்புக்கு முரணாக மகிந்தவை அரச தலைவர் மைத்திரிபால தலைமை அமைச்சராக நியமித்ததும், நாடாளுமன்றத்தை இயங்கவிடாது முடக்கி வைத்திருப்பதும் அந்த நாடுகளைக் கவலையடையச் செய்துள்ளன.

இதேவேளை இலங்கையின் உள் விவகாரங்களில் சீனா தலையிடுவதை அமெரிக்கா முற்றாக விரும்பவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான விவகாரத்தில் இலங்கை சீனாவிடம் தனது இறைமையை இழந்து நிற்பதாகவும் அமெரிக்கா கருதுகின்றது. திருப்பிச் செலுத்த முடியாத அளவிலான கடன்களை வழங்கிவிட்டுக் கடன்பெற்ற நாடுகளின் இறைமையைப் பறித்தெடுப்பது சீனாவின் வழக்கமான நடவடிக்கையெனவும் அமெரிக்கா கருதுகின்றது. தற்போது சீனாவுக்குச் சார்பானவரெனக் கருதப்படும் மகிந்தவை இலங்கையின் தலைமை அமைச்சராக நியமித்தமை சீனாவுக்கு வாய்ப்பாக அமைந்து விடுமெனவும் கருதப்படுகின்றது.

**பொருளாதாரத் தடைக்கான எச்சரிக்கை**

சீனா இலங்கையின் உள் விவகாரங்களில் தான் தலையிடுவதில்லையெனப் கூறிக்கொண்டாலும் இதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



மகிந்த தலைமை அமைச்சர் ஆனதில் அந்த நாட்டுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமென்பதை உறுதியாகக்கூற முடியும். இதேவேளை இலங்கையில் சுமூகமானதொரு நிலை ஏற்படுத்தப்படாது விட்டால் பொருளாதாரத் தடைகளை அந்த நாடு எதிர்கொள்ள நேரிடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சீனா பண உதவி புரிந்ததாகச் செய்திகள் கசிந்த நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெரும் தொகையான பணத்தைக் கொடுத்து மகிந்த அணியினர் தமது பக்கம் இழுப்பதற்கு முயல்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இலங்கைக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் பொருளாதாரத் தடை தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**பொருளாதாரத் தடையால் பாதிப்புக்கள் அதிகரிக்கும்**

இலங்கையின் பொருளாதாரம் பிறநாடுகளின் தயவிலேயே தங்கியுள்ளது. இந்த நாட்டின் தேசிய வருமானம் அடிமட்ட நிலையில் உள்ளதால் ரூபாவின் மதிப்பும் குறைந்து காணப்படுகின்றது. சகலதையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலும் இந்த நாடு உள்ளது. நாட்டின் நிர்வாகச் செலவுகளுக்குக்கூடப் பிறநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் பொருளாதாரத் தடைகள் நாட்டை மோசமாகப் பாதித்துவிடுமென்பதை உறுதியாகக் கூற முடியும். இதேவேளை மேற்குலகத்தின் தளத்துக்கு ஏற்ப நாடு ஆடமுடியாதென மகிந்த அணியினர் கூறுகின்றனர். சீனா தமக்குப் பக்கபலமாக இருப்பதால் தம்மை எவருமே ஒன்றும் செய்யமுடியாதென அவர்கள் கருதுகின்றனர். ஆனால் மேற்குலக நாடுகளைப் பகைத்துக்கொண்டு எதுவுமே செய்யமுடியாதென்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**ரணில் அரசு மேற்கு நாடுகளை ஆதரித்தே வருகிறது**

ரணில் விக்கிரமசிங்க மேற்குலகின் ஆதரவைப்பெற்ற ஒருவர் என்பதைக்கூறத் தேவையில்லை. ஐக்கிய தேசியக் கட்சி இடதுசாரிக் கொள்கைகளை ஆதரிக்காத காரணத்தால் அந்தக் கட்சி ஆட்சி புரிவதையே மேற்குலக நாடுகள் விரும்புகின்றன. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சீனாவைத் தனது முக்கிய எதிரியாக அந்த நாடு கருதுகின்றது.

பொருளாதார பலத்திலும், ஆயுத பலத்திலும் அமெரிக்காவை விஞ்சும் நிலையில் சீனா நெருங்கி வருவதே இதற்கான காரணமாகும். அமெரிக்கா உலகின் முதன் நிலை நாடாக உள்ளதால் பல நாடுகள் அதன் தயவிலேயே தங்கியுள்ளன. இலங்கையையும் அந்த நாடுகளில் ஒன்றாகக் கருத முடியும். ஆகவே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளைப் பகைத்துக் கொள்வது இலங்கைக்கு நல்லதல்ல.

**அரச தலைவரின் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதது**

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடித்துத் தமது பதவியில் தொடர்ந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கம் செய்து மகிந்தவை அந்தப் பதவியில் அமர்த்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதற்கு அரச தலைவர் தெரிவித்த காரணங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எவ்வாறாயின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவரும், போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பாக இருந்தவருமான மகிந்தவை தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்துவதற்கு அரச தலைவர் தீர்மானித்ததை மேற்குலக நாடுகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி அறுதிப் பெரும்பான்மையுள்ள தரப்பிடம் தலைமை அமைச்சர் பொறுப்பை ஒப்படைப்பதே சரியான தீர்வாக அமையும். இதைவிடுத்து பணத்தைக் காட்டிப் பேரம் பேசுவதற்கு முயற்சிசெய்வதும், ஆள்களை விலைகொடுத்து வாங்குவதற்கு முயற்சி செய்வதும் ஜனநாயகத்தை அழிப்பதற்கு ஒப்பான செயல்களாகும்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும்?

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

அரசியல் ஒரு சமூக விஞ்ஞானம். அதில் அறிவுபூர்மான அணுகு முறைகளும் பரிசோதனை முயற்சிகளும் தேவை. இன்று நாட்டில் எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும் என்ற விடயத்தை அடிப்படையாக வைத்துச் சில ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகின்றேன்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்தராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்தது சரியா? பிழையா? என்ற அரசமைப்பு வியாக்கியானங்களுக்குள் செல்லாமல், இன்று எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையைத் தமிழர் தரப்பு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நான் முன்வைக்கவுள்ள ஆலோசனைகளுக்கான அடிப்படையாகும்.

2015ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 'நல்லாட்சி' அரசின் இதுவரையிலான மூன்றரை வருட காலத்தில் அதாவது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இணங்கியிருந்த காலத்தில் உருப்படியாக எதையும் தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுக்க இயலவில்லையென்றால், ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து தலைமை அமைச்சராக இருப்பதாக ஒரு வாதத்துக்கு எடுகோளாக வைத்துக் கொண்டு நோக்குவோமானால் மைத்திரிபால சிறிசேனாவும் ரணில்விக்கிரமசிங்கவும் 'பிணங்கியிருக்கப் போகின்ற' இந்த அரசின் மீதி ஒன்றரை வருட காலத்தில் தமிழர்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏதாவது நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? என்ற கேள்விக்கு விடை 'இல்லை' என்பது எவரும் விளங்கிக் கொள்ளக் கூடிய எளிய எண்கணிதமாகும். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பது 'உள்ளங்கை நெல்லிக் கனி'.

**சிங்களச் சமூகம் மகிந்தவின் பக்கம் என்பதைக் கவனிக்க**


இன்று நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையில் சிங்களச் சமூகத்தின் மிகப் பெரும்பான்மையானவர்களும், முப்படைகளும், பொலிசாரும், மகாசங்கத்தினரும், மைத்திரிபாலசிறிசேனா மற்றும் புதிதாக அவரால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சவின் பக்கமே நிற்கின்றனர் என்ற யதார்த்தத்தைத் தமிழர் தரப்பு அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனத்தில் கொள்ள வேண்டும். சிங்களச் சமூகத்தின் உளவியலையும், மனோநிலையையும் புறந்தள்ளி விட்டு வெறுமனே கோட்பாடுகளையும், சித்தாந்தங்களையும் அரசமைப்பு வியாக்கியானங்களையும் முன்வைப்பது பொருத்தமான - புத்திசாலித்தனமான அணுகுமுறையாகாது.

ஐக்கிய இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சி அலகை உள்ளடக்கிய புதிய அரசமைப்புக் கோரிக்கையும் பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணைக் கோரிக்கையும் தமிழர் தரப்பில் நியாயமானதாக இருந்தாலும்கூடச் சிங்களச் சமூகத்தின் மனதை வெல்லாமல் நாடாளுமன்ற அரசியல் வழிமுறைகளினூடாக மேற்படிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான சாத்தியமே இல்லை. எனவே இன்றைய அரசியல் சூழ்நிலையில் நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை நிபந்தனைகளாக விதிப்பது அறிவுபூர்வமானதல்ல.

**'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்'**

நடைமுறைச் சாத்தியமான விடயங்களாகவுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அரசியல் தீர்மானம், படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு, புதிய அரசமைப்பு சாத்தியமாகும் வரைக்கும் காத்திராமல் ஏற்கெனவே கையிலுள்ள பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை முழுமையாக அரசியல் விருப்பத்துடன் நடைமுறைப்படுத்திய கோரிக்கைகளை அரச தலைவரிடமும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சரிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கலாம். நாளைவரும் பலாக்காயிலும் பார்க்க இன்றுவரும் கிளாக்காய் நன்று. வடக்குக் கிழக்கு இணைந்த மொழிவாரி மாநில சுயாட்சி இல்லாமல் புதிய அரசமைப்பொன்று வருவது தமிழர்களைப் பொறுத்தவரைத் தேவையற்றது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பெற்ற பதின்மூன்றாவது அரசியல் சட்டத்திருத்தத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைகள் சட்டத்தின் சரத்துக்கள் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பெற்றதிலிருந்து இன்றுவரை, அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட முன்னாள் அரச தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பின்னர் வந்தவர்களான ஆர்.பிரேமதாச மற்றும் டி.பி.விஜயதுங்க, சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா வாலும் அதன் நோக்கம் அர்த்தமுள்ள வகையில் அரசியல் விருப்பத்துடன் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அதற்கான அரசியல் அழுத்தம் தமிழர் தரப்பிலிருந்தும் இதுவரை முறையாகக் கொடுபடவும் இல்லை. இது அதற்கான அரிய சந்தர்ப்பம். இந்தியா கூட இது விடயத்தில் இராஜதந்திரரீதியாக உதவுவதற்கு முன்வரலாம். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத் தமிழ் ஆளுநர்களை நியமித்தல், உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனைத் தமிழ்ப் (உப) பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல், திருகோயில் பிரதேச செயலாளர் பிரிவில் நிலவும் வட்டமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கான தீர்வு, பொத்துவில் கனகர் கிராம மீள்குடி யேற்றம் போன்ற இன்னோரன்ன அனுகூலங்களைக் கூடக் கேட்டுப் பெற்றுக் கொள்ளக் கூடிய காலகட்டம் இது.



**சரத் பொன்சேகாவை ஆதரித்தவர்கள் மகிந்தவை ஆதரிப்பதில் தவறில்லை**

எல்லாவற்றையும் 'முள்ளிவாய்க்கால்' போரை வைத்துக் கொண்டே தீர்மானிக்கக் கூடாது. 2009 ஆம் ஆண்டு போர் முடிந்த கையோடு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது இந்தப் போருக்கு இராணுவத் தலைமையேற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைத் தமிழர் தரப்பு அன்று ஆதரித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பார்வையில் அது தவறில்லை என்று எடுத்துக் கொண்டால் போர் முடிந்து சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் போருக்குத் அரசியல் தலைமையேற்ற முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சாவை இன்று ஆதரிப்பதும் தவறில்லைத்தானே. அன்று தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்ட சரத்பொன்சேகாவை ஆதரித்ததன் மூலம் தமிழர்கள் மீது மகிந்தவுக்கு வன்மம் ஏற்பட வழியெடுத்துக் கொடுத்ததேயொழிய - தீமை ஏற்பட்டதேயொழிய - தமிழர்களுக்கு எந்த நன்மையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அன்றைய அரசியல் நிலைப்பாட்டால் ஏற்படவில்லை. அதற்குப் 'பிராயச்சித்தம்' தேடக்கூடிய சந்தர்ப்பம் இப்போது கதவைத் தட்டுகிறது. தமிழர் தரப்பு இதை நழுவ விடக்கூடாது.

**ஏட்டுச் சுரக்காய் அரசியல்**

நாடாளுமன்ற அரசியல் வழிமுறைகளுக்கூடாக எவற்றைச் சாதிக்கலாம் அதற்கு வெளியே எவற்றைச் சாதிக்கலாம், என்ற தெளிவான நிகழ்ச்சி நிரல் இல்லாமல் தமிழ் அரசுக் கட்சிக் காலத்திலிருந்து இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காலம் வரையிலான தமிழர் தரப்பின் வினைத்திறனற்ற 'ஏட்டுச்சுரக்காய்' அரசியல்தான் தமிழ்ச் சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னடைவுகளுக்கு முக்கிய அடிப்படைக் காரணமாகும். மேலும், முள்ளிவாய்க்கால் போரைக் காரணமாக வைத்து முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சவைப் பரம எதிரியாகக் காலம் முழுவதும் வைத்துக் கொண்டு தமிழர் தரப்பு எதைச் சாதிக்கப் போகிறது? பழி தீர்த்துக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடுமா?

**ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்**

தமிழர்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியென்றாலும் சரிதான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியென்றாலும் சரிதான். இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். கால நேரம் அறிந்து தமிழர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் இவ்விரண்டு கட்சிகளையும் அரசியல் சாணக்கியத்தோடு கையாள்வதுதான் உகந்த அணுகுமுறையாக இருக்க வேண்டுமே தவிர அவற்றுடன் கச்சை கட்டிக் கொண்டு நிற்பதல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ, அல்லது நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியோ, அல்லது மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் இணைத்தலைமையோ தமிழர்களுக்கு எதையும் பெற்றுத் தரப் போவதில்லை. இந்தப் பதவிகளைவிட அரசியல் கைதிகளின் விடுதலையும், படையினர் வசமுள்ள காணி விடுவிப்பும், பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலும் ஆயிரம் மடங்கு அவசியமானவை. இவற்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தமிழர் தரப்புக்கு இன்று தேவையானது பகைவனுக்கு அருளும் மனப்பக்குவம் ஆகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### தேவைக்கு அதிக பொருள்களைப் பதுக்கி வைப்பதை இனியாவது கைவிடுவார்களா?

மகிந்தராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட கையோடு எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது சில பாவனைப் பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. ரணில் அரசு விலைச் சூத்திரம் ஒன்றைத் தயாரித்து, எரிபெருள்களின் விலைகளில் அடிக்கடி மாற்றத்தை ஏற்படுத்தி மக்களைச் சலிப்படைய வைத்துவிட்டது. தற்போது மகிந்த அரசு அந்தச் சூத்திரத்தைத் தூர வீசியெறிந்துவிட்டதைக் காண முடிகின்றது.

நாட்டின் அரசியல் குழப்ப நிலை காரணமாக எரிபொருள்களின் விநியோகத்தில் தடங்கல் ஏற்படலாமெனக் கருதியதால் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் வாகன உரிமையாளர்களால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன.

மழையைக் கூடப் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் கால்கடுக்க அவர்கள் காத்திருந்தனர். முன் யோசனையுள்ள சிலர் கொள்கலன்களுடன் நின்றதையும் காண முடிந்தது. இதன் காரணமான எரிபொருள் விற்பனை நிலையங்களின் கையிருப்பு பூச்சியத்தை எட்டி நின்றது. ஆனால் மறுநாள் எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தடைகளும் இல்லையென்ற அறிவிப்பு வெளி யானது. தேவையான எரிபொருள்களைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

இந்த நிலையில்தான் அவற்றின் விலைகளில் குறைப்பு செய்வதற்கான அறிவிப்பும் வெளியானது. எரிபொருள் உட்பட ஏனைய பொருள்களின் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுவதற்குச் சிலர் அவற்றைத் தேவைக்கு மேலாகப் பெற்று பதுக்கி வைப்பதும் ஒரு முக்கிய காரணமாகும்.

எதற்கும் முண்டியடிப்பதையும், தேவைக்கு அதிகமாகப் பொருள்களை வாங்கிப் பதுக்கி வைப்பதையும் இனியாவது எம்மவர்கள் கைவிடுவார்களா?

*வே.ரமணன், திருநெல்வேலி*

## காதலுக்காக அரச குடும்பத்திலிருந்து வெளியேறிய இளவரசி



டோக்கியோ.நவ.3
சாதாரண குடிமகனான தனது காதலனைக் கரம் பிடிப்பதற்காக அரச குடும்பத்திலிருந்து வெளியேறியிருக்கிறார் ஜப்பான் இளவரசி அயாகோ ஜப்பான் பேரரசர் அகிடோவின் உறவினரான டகாமாடோவின் மூன்றாவது மகளான அயாகோ, நிப்பான் யூசென் கப்பல் நிறுவனத்தில் பணிபுரியும் கேய் மோரியாவைக் காதலித்தார். ஜப்பான் அரச குடும்பத்தின் விதிமுறைகளின்படி, சாதாரண குடிமகனைத் திருமணம் செய்துகொள்ள இளவரசிகள் விரும்பி னால் அவர்கள் அரச குடும்பத்தி லிருந்து வெளியேறியாக வேண்டும். தன்னுடைய காதலில் உறுதியாக நின்ற அயாகோ, விதிமுறையைப் பின்பற்றி அரச குடும்பத்திலிருந்து வெளியேறியிருக்கிறார். டோக்கியோவில் உள்ள மெய்ஜி புனிதத்தலத்தில் திங்கட்கிழமை நடந்த இவர்களின் திருமணத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## சிரியாவில் மிகப் பெரும் மனிதப் புதை
## 1,500 வரையான மனிதர்களின் உடல்கள் க

டமாஸ்கஸ்.நவ.3
**சிரியாவில் பெரியதொரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந் ஆயிரத்து 500வரையான அப்பாவிப் பொதுமக்களின் உடல்கள் கண்டுபிடிக் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**







சிரியாவில் 2011ஆம் ஆண்டு முதல் அதிபர் பஷார் அல் ஆசாத் படைகளுக்கும், உள்நாட்டுப் போராளிப் படைகளுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இந்த உள்நாட்டுப்போரைப் பயன்படுத்தி அங்கு ஐ.எஸ். அமைப்பினர் கால் பதித்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அவர்களின் தலைநகராக ராக்கா நகரம் விளங்கியது. அந்த நகரத்தை ஐ.எஸ். ஆயுததாரிகளிடம் இருந்து மீட்பதற்குக் கடும்போர் நடந்தது. இந்தப் போரில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் வான்தாக்குதல் நடத்தின. அவ்வாறு நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இது பன்னாட்டு அளவில் கண்டனங்களுக்கு வழிவகுத்தது. இந்த நிலையில் அந்த நகரத்தில் மிகப் பெரும் மனிதப் புதை குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் ஆயிரத்து 500 வரையான அப்பாவிப் பொதுமக்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் அமெரிக்கக் கூட்டுப்படையின் வான்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் எனத் தகவல்கள் கூறுகின்றன. இதுவரை அங்கு 4 ஆயி

ததாரிகளின் செ
அங்கு ஐ.எஸ். அ
ரிக்கா தலைமை
வழித் தாக்குதல்
ரிக்கக் கூட்டுப்ப
ஆதரவாகச் செ
களின் தாக்குதல்
அளவில் கொல்
தும் குற்றம் சாட்
தலைமையிலா
இருந்து முற்றிலு
சிரிய அரசு நீண்
பன்னாட்டு விசா
யிருந்தது.

## "தலிபான்கள் வலிமை பெறுகிறார்கள்" அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது



காபூல்.நவ.3
கடந்த மூன்று வருடங்களில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவதாக அமெரிக்கா வெயிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஆப்கான் மறுபரீசிலனை அமைப்பின் அதிகாரிகள் தரப்பில் அறிக்கை ஒன்று அமெரிக்கா நாடாளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் 'தலிபான்கள் ஆப்கானில் பல இடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். ஆப்கானில் வெறும் 55 சதவீதம் மட்டுமே அரச கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு 75 சதவீதமான இடங்கள் ஆப்கான் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. அண்மைய ஆண்டுகளில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவது கவலையளிக்கின்றது' என்று கூறப்பட்டுள்ளது.

**தலிபான்கள் ஆதிக்கம்**

2001ஆம் ஆண்டில் ஆப்கானில் அமெரிக்கப் படையெடுப்புக்குப் பிறகு தலிபான்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குச் சம்மதித்துள்ளது இதுவே முதல் முறை. ஆப்கானிஸ்தானில் அரச படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படை அங்கு முகாமிட்டுள்ளது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படைப் போராளி ஆப்கான் தலைநகர் காபூலில் வெடிகுண்டுகள் நிரப்பிய நோயாளர் காவுகை வண்டியை வெடிக்கச் செய்ததில் அதில் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருந்தனர். அண்மைக்காலமாக அங்கு தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து


## கூகுளை உலுக்கும் 'மீ ரு' எதிரொலி ஊழியர்களுக்கு சுந்தர்பிச்சை அறிவுறுத்தல்




நியூயோர்க்.நவ.3
பாலியல் முறைப்பாடுகளுக்குள்ளான 'கூகுள்' நிறுவனத்தின் மூத்த நிர்வாகிகள் சிலரை நிர்வாகம் பாதுகாக்க முயல்வதாகக் கூறி அதன் ஊழியர்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், நான் இப்போதும் உங்கள் முதலாளிதான். வாக்கெடுப்பு நடத்தி நிறுவனம் நடத்த முடியாது என அந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார். கூகுள் நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு நிர்வாகியாகவிருந்த ரூபின், 2014ஆம் ஆண்டு சக ஊழியர்களுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த முறைப்பாட்டுக்கு ஆளானதாகவும், இதனால் அவர் நீண்ட விடுமுறையில் அனுப்பப்பட்டதாகவும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தத. இது பற்றி கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, ஊழியர்களுக்கு மின்னஞ்சல் மூலம் சில விளக்கங்களை அளித்தார். "உயரதிகாரிகள் யாருக்கும், சக ஊழியர்களுடன் பாலியல் தொடர்பு இருப்பது தெரிய வந்தால் அவர்கள் பணியாற்ற முடியாது. கடந்த 2 ஆண்டுகளில் பாலியல் முறைப்பாட்டில் சிக்கிய 48 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் மிக மூத்த நிர்வாகிகள்" என்று அதில் தெரிவித்து இருந்தார். எனினும் கூகுள் நிறுவனம் பாலியல் முறைப்பாட்டுக்கு ஆளான மூத்த நிர்வாகிகளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகக் கூறி அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். கூகுள் நிறுவனத்தில் உலகம் முழுவதும் 50 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர்.

அவர்களில் சில ஆயிரம் பேர் விடுப்பு எடுத்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால் கூகுள் நிறுவனம் கலக்கமடைந்துள்ளது. இந்த நிலையில்தான் நியூயோர்க்கில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய சுந்தர் பிச்சை மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

## பிரேசிலின் தூதரகமும் ஜெ இஸ்ரேல் தலைமை அமை


பெஞ்சமின் நெதன்யாகு



ரியோ டி ஜெனிரோ.நவ.3
இஸ்ரேலில் உள்ள தனது தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளது பிரேசில். பிரேசிலின் முடிவை, இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நேதன்யாகு வரவேற்றுள்ளார்.

யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் புனிதத் தலங்கள் அமைந்துள்ள ஜெருசலேம் நகரை இஸ்ரேல் தனது தலைநகர் எனக் கருதி வந்தது. மற்ற நாடுகள் இதை அங்கீகரிக்காத நிலையில், அதிரடியாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்துக் கடந்த டிசம்பர்

## புதைகுழி
## ...ள் கண்டுபிடிப்பு

**...றது. இந்தப் புதை குழியில்**
**...ண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப்**




ரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், வான்தாக்குதல்கள் காரணமாக ராக்கா நகரின் 85சதவீத பகுதி அழிக்கப்பட்டு விட்டதாகவும் மற்றொரு செய்திகள் கூறுகின்றன.

**பின்னணி**

சிரியாவில் அரச படைகளுக்கும், உள்ளூர்ப் போராளிகளுக்கும் இடையேயான உள்நாட்டுப் போர் 7 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. மற்றொருபுறம் அந்த நாடு ஐ.எஸ். ஆயு...ரிகளின் சொர்க்கபுரியாகவும் திகழ்கிறது. ...கு ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக அமெ... தலைமையிலான கூட்டுப்படைகள் வான்...த் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அமெ...க் கூட்டுப்படைகள் கிளர்ச்சியாளர்களுக்கு ...ரவாகச் செயல்படுவதாகவும், கூட்டுப்படை...ன் தாக்குதல்களில் அப்பாவி மக்களே அதிக...வில் கொல்லப்படுவதாகவும் சிரியா தொடர்ந்...குற்றம் சாட்டிவருகிறது. எனவே அமெரிக்கா...லைமையிலான கூட்டுப்படைகள் சிரியாவில்...ந்து முற்றிலுமாக வெளியேற வேண்டுமெனச்... அரசு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது. ...நாட்டு விசாரணைக்கும் சிரியா வலியுறுத்தி...ந்தது.

அகதிகளின் குழந்தை விவகாரம்

# ட்ரம்புக்கு உள்ளூரில் எதிர்ப்பு; எல்லையில் இராணுவம் குவிப்பு



வோஷிங்டன்: நவ 03

உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து, மக்கள் அமெரிக்காவை நோக்கிக் குடியேறியபடி உள்ளனர். அங்கு தம்பதியராக வாழ்கிற பிற நாட்டினருக்குக் குழந்தை பிறக்கிறபோது, அந்தக் குழந்தைக்குக் அமெரிக்க குடியுரிமை கிடைத்து விடுவது சட்ட நடைமுறை. இதற்கு அந்த நாட்டின் அரசியல் சாசனத்தின் 14ஆவது திருத்தம் இடமளிக்கின்றது. ஆனால் அங்கு பிறக்கிற அகதியாகக் குடியேறியுள்ள தம்பதியரின் குழந்தைகளுக்குக் குடியுரிமை அளிப்பது முடிவுக்கு கொண்டு வரப்படும் என அரச தலைவர் ட்ரம்ப் அறிவித்தார். ட்ரம்பின் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்புக்கள் கிளம்பி உள்ளன. குறிப்பாக அமெரிக்க நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இதைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்த நிலையில் வெளிநாட்டினரின் அமெரிக்க ஊடுருவலைத் தடுப்பதற்காக மெக்சிக்கோ எல்லையில் 15ஆயிரம் வரையான இராணுவச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இட்டுள்ளார். பெரும்பாலான வெளிநாட்டினர் மெக்சிக்கோ எல்லை வழியாகவே அமெரிக்காவுக்குள் ஊடுருவுகின்றனர். அதைத் தடுப்பதற்காக மெக்சிகோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக எல்லை முழுதும் இராணுவத்தை நிறுத்திக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இது ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக அனுப்பப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்களை விட அதிகம் என்றும் அரசியல் இலாபத்துக்காக ட்ரம்ப் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் உள்நாட்டில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## முகநூலில் 81ஆயிரம் கணக்குகள் திருட்டு!

81ஆயிரம் வரையான முகநூல் கணக்குகளில் இருந்து பயனாளிகளின் தனிப்பட்ட செய்திகளை, இனையத்தளத் திருடர்கள் திருடி வெளியிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. எல்லாமாக 120 மில்லியன் முகநூல் கணக்குகளின் தனிச் செய்திகளை விற்பனை செய்ய முயற்சித்ததாக அதைச் செய்தவர்கள் செய்திச் சேவை ஒன்றுக்குத் தகவல் அனுப்பியுள்ளனர். இந்த நிலையில், தகவல்களை பாதுகாப்பதில் எல்லாமுன்னேற்பா டுகளும் செய்யப்படும் என்று முகநூல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

குருதி அழுத்தத்தைக் குறைக்கும்

## 'லிப்ஸ்டிக்' ஆபிரிக்கச் சாமியாரின் மருத்துவக் கண்டுபிடிப்பு



ஹறாரே.நவ.3

எச்.ஐ.வி, எய்ட்ஸ் மற்றும் புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்தைத் தாம் உருவாக்கியுள்ளதாகக் கூறிய, சிம்பாவேயைச் சேர்ந்த மதத் தலைவர் ஒருவரின் அலுவலகங்களைப் பொலிசார் சோதனை செய்துள்ளனர். 'ப்றோபெரிக் ஹீலிங் அண்ட் டெலிவரன்ஸ் மினிஸ்ட்ரீஸ்' எனும் அமைப்பின் தலைவராக உள்ள வால்டர் மகாயா என்பவர் அகுமா எனும் மூலிகை எச்.ஐ.வி வைரஸை அழிக்கும் ஆற்றலுடையது என்று கூறியிரு ந்தார். அகுமா மூலிகையால் செய்யப்பட்ட மாத்திரைகளைப் பல்லாயிரம்டொலர்கள் மதிப்பில் இணையத் தளம் மூலம் அவர் விற்பனை செய்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த மாத்திரை இன்னும் பரிசோதிக்கப்படவில்லை என்றும் பதிவுசெய்யப்படவில்லை என்றும் கூறியுள்ள அதிகாரிகள், அது நோயைக் குணப்படுத்தும் என்று கூறுவது தண்டல்னக்குரிய குற்றம் என்றும் கூறினர்.

இந்த சம்பவத்துக்குப் பிறகு, அந்த மாத்திரைகள் எச்.ஐ.வி, எய்ட்ஸ் போன்றவற்றைக் குணப்படுத்தும் என்று தாம்கூறிய கருத்தில் இருந்து பின்வாங்கியுள்ளார் அந்தச் சாமியார். அவை கடுமையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் என்று அரசு தெரிவித்துள்ளதாகச் சிம்பாப்வே அரசுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இந்த நிலையில் தான் குருதி அழுத்தத்தைச் சீராக்கும் என்று கூறி பெண்கள் உதட்டுக்குச் சாயம் பூசுதான உபகரணம் ஒன்றை (லிப் ஸ்டிக்) மகாயா அண்மையில் அறிமுகம் செய்திருக்கிறார்.

## ...மும் ஜெருசலேமுக்கு நகர்கிறது
## ...ம அமைச்சர் பெரு வரவேற்பு





பிரேசில் அதிபர்.

...ந்த ஜெரு ...செய்துள் ...இஸ்ரேல் ... நேதன்

...ங்களின் ...ருசலேம் ...ர் எனக் ... அங்கீக ...மெரிக்க ...நகராக ... டிசம்பர்

மாதம் அறிவிப்பு வெளியிட்டார். இந்த முடிவுக்கு எதிராக அரபு நாடுகள் போர்க்கொடி தூக்கின. எனினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இஸ்ரேல் நாட்டின் கிழக்கு ஜெருசலேம் நகரில் அமெரிக்க அரசு தனது புதிய தூதரகத்தை மே மாதம் திறந்து ஒரு புதிய அரசியல் அடையாளத்தை அந்த நகருக்கு அளித்தது. அமெரிக்காவைத் தொடர்ந்து கவுதமாலா, பராகுவே நாட்டின் தூதரகங்கள் ஜெருசலேம் நகரில் திறக்கப்பட்டன. இந்த நிலையில், பிரேசிலில் நடந்த அதிபர் தேர்தலில் புதிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட ஜயிர் போல்ஸ்னோரோ வெளியிட்டுள்ள அறிவிப்பில், இஸ்ரேலில் உள்ள பிரேசில் தூதரகம் டெல் அவிவ் நகரில் இருந்து ஜெருசலேம் நகருக்கு மாற்றப்படும் எனத் தெரிவித்துள்ளார். பிரேசில் அதிபரின் இந்த முடிவு வரலாற்று சிறப்புமிக்க முடிவு என இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அசியா பீபி விடுதலை விவகாரம்

# பாகிஸ்தானில் கலவரங்கள் நாட்டைவிட்டு வெளியேற அசியா முடிவு





இஸ்லாமபாத்.நவ.3

மத அவமதிப்பு வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கபட்டுப் பின்னர் உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட அசியா பீபியின் விடுதலையைக் கண்டித்துப் பாகிஸ்தானில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இதனால், பாகிஸ்தானை விட்டு அவர் வெளியேறுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து அவரது சகோதரர் ஜேம்ஸ் கூறும்போது, "எனது சகோதரிக்குப் பாகிஸ்தானில் பாதுகாப்பு இல்லை. இந்த நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர அசியாவுக்கு வேறு வழி இல்லை. பிரான்ஸ் மற்றும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகள் அசியாவுக்கு அடைக்கலம் தருவதாகத் தெரிவித்துள்ளன. அசியாவின் கணவர் அவர்களது குழந்தைகளுடன் பிரிட்டனிலிருந்து பாகிஸ்தான் வந்திருக்கிறார். அசியாவின் விடுதலைக்காக அவர்கள் காத்திருக்கின்றனர்" என்றார்.

பாகிஸ்தானின் பல இடங்களில் அசியாவுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதில் அசியாவைப் பொது வெளியில் தூக்கிலிட வேண்டும் என்று முழக்கங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பி வருகின்றனர். பாகிஸ்தானில் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அப்போது அசியா போன்ற அப்பாவிகள் பாதிக்கப்படமாட்டர்கள் என மற்றொரு புறம் சமூக ஆர்வலர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். வன்முறையாளர்கள் தொடர்ந்து மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டால் அரசு தனது கடமையைச் செய்யும் என்று பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

**பின்னணி**

பாகிஸ்தானில் லாகூர் புறநகர் பகுதியை சேர்ந்தவர் ஆசியா பீபி. அந்த நாட்டின் சிறுபான்மையினத்தவரான கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர், தனது அயல் வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாட்டின்போது முகம்மது நபியைத் தரக்குறைவாகப் பேசியதாக மத அவமதிப்பு வழக்கை எதிர்கொண்டு வந்தார். இதில் அவருக்குச் சாவுத் தண்டனை விதித்து 2010ஆம் ஆண்டு அந்த நாட்டின் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, சிறையில் அடைக்கப்பட்ட ஆசியா பீபி, தனது சாவுத் தண்டனையை நீக்கம் செய்யுமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன்றில் மேல் முறையீடு செய்திருந்தார். இவருடைய மேல் முறையீட்டை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி மியான் சகிப் நிசார் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை நடத்தி வந்தது. முடிவில் இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆசியா பீபிக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை நீக்குவதற்கு உத்தரவிடப்பட்டது.

சாவுத் தண்டனையில் இருந்து ஆசியா பீபியை விடுவித்து வெளியான தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத், லாகூர், கராச்சி உள்ளிட்ட பெருநகரங்களிலும் நாட்டின் பிறபகுதிகளிலும் இஸ்லாமிய அமைப்புகளைச் சேர்ந்த பலர் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

# twitter

அழகியகவிதை @SaranyaaaRaj

சிந்திக்கும்போது
ஆமையாகவும்,
செயல்படும்போது
மானாகவும்
இருக்க முயற்சிசெய்!



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள்.செயல்களில் முன் யோசனை அவசியம். தொழிலில் இலாபமடைய கூடுதல் கால அவகாசம் தேவை. விஷப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.

**இடபம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம்.தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள்.அளவான பண வரவு கிடைக்கும்.பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** தன்னை சார்ந்தவர்களின் சிரமம் உணர்ந்து உதவுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கு நிறைவேறும்.மேலதிக பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது அவசியம். தொழிலில் உள்ள இடையூறுகளை சரிசெய்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** பகைவரால் உருவான இடையூறு இஷ்ட தெய்வத்தால் விலகும்.தொழில் வியாபாரம் வியத்தகு முன்னேற்றம் பெறும்.பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கன்னி:** நல்லது செய்தாலும் சிலர் குறை சொல்வர்.சொந்த பணியில் கவனம் கொள்வது நல்லது.தொழில் வியாபாரத்தில் கூடுதல் முயற்சியினால் அனுகூலம் பெறுவீர்கள்.வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** -மனதில் கலை ரசனை அதிகரிக்கும்.பணிகளை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில்வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும்.ஆதாய பணவரவு உண்டு.

**விருச்சிகம்:** முன்யோசனையுடன் செயல்படுவீர்கள்.வெகுநாள் திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். தொழில் வியாபார நடைமுறை திருப்திகரமாகும்.

**தனுசு:** கவனக்குறைவால் பணிகளில் குளறுபடி ஏற்படலாம்.தொழிலில் உற்பத்தி விற்பனை ஓரளவுக்கு இருக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** மனதில் சஞ்சலம் தோன்றி விலகும்.தொழில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அத்தியாவசிய செலவுக்கு சேமிப்புத் தொகை பயன்படும்.

**கும்பம்:**மனதில்நிம்மதியும்பெருமிதமும் ஏற்படும்.தொழில் வியாபாரம் வளர்ச்சியால் புதிய வாய்ப்பு உருவாகும். அதிக பணவரவு பெறுவீர்கள்.

**மீனம்:**நண்பரின் உதவியால் நன்மை பெறுவீர்கள்.செயல்களில் உத்வேகம் பிறக்கும்.தொழில்வியாபாரவளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.தாராளமாக பணவரவு கிடைக்கும்.

## அரசியல் என்பது சாக்கடை தானோ?



மைத்திரி வந்தார்!
நல்லாட்சி என்றார்...!
மகிந்தர் ஊழல்வாதி என்று முழக்கமிட்டார். இப்போது சுதந்திரக்கட்சி வெற்றிபெற வேண்டுமெனில் மகிந்தர் ஆதரவு தேவை எனக் கலக்கமடைகிறார். நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பாகவே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக மயக்கம் தருகிறார். மொத்தத்தில் இது உண்மையான செய்தி என்றால், மைத்திரி புராணம் பாடியதமிழருக்குக்கிடைத்த இன்னொரு பலத்த அடி இது.




## 'மூடர்கூடம்' நவீனின் அடுத்த படம் 'அக்னிச் சிறகுகள்'

'மூடர் கூடம்' படத்தின் மூலம் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும், நடிகராகவும் அறிமுகமானவர் நவீன். முதல் படத்திலேயே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், நவீன் அடுத்ததாக 'அலாவுதீனின் அற்புதக் கமரா' என்ற படத்தை இயக்கி முடித்துள்ளார்.
இந்த நிலையில், நவீனின் அடுத்த படத்தில் விஜய் ஆண்டனி நாயகனாக நடிக்க இருப்பதாகவும் படக்குழு முன்னர் அறிவித்திருந்தது. அண்மையில் நடிகர் அருண் விஜய்யும் படக்குழுவில் இணைந்துள்ளார்.
ஷாலினி பாண்டே நாயகியாக நடிக்கும் இந்த படத்தில் பிரகாஷ்ராஜ், ஜெகபதி பாபு, நாசர் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிப்பதாக படக்குழு அடுத்தடுத்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.
இந்தப் படத்துக்கு அக்னிச் சிறகுகள் என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள சுவரொட்டியை நடிகர் கமல்ஹாசன் வெளியிட்டார்.









## இம்முறை தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் அலரிமாளி கையில் இருந்து நேரடியாக............

**காலை 6 மணி:**
"திண்ணையில கிடந்தவனுக்கு திடுக்குனு கல்யாணமாம்"தான்திடீர்எனதலைமைஅமைச்சர்ஆனதுபற்றி மனம் திறக்கிறார் மகிந்த.

**7 மணி:**
"கைக்கு கைமாறும் பணமே . உன்னை கைப்பற்றதுடிக்குதுமனமே"பதுளைமாவட்டஎம்பிவடிவேல்சுரேஷ் வழங்கும் காசு பணம் துட்டு மணி தொடர்பில் தனது அனுபவங்கள்

**8 மணி:**
"தேங்காய்உடைப்பா அல்லது ஆர்பாட்டமா. எதன் மூலம் தற்போதைய சூழலில் கவனத்தை ஈர்க்கலாம் பேருரையாற்றுகிறார் சிவாஜியார்

**9 மணி:**
"அம்மாச்சியில்இருந்துஅங்கயன்"தன்கையால்தானே உணவுஉண்ணும் பாசநிகழ்ச்சி

**11 மணி:**
உலகத் தொலைகாட்சிகளில் முதல் முறையாக மக்கள் தெருவுக்கு வந்து பல மாதங்கள் ஆகிய மெகா மொக்கு திரைப்படம் "நல்லாட்சியும் நாறிப்போன எதிர்கட்சிகளும்"திரைபடத்தைஇணைந்துவழங்குவோர்ஐரோப்பிய மற்றும் அமெரிக்க ராஜதந்திரிகள்


**4 மணி:**
"சாமியேசைக்கிள்ளபோகபூசாரிபுல்லட் கேட்டானாம்" தான்தீடிர்னுகட்சிதொடங்கியதுபற்றி உள்ளூரிலிருந்து மனம் திறக்கிறார் அனந்தி

**6 மணி:**
"அமரேந்திரபாகுபலிஆகியநான்"சம்பந்தர்சிறப்புபேட்டி

**7 மணி:**
உலகதொலைகாட்சியில் முதல் முறையாக குறுகிய நாள்களில்எடுக்கப்பட்டரணிலின்நகைச்சுவைதிரைப்படம் "நான் ஒரு ராசியில்லா ராஜா

**நேயர்களே தீபாவளி நிகழ்ச்சிகளை கண்டுகளியுங்கள் தீபாவளி திருநாளில் இன்பம் பொங்கட்டும்**

# நண்டின் தந்திரம்



ஒரு குளக்கரையில் வயது முதிர்ந்த கொக்கு ஒன்று வசித்து வந்தது. அதன் உடல் நிலை தளர்ந்து போனதால் மீன்களைப் பிடித்து அதனால் உண்ண முடியவில்லை. அதனால் மனதில் திட்டம் ஒன்றை வகுத்தது கொக்கு. அதன்படி குளக்கரையை நோக்கிச் சென்ற கொக்கு வாடிய முகத்துடன் மிகச் சோகமாக நின்றது. தனது அருகில் வந்த எந்த மீன்களையும் அது பிடிக்கவில்லை. இதை அவதானித்த சில மீன்கள் கொக்கின் அருகில் சென்றன.

"கொக்காரே! ஏன் இன்று நீர் மிகவும் சோகமாக இருக்கின்றீர்?" எனக் கேள்வி எழுப்பின. அதற்கான பதிலுடன் தயாராக விருந்த கொக்கும் அவற்றைப் பார்த்து "சிறிது காலத்தில் இந்தக் குளம் வற்றிவிடப் போவதாக அறிந்தேன். இந்தக் குளத்திலுள்ள அனைவரும் இனி உயிருடன் வாழ முடியாது. அததை நினைத்துத்தான் நான் கவலையில் இருக்கிறேன்" எனப் பதில் கூறியது. அதன் பேச்சை உண்மையென்று நம்பிய மீன்கள் அனைத்தும் பயத்தில் நடுங்கின.


மீன்கள் அனைத்தும் தம்மை எப்படியாவது இந்தக் குளத்திலிருந்து காப்பாற்றுமாறு கொக்கிடம் வேண்டின. கொக்கும் சிறிது நேரம் யோசிப்பது போலப் பாசாங்கு செய்தது. பின்னர் மீன்களைப் பார்த்து. அரகில் தானே பெரிய குளம் ஒன்று உள்ளது. உங்கள் அனைவரையும் நானே காவிச் அங்கு விட்டுவிடுகிறேன்" எனத் தந்திரமாக பதில் கூறியது. கொக்கின் கபடத்தனமான பேச்சை நம்பிய அனைத்து மீன்களும் கொக்குடன் புறப்படத் தயாராகின. அதன்படி கொக்கு முதலில் ஒரு பெரிய மீனொன்றைச் சுமந்தபடி தனது பயணத்தை ஆரம்பித்தது.

மீனுடன் சென்ற கொக்கு வெகு தூரத்திலுள்ள கற்பாறை ஒன்றை அடைந்தது. அந்தக் கற்பாறையில் மீனை அடித்துக் கொன்று தனது உணவாக்கிக் கொண்டது. இவ்வாறு கொக்கு தனக்குப் பசியெடுக்கும் போதெல்லாம் குளத்துக்குச் சென்று அங்குள்ள மீன்களை ஒவ்வொன்றாக தூக்கி வரும். பின்னர் கற்பாறையில் வைத்து அம்மீன்களைக் கொன்றபின் அவற்றைச் சுவைத்து உண்ணும். இதைக் கொக்கு வழக்கமாகக் கொண்டிருந்தது. இவ்வாறு நாள்கள் பல கடந்து போயின. வழமை போலவே கொக்கு ஒருநாள் குளக்கரையை வந்தடைந்தது. கொக்குடன் செல்வதற்கு அக்குளத்திலுள்ள நண்டு ஒன்று தயாராகக் காத்திருந்தது. தொடர்ந்து மீன்களைச் சுவைத்த கொக்கு நண்டைக் கண்டதும் மகிழ்ச்சியில் திழைத்தது. அதை ருசி பார்க்கும் எண்ணத்துடன் அதன் அருகாகச் சென்றது. மிகவும் நண்டு மிகவும் பெரிதாக இருந்ததால் அதை முதுகில் ஏற்றிக் கொண்டது. பின்னர் வழக்கமான திசையை நோக்கிக் கொக்கு தனது பயணத்தைத் தொடங்கியது.


கொக்கின் முதுகில் அமர்ந்த நண்டு கீழே தன் பார்வையைச் செலுத்தியவாறு இருந்தது. நீண்ட நேரமாகியும் அதன் கண்களில் குளம் எதுவும் தென்படவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் "நண்பா இங்கு மிக அருகில்தான் குளம் இருப்பதாகக் கூறினாயே! ஆனால் இதுவரை குளம் எதுவும் தென்பட வில்லையே!" என நண்டு கேட்டது. கொக்கு நண்டின் கேள்விக்குப் பதில் ஏதும் கூறாமல் தன் இலக்கு நோக்கிச் சென்றது.

இப்போது நண்டின் பார்வைில் கீழே பாதையொன்றில் மீன்களின் எலும்புகள் சிதறிக் கிடப்பது தெரிந்தது. அதிர்ச்சியடைந்த நண்டு தன் கதியும் இதுதானோ" என எண்ணியது. ஒரு கணமும் தாமதியாது தன் கொடுக்கினால் கொக்கின் கழுத்தைப் பலமாக நெரித்தது. நண்டின் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த கொக்கு கீழே விழுந்து துடிதுடித்து இறந்தது.

நண்டு மற்றைய மீன்களைக் காப்பாற்றிய பெருமையுடன் கடற்கரையோர பாதை இடுக்குகளில் சென்று ஒதுங்கிக் கொண்டது. எமது சுயநலனுக்காக நாம் மற்றவர்களை மோசம் செய்தால் இறுதியில் நாமே அழிந்து போவோம்.




# வழிகாட்டுவோம்



## புயற்காற்று வீசும் போது...



- பொதுவாகக் காற்று வீசும்போது அது மக்களுக்கு நன்மை அளிப்பதாகவே இருக்கும்.
- ஆனால் அது புயலாக மாறும்போதுபெரும் தீமைகளையே உண்டு பண்ணுகிறது
- புயற்காற்றைச் சூறாவளி என்றும் அழைப்பர்.
- சூறாவளிவீசும்போது வீட்டுக்கூரைகள் தூக்கிவீசப் படுகின்றன.
- பெரிய மரங்கள், கிளைகள் முறிந்து விழுகின்றன. வாழைத்தோட்டங்கள்பெரும்சேதத்துக்கு உள்ளாகின்றன.
- வீதி ஓரங்களில் நிற்கும் மரங்கள் முறிந்து விழுவதால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படுகின்றன. மின்விநியோகம் முற்றாகத் தடைப்படுகிறது.
- சிறிய குடிசை வீடுகள் தரைமட்டமாகின்றன. மக்களுக்குப்பெரும்நஷ்டமும்கஷ்டமும்ஏற்படுகின்றது.




சக்கரத்தில் ஒரு சொல்லை ஆக்க இரண்டு எழுத்துக்கள் வீதம் கொடுக்கப்பட்டுள்ளன. 3ஆவது எழுத்தை வெற்றுக் கூட்டில் எழுதிச் சொல்லை ஆக்குவோம்.



## வீட்டு விலங்குகள்



எங்கள் வீட்டின் காவலன்
எனக்கு நல்ல நண்பனாம்
நாய்தான் அந்தச் சேவகன்
வாழ்நாள் எல்லாம் உழைப்பவன்

புல்லைத் தின்னும் பசுமாடு
பாலைக் கொடுக்கும் அன்போடு
வேளை தவறாது வழிபாடு
அதுவே நமது பண்பாடு

எங்கள் வீட்டு பூனைக்குட்டி
எங்கும் சுற்றிவரும் படுசுட்டி
எலிகள் அதற்கு வெலக்கட்டி
எங்கள் கவலைகள் போச்சு எட்டி

வீட்டில் வளருது வெள்ளாடு
காட்டில் மேயுது பசியோடு
காந்திக்குப் பிடித்தது ஆட்டுப் பாலு
ஆட்டுக்கு நீயும் அன்பைக் காட்டு

வண்டி இழுக்கும் எருது
உண்டி கொடுக்கும் உழுது
தொண்டு புரியுது எருது
கண்டு நீயும் பழகு

இவைகள் வீட்டின் விலங்குகளே
குறைகள் இல்லா செல்வங்களே
அன்பை அவற்றிடம் காட்டுங்களேன்
அவனியில் வாழும் மனிதர்களே

## பொன்மொழிகள்

1. ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும். நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் இருக்கும்.
   ஹால்டேன்
2. நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து
   கௌலி
3. நம்பிக்கை பயத்தைப் போக்கு ஒரு சாதனம்
   வில்லியம்ஸ் ஜேம்ஸ்
4. நாம் விழும் ஒவ்வொரு தடவையும் மீண்டும் எழுவதற்கே என்று நம்புங்கள்
   ஷேக்ஸ்பியர்
5. பணத்தின் மீது நம்பிக்கை வை நம்பிக்கையான இடத்தில் பணத்தை வை
   ஹோம்ஸ்
6. நம்பிக்கை இழந்தவன் உயிரற்ற உடம்புக்கு ஒப்பாவான்
   வைட்டியல்
7. நம்பிக்கையைப் பிறர் தர முடியாது அது உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும்.
   காந்தியடிகள்
8. நம்பிக்கை என்பது ஒருநாளில் உதிர்ந்துவிடும் பூவாக இருந்து விடக் கூடாது. மேலும் மேலும் மலர்களை உருவாக்கும் செடியாக இருக்கவேண்டும்.
   அரிஸ்டாட்டில்
9. நம்பிக்கையே ஏழையை வாழவைக்கும்
   சாணக்கியர்
10. நம்பிக்கைஎண்ணற்றஎதிரிகளையும்வென்று விடும்.
   வாங்ஃபெல்லோ



# ‘விசர்நாய்க்கடி’

## மிகக்கொடிய உயிர்க்கொல்லி நோய்

சுப்பிரமணியம் கஜறஞ்சன்

‘விசர்நாய்க்கடி’ நோய் என்பது மிகக்கொடிய உயிர்க் கொல்லிநோய் ஆகும். இது ‘றப்டோ’ எனப்படும் வைரசால் ஏற்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, ‘நாய், பூனை, நரி, வௌவ்வால், கீரி, ஓநாய்’ போன்ற விலங்குகளால் இந்த நோய் ஏற்படுகின்ற போதும், 99 வீதமான பாதிப்பு ‘றேபீஸ்’ தொற்றுக்குள்ளான நாய்கள் மூலமே ஏற்படுகின்றது.

இந்தக் கொடிய நோயின் தாக்கம் தெரு நாய்கள் அதிகமாகக் காணப்படுகின்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே அதிகளவில் காணப்படுவதையும், ஒவ்வோர் 15 நிமிடத்துக்கும் ஒருவர் என்ற வீதத்தில் ‘றேபீஸ்’ நோய்த் தொற்றால் சாவடைவதையும் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்த நோய்த் தொற்றுக்கு குறிப்பாக, “நாய்க்கடி அல்லது உமிழ்நீர் தொற்றுக்கு உள்ளானோர், நகக்கீறல்கள் உடையோர்” உடனடியாக மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நோய்த் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். காலதாமதமாகி நோய் அறிகுறிகள் தென்படத் தொடங்கிய பின்னர் சிகிச்சை பெறுவது பயனளிக்காது என்பதுடன், உயிரிழப்பு என்பது நிச்சயமாகிவிடும். பொதுவாக சிறுவர்களே நாய், பூனையுடன் அதிகளவில் தொடர்புறுவதால் இந்த நோயின் தாக்கம் சிறுவர்களையே பெரிதும் பாதிக்கின்றது.

ஆரோக்கியமான தடுப்பூசி ஏற்றப்படாத நாய்களை ‘வெறிநாய்கள்’ கடிப்பதால் கடிக்கப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு 10 நாள்களில் இருந்து இரண்டு மாத காலப்பகுதிக்குள் நோய் ஏற்படும். தலைப்பகுதிக்கு அண்மையில் கடிகாயம் ஏற்பட்டால் விரைவாக நோய் ஏற்படும். கடிக்குள்ளான நாய்கள், ‘பியுரியஸ்’ எனப்படும் மிக அதிகமான வெறித்தன்மையையும், ‘டம்ப்’ எனப்படும் குறைவான வெறித்தன்மையையும் அறிகுறிகளாக வெளிக்காட்டும்.

இந்த நோயின் தாக்கத்திலிருந்து பொது மக்களைப் பாதுகாப்பதற்காகவும், இந்த நோயை எமது நாட்டில் இருந்து முற்றாக அகற்றுவதற்காகவும் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை நடப்பு வருடத்தில் முன்னெடுத்து வருகிறது. இவற்றில் மிக முக்கிய நடவடிக்கைகளாக, “வளர்ப்பு நாய்கள் மற்றும் தெருநாய்களுக்கு இலவச விசர்நாய்த் தடுப்புசி ஏற்றல், நாய்களின் பெருக்கத்தைக் குறைப்பதற்கு இலவச கருத்தடைச் சத்திர சிகிச்சை, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ‘றேபீஸ்’ நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள்.” வடமாகாணத்தின் சகல மாவட்டங்களிலும், சகல கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே செல்லப்பிராணி வளர்ப்பாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரைத் தொடர்பு கொண்டு மேற்படி சேவைகளைத் தவறாது பெற்றுக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களையும், செல்லப்பிராணிகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். எமது நாட்டில் இருந்து ‘றேபீஸ்’ எனப்படும் கொடிய நோயை முற்றாக ஒழிப்பதற்கு ஒத்துழைப்பையும், வினைத்திறனான செயலாற்றுகையும் வழங்க முன்வாருங்கள்.

*கட்டுரையாளர்:*
*கால்நடை மருத்துவர்,*
*கிளிநொச்சி.*

# தமிழும் மனிதமும் செழிக்கட்டும்!

வி.தவநேசன்

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்றன. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை எடுத்துக்காட்டி நிற்கின்றன. அந்தவகையிலே தமிழர் பண்பாட்டின் கூறுகள் பற்றி நோக்குவோம்.

**வீரம்!**

பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. ‘தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை’ என்ற நால் வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன. ‘வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை’ என்ற நான்கு புறத்திணைப் பகுதிகளிலும் தமிழர்களின் போர்முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

அக்காலத் தமிழர்களிடம் அறப்போர் முறையே அமைந்திருந்தது. இதை நெட்டிமையார் புறப்பாடலால் அறியலாம். “பசுக்களும், பசுவை ஒத்த பார்ப்பனர்களும், பெண்களும், நோயுடையவர்களும், புதல்வர்களை பெறாதவரும், யாம் அம்பு விடுவதற்குமுன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள்.” என வீரன் ஒருவன் கூறுவதிலிருந்து தமிழரின் அறப்போர் முறை பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

*ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்*
*பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்*
*தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்*
*பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்*
*எம் அம்பு கடிவிடுமுன் நும் அரண்சேர்மின்!*

மேலும், “வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர்”’ என அனைவர் மீதும் படைக்கலம் செலுத்தலாகாது என்பதையும் புறநானூற்றின் வழி அறிய முடிகிறது.

**காதல்!**

தமிழர்கள் காதலை அன்பின் ஐந்திணை என்று குறிப்பிட்டனர். இஃது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட மன ஒருமைப்பாடுடைய தூயகாதல் வாழ்க்கையாக விளங்குகிறது. இது களவு, கற்பு என இரு வகைப்பாடாக அமையும். ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்கு பவர்கள் அறிவும், செல்வமும் உடைய நல்லகுலத்தில் பிறந்தவர்கள். இந்தக் காதல் நாடகத்தில் தலைவன், தலைவி, நற்றாய், செவிலித்தாய், தோழி போன்றோரும் ஊர் மக்களும் பாத்திரங்களாக வருவர். இந்தக் காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிப்பட்ட நெறியாக அமையும்.



*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு!*
என்று வள்ளுவரும் காதல் வழிவந்த மனை மாட்சியைச் சிறப்பிக்கின்றார்.

**நட்பு!**

சங்ககாலத் தமிழர்கள் நட்பைப் பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

*முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு!*
அதாவது, உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்புக் கொள்வதே உண்மையான நட்பாகுமென்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். கபிலரும் பறம்பு மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தனர். பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின் கபிலரே மணமுடித்து வைக்கிறார்.

மேலும், கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கண்டு பறம்பு நாட்டின் வளம், பாரியின் சிறப்பு, அவன் வீரம், அவனைப் பிரிந்து வாடும் மக்கள் நிலையைக் கூறுகிறார். இங்கு தன் வறுமையைக் கூறாது, நண்பனின் பிரிவை சேரமன்னனிடம் கூறும் நிலை அவர்கள் நட்பின் ஆழத்தை எடுத்துக்காட்டுகிறது. கோப்பெருஞ்சோழன் மக்களிடம் நாட்டை விட்டு மனம் நொந்து வடக்கிருந்து உயிர் துறக்க முயல்கிறான். அது கேட்டு, இதுவரை கோப்பெருஞ்சோழனை நேரில் பாராமலே நட்புக்கொண்டிருந்த புலவர் பிசிராந்தையார் தாமும் நண்பனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க வந்து விரும்பியவாறு உயிர் துறக்கிறார்.

*அழிவி னவை நீக்கி, ஆறுய்த்து அழிவின்கண்*
*அல்லல் உழப்பதாம் நட்பு!*
என்ற வள்ளுவரின் வாக்குப்படி தீமையை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் வரும்போது உடனிருந்து அனுபவிப்பதே நட்பாகும் என்பதற்குத் தாமே சான்றாகிறார் பிசிராந்தையார். அதியமான் நெடுமானஞ்சியிடம் நட்புக் கொண்ட ஔவையார் தொண்டைமானிடம் சென்று அதியமானின் வீரம் வெளிப்படுமாறு வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடி, நடக்கவிருந்த பெரும்போரைத் தடுத்ததும் சங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்திகளாகும். அதியமானும் அமிழ்தினும் இனிய நெல்லிக்கனியை தானுண்ணாது ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான். சங்க காலத் தமிழர் நட்பைப் பெரிதும் மதித்துப் போற்றினர்.

**விருந்தோம்பல்!**

‘விருந்து’ என்ற சொல்லுக்குப் ‘புதுமை’ என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியவர்களாக நம்மிடம் வரும் மக்களை ‘விருந்து’ என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து, இடமளித்து, உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

*செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு!*
என்கிறார் திருவள்ளுவர்.
“அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல் ஆகிய அறங்களைத் தான் செய்யாது விட்டேன்.” என்று கண்ணகி வருந்திக் கூறுவதைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

*விருந்து புறத்ததார் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று!*
என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமையை அறிய முடிகிறது.

**கற்புடைமை!**

சங்க கால மக்களின் இல்லறம் நல்லறமாக நடந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது. பெண்கள் தற்காத்துத் தற் கொண்டாள் பேணி, சொற்காத்துச் சோர்வு இல்லாதவர்களாகக் கற்புக் கடம்பூண்டு இருந்தமையை அறிய முடிகிறது. திருவள்ளுவர் இது பற்றிக் குறிப்பிடும் போது,

*தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை!*
என்று கூறுகிறார். காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மதித்து வணங்கப்பட்டனர்.

**ஈகை!**

கொடையிலிருந்து வேறுபட்டது ஈகை. திருவள்ளுவர் ஈகைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

*வறியார்க்குஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்*
*குறியெதிர்ப்பை நீரது உடைத்து!*
என்னும் குறளில், “பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும். பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது” என்கிறார் வள்ளுவர். இதிலிருந்து ஈகை என்பது, “வறியவர்களுக்கு பிரதி உபகாரம் எதிர்பாராது கொடுக்கும் சிறு உதவியே” எனக் கொள்ளலாம். வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமென்று சங்ககால மக்கள் எண்ணி வாழ்ந்தனர். ■

தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு யாழ்நகரில்
மாபெரும்

## மலிவு விற்பனை

# 50%
## விலைக் கழிவு

ஆண், பெண், சிறார்களுக்கான
அனைத்து விதமான ஆடைகளும்
நவம்பர் மாதம் 3ம், 4ம் மற்றும் 5ம்
திகதிகளில்

இடம் : யாழ்ப்பாணம் YMCA (கச்சேரி) மண்டபம்

Signature
The Achiever's Choice

தொடர்புகளுக்கு : 0772398381 / 0774766296

---

Rasi Collections

தீபத்திருநாளை முன்னிட்டு

# ராசி கலக்ஷன்ஸ்

## அதிரடி விலைக் கழிவு



சாரி வகைகள், சல்வார்வகை,
ரொப் வகைகள், ஸ்கேட் வகைகள்,
பிளவுஸ் வகைகள், ஆண்கள் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள்
மேலும் பல ஆடை வகைகள் அதிரடி
விலைக்கவு

**இன்றே முந்துங்கள்**

| | | |
|---|---|---|
| சாறி | 14,500.= | 7,500/= |
| கொட்டன் சாறி (Officeware) | 2,000.= | 1,500/= |
| சில்க்ஸ் சாறி | 1,200.= | 750/= |
| ரொப் | 2,000.= | 1,200/= |
| ரொப் | 1,400.= | 500/= |
| லெக் ஜீன்ஸ் | | 450/= |
| T.சேர்ட் | 1,200.= | 600/= |
| ரவுஸ்சர் | 2,500.= | 1,000/= |
| சல்வார் துணிகள் | 4,000.= | 1,500/= |
| பிளவுஸ் வகைகள் | 250/= முதல் | 900/= வரை |

சல்வார்கள் 5,000/= முதல் 500/= வரை

**உங்கள் தெரிவுகளுக்கு**
**இன்றே முந்துங்கள்**

☎ 021 222 5571

199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# தீபாவளி விசேட தள்ளுபடி

## புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500~~/= | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000~~/= | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000~~/= | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000~~/= | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500~~/= | 1000/= |

# 15% - 50% வரை
## விலைக்கழிவு

15000/= இற்கு மேல் கொள்வனவு
செய்யும் ஒவ்வொருவருக்கும்
அழகிய சுவர் கடிகாரம் இலவசம்

லெகீன்ஸ் 3 இற்கு
1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு 5000/= பெறுமதியான சாறி ஒன்று
இலவசம்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 16.10.2018 - 06.11.2018 வரை**




**தச்சன்தோப்பு**
**சிந்தாமணிப்**
**பிள்ளையார் ஆலயம்,**
**கரவெட்டி**

## கந்தபுராண படன பூர்த்தி

கந்தபுராண படன பூர்த்தியும் உற்சவமும்
**நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை**
இடம்பெற திருவருள் பாலித்துள்ளது.
**அன்று காலை 6.30 மணிக்கு**
காலைப் பூசையைத் தொடர்ந்து **வள்ளியம்மை**
**திருமணப் படல படனம்** ஆரம்பமாகி மாலையில்
நிறைவுபெறும். தொடர்ந்து **பூர்த்தி உற்சவமும்**
நிகழும். அடியார்கள் கலந்துகொண்டு திருவருள்
பெற்றுய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**- ஆலய நிர்வாக சபையினர் -**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பையா**
**திருநாவுக்கரசு**
(இ.போ.ச.சாரதி)

தோற்றம்
09.09.1925

மறைவு
19.10.2014

திதி:- ஏகாதசி

அப்பா காலங்கள் கடந்தாலும் ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்
அன்பின் அடையாளம் நீங்கள் தான் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

**மூர்த்திவாசம்,**
**முருகமூர்த்தி வீதி, சங்கானை.** **குடும்பத்தினர்.**

(CS20932)(11,17)

## கடை வாடகைக்குண்டு

ஸ்ரான்லி வீதியில் கீழ்க்கடை
வாடகைக்குண்டு.
அதன் மேல் மாடி கடை அலுவலகத்
தேவைக்கு பயன்படுத்தக் கூடியது.
( அடிப்படை வசதிகள் உண்டு)
**077 618 1515**

(CS 20956) (14,0)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்,
கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம்,
கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம்
25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5'6"
உடைய மணமகனுக்கு நற்குணமுடைய
அழகிய, படித்த, மணமகள் தேவை.
(மணமகன் கொழும்பு வந்துள்ளார்)
**077 978 0205 (தந்தை)**

(es - 14684) (13,17)




ABI Fashion World

புதிய ரகங்கள்! நீங்கள் விரும்பும்
விலையில் உங்கள் அபி பஷன் வேல்ட்
காட்சியறையின் 03 ஆவது தளத்தில்...

விழிகள் வியக்கும் ஒளி விழா தீபாவளி திருவிழா

**இது அபி பஷனின் நம்ம வீட்டுத் தீபாவளி !**

**அபி பஷன் வேல்ட் இன்**

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

50% வரையான தீபாவளி சிறப்பு அதிரடி விலைக்கழிவு

இச்சலுகை 05.11.2018 வரை மட்டுமே
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)






112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)
021 222 3738
f abifashionworld


## மரண அறிவித்தல்
### இறைகரம் இணைந்த செய்தி



### திருமதி அழகுமணி செபஸ்தியம்மா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10.06.1929 | 31.10.2018 |

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா, லண்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அழகுமணி செபஸ்தியம்மா 31.10.2018 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு.மடுத்தீஸ் அழகுமணியின் அன்பு மனைவியும், திரு.மாட்டீன், திருமதி மகேஸ்வரி யோண்சன், திரு.ராஜகுலசூரியர், திரு. தேவகுலசூரியர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி தனவதி மாட்டீன், திரு.அருளப்பு ஜோண்சன், திரு. ராஜகின் ராஜகுலசூரியர், திருமதி பிலோறன்ஸ் பெனற் தேவகுல சூரியர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அன்ரன், நீனா, கீரன், ஜொணி, ஜொணித்தா, அன்ரனிற்றா, அலெக்சியா, அலெக்ஸ்சாந்திரா அலன், யூடித், யூட் ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும், கயல்விழியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 51, ஈச்சமோட்டை பீச்றோட், பாஷையூர் என்னும் முகவரியிலிருந்து இன்று (03.11.2018) சனிக்கிழமை மதியம் 3 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயைகூர்ந்து கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: பிள்ளைகள்.**

(CS/20975)(11,17)

**தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் - 076 296 2042**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 . 10 . 1968 | 31 . 10 . 2018 |

### திருமதி புஸ்பவதி (புஸ்பா) சற்குணராசா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் M.S.லேன் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி (புஸ்பா) சற்குணராசா 31.10.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் லிங்கேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் சற்குணராசாவின் அன்பு மனைவியும் சர்மிலா, பர்மிலா, சியாமிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சமன்ராஜ், தினேஸ் ஆகியோரின் அன்பு மாமியும் லுகுணதாஸ் காலஞ்சென்ற சதீஷா மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் டக் ஷா, றெஷ்வின், விகாஷ், தாய்ஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது தாயாரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**M.S. லேன், கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்: கணவர்.**

(CS 20974) (14,17)

**021 205 3607**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி மார்க்கண்டு



நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மார்க்கண்டு கடந்த (31.10.2018) புதன் கிழமை நயினாதீவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து (சி.நா.) நாகலெட்சுமிதம்பதியரின் அன்பு மகளும் முருகேசு தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் மற்றும் சிவகுமாரன் (ஜேர்மனி), பாலகுமாரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ராகினி மற்றும் செந்தில் குமரன் (நயினைM.குமரன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான முத்தையா, மதியாபரணம், சண்முகநாதன் மற்றும் நாகராசா, பரமேஸ்வரி, கனகாம்பிகை (கனடா), காலஞ்சென்ற ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரியும் மங்கையற்கரசி (சுவிஸ்), பவளமலர் (ஜேர்மனி), கயனி (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (முன்பள்ளி ஆசிரியை, நயினாதீவு) ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சீவன், சரண்ஜன், அபிரகா, தாட்சாயினி, தர்சன், தனுசன், வினுஷன், விவேக்கா, பவிசன், தர்சிகன், சாயீசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நாகம்மா காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லமுத்து, சிவக்கொழுந்து, இராசம்மா, பொன்னம்பலம் மற்றும் தாமோதரம்பிள்ளை (கனடா), காலஞ்சென்றவர்களான கமலவதி, சோதிமணி, யோகம்மா மற்றும் தங்கம்மா (இந்தியா), அமுதவல்லி காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை, சந்திரசேகரம், பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 611 0804**

---



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 31 |
| 08 | 10 |
| 1942 | 2018 |

## முருகன் சுப்பிரமணியம்

யாழ். இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சுப்பிரமணியம் கடந்த (31.10.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - வள்ளி தம்பதிகளின் இளைய மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் சரஸ்வதி மற்றும் லட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரரும் சிவகுமார் (ஜேர்மனி), சுதாஜினி (கனடா), பிரபாகரன் (ஜேர்மனி), தர்ஷினி (ஆசிரியை - யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜினி (ஜேர்மன்), தர்மபாலன் (கனடா), ஈஸ்வரி (ஜேர்மன்), ஜனார்த்தனன் (முகாமையாளர் - ஜனசக்தி காப்புறுதி நிறுவனம், நெல்லியடி) ஆகியோரின் மாமனாரும் சிந்துஜன், செந்துரதன், சிந்திகா, சந்தோஷ், சரண்யா, சஹானா, சுபேத்தா, சுஜித்தா, செரோஜ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகுமார் (ஜேர்மன்) +492013194487,**
**பிரபாகரன் (ஜேர்மன்) +4917662190162,**
**ஜனார்த்தனன் +94777684068**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 20980/15/17)

---

## 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **லில்லி ராஜா**
மறைவு: 03.11.1987
ஆத்ம சாந்திக்காக பிராா்த்திக்கும்...
மகேந்திரன், இந்திரன், வசந்தி
RTD.SLAF Consultant Australia
80/3, Maevilla, Udvil.

உதயன்
விளம்பரதொடர்புகளுக்கு
advt@uthayan.com

## யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, தேசிய பாடசாலை
## சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு விடுதல்

யா / நெல்லியடி மத்திய கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை 01.01.2019 முதல் 31.12.2019 வரை குத்தகைக்கு விடுவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விண்ணப்பப் படிவத்தை 05.11.2018 முதல் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 15.11.2018**


- அதிபர் -




# மரண அறிவித்தல்

## அருணாசலம் பரமசாமி

**(ஓய்வுபெற்ற முகாமையாளர்**
**கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம்)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.08.1937 | 01.11.2018 |

கோப்பாய், "இராதம்பு" வைப் பிறப்பிடமாகவும் இல. 118, இரத்தினபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பரமசாமி (ஓய்வுநிலை முகாமையாளர் - எரிபொருள் நிரப்பு நிலையம், கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) கடந்த (01.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் பாசமிகு கணவரும் சங்கீதா (சுவிஸ்), பிரகீதா (லண்டன்), நிரோசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஸ்ரீபாஸ்கரன் (பிரபு), கனகேஸ்வரன் (சுவிஸ்), வித்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவபாதம், அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீகாந்தபாலா (திருவையாறு மகா வித்தியாலயம்), தர்மஸ்ரீபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சௌமியா, சாருஜா, சிந்துஜா, பிருந்தாபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இரத்தினபுரம் கிளிநொச்சியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 118, இரத்தினபுரம்,**
**கிளிநொச்சி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 853 3754**

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில்
சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றும்
**திருமதி பிளமிங் ஜேன்டிலானி** அவர்களின்
பாசமிகு தந்தையார்


**வஸ்தியாம்பிள்ளை ஜேசுதாசன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,**
**பிரதேச செயலகம், கண்டாவளை.**

(AKN/S87)(11,17)

## மரண அறிவித்தல்கள்



### முத்து வேலாயுதம்

**மண்ணில்** 15.01.1930 — **விண்ணில்** 31.10.2018

யாழ்ப்பாணம் பிரம்படி கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து வேலாயுதம் 31.10.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - அன்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி -சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் தேவி, ராஜரட்ணம்(டென்மார்க்), சூரியகுமார் (டென்மார்க்), ராஜகுமார்(பிரான்ஸ்), நாகேஷ்வரி, அஜந்தினி, விஜய குமார்(Veterinary surgeon Colombo), அஜந்தா(பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் துரைராஜசிங்கம், வசந்தா, ரசீந்திரா, அனுஷா, இரத்தினசிங்கம், விக்னேஷ்வரன், பவித்ரா(HNB) ஆகியோ ரின் மாமனாரும் ஜெனி, ஜெனா, ஜென்சி, லக்ஷிகன், துளக் ஷிகா, கஸ்தூரி, கோபி, அருண், ஹேமமாலினி, அபிராமி, றம்ஜா, கபில்ராஜ், ஜிந்துஜா, டிலக் ஷன், பானுஷா, சதுஷ்ரிகா, ஷெவோன், ஜெரோம், விஜயமோகன், குணசீலன், வினோத் ஆகியோரின் அன்புப் பேரனும் எபிரோன், எப்ஸிபா, மென்கா, தனியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**பிரம்படி லேன்,**
**கொக்குவில் கிழக்கு.** (CS 15680) (14)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 603 4660/ 077 317 8756**

---

+



**பிறப்பு** 18 . 03 . 1939 — **இறப்பு** 02 . 11 . 2018

" ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகமதிப்பிற்குரியது "

திருப்பாடல் 116: 15

### சங்கரப்பிள்ளை சாமுவேல் குணநாயகம் (கிளி மாமா)

*(முன்னாள் பட வரைஞர் - Draughtsman)*

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சாமுவேல் குணநாயகம் (கிளிமாமா) 02.11.2018 நேற்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி வழிபாடு நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணியளவில் திருநாவற்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புகழ் உடல் இறம்பைக்குளம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருநாவற்குளம்,**
**வவுனியா.** (CS 00411) (14)

**தகவல்: குடும்பத்தினர்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்** 27.12.1948 — **விண்ணில்** 14.11.2017

அமரர்

### தம்பிஐயா நகுலேஸ்வரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**திதி - ஏகாதசி**


எங்கள் குடும்பத்தலைவரே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**"திருப்பதி"**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**என்றும் நினைவில் :**
**குடும்பத்தினர்.**

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்தலும்



கடந்த 04.10.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் Lion தம்பையா கைலாசநாதன்

**(Retired Radio grapher)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.11.2018) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


அத்துடன் எமது துயரில் நேரடியாகப் பங்கு கொண்டவர்களுக்கும் எல்லா வகையிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் மறவாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முருகோதயம்,**
**K.K.S வீதி, இணுவில்.**

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 22 . 07 . 1936 — **மறைவு** 01 . 11 . 2018

### கந்தையா ஆறுமுகம்

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் 01.11.2018 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், கந்தராசா, சிவச்செல்வி, பொன்வாசன், அருள்மொழி ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன், மதிவதனி, கோமதி, சிவசத்தியசீலன் ஆகியோரின் அன்புமாமனாரும், ஜனகன், ஆரணியா, லதுஜா, பொன்தீபிகா, பொன்தேனுகா, செங்கோ, அனுசா, லலிஷா, அனுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2018 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கனடா.**
**இடைக்காடு, அச்சுவேலி.** (CS/20966)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

---

## நாடாளுமன்றம்...

தலைவர் மைத்திரிபால கூறியுள்ளார். அரசிதழ் அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு நாடாளுமன்றம் கூட்டபடுவதன் ஊடாக ஜனநாயகமும், அரசமைப்பும் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை காணப்படுவதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், சபாநாயகர் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டின் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் காரணமாக ஏற்படத்தக்க பின்விளைவுகள் குறித்து சபாநாயகராக மாத்திரமன்றி, இந்த நாட்டின் குடிமகனாகவும் அச்சமடைந்துள்ளேன்.

நாட்டின் சிவில் சமூகங்களும் அதனை ஆமோதித்துள்ளதுடன், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு என்னிடம் கோரியுள்ளனர். பன்னாட்டுச் சமூகமும் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது. நாம் பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் தனித்து செயற்பட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தற்போதைய நிலை குறித்த பன்னாட்டுப் பிரதிநிதிகளின் நிலைப்பாட்டுக்கு என்னால் இடையூறு விளைவிக்க முடியாது.

நாட்டின் கீர்த்திக்கு ஏற்படத்தக்க அவப்பெயர், பொருளாதார நன்மைகள், ஜி.எஸ்.பி வரிச்சலுகை, முதலீடுகள், உட்கட்டமைப்பு அடிப்படையிலான வசதிகள் இல்லாமற்போகும் வாய்ப்புக்கள் பற்றியும் அவர்கள் என்னிடம் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மகிந்த தல்லைமை அமைச்சராக நியமிக்கப்பட பின்னர் சில ஊடக நிறுவனங்களுக்குள் அத்துமீறி நுழைந்தமை, தாக்குதல் நடத்தியமை மற்றும் சுதந்திரமாக செயற்படுவதற்கு இடையூறு விளைவித்தமை போன்ற செயற்பாடுகளின் காரணமாக நாட்டின் சட்டதிட்டங்களுக்கு சீர்குலைவுநிலை ஏற்பட்டது. பன்னாட்டுப் பிரதிநிதிகள் அரச தலைவரையும் நேரில் சந்தித்து, இவ்விடயங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் எனக்கும், அரச தலைவருக்கும் இடையில் ஒன்றரை மணித்தியாலங்கள் வரையில் கலந்துரையாடல் இடம் பெற்றது. நாடாளுமன்றத்தை எதிர்வரும் 16ஆம் திகதி வரை காலந்தாழ்த்தாது, எதிர்வரும் வாரத்திலேயே கூட்டுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் அரச தலைவர் அவதானம் செலுத்த வேண்டும் எனக் கோரினேன். அதன்படி எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அரச தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கான அரசிதழ் அறிவித்தல் இன்னமும் விடுக்கப்படாத நிலையில், எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று இரவு வரையில் அரசிதழ் வெளியிடப்படவில்லை.

(5,31)

**பணிப்பெண் தேவை**

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 2626 944**

**தேவை**

வெள்ளவத்தையில் காரியாலயம் ஒன்றிற்க்கு Account மற்றும் Riception வேலைக்கு கணணி அறிவுடைய, ஆண்/பெண் தேவை

**077 35 40 632 / 077 77 33 122**

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் கோழி இறைச்சி 1kg - 400/=
உயிர் விலை 1kg - 240/=

ஊர்க்கோழி சேவல், பேடு, கருங்கோழி, கல்பேட், பேரென்ஸ், விறாத்துக்குஞ்சு என்பன விற்பனைக்குண்டு. தீபாவளியை முன்னிட்டு மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**றோயல் பாம்**
**மானிப்பாய் வீதி, உரும்பிராய்.**

**077 9229 588**

## மகிந்தவிடம்...

முக்கிய தலைவர்கள் கடும் ஆவேசத்துடன் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

தமிழர்கள் ஒற்றுமையையே முதலாவதாக எதிர்பார்ப்பவர்கள். கொள்கைக்காக பல்லாயிரம் உயிர்களையும் தியாகம் செய்த இனம். இந்த இனத்திலிருந்து மக்கள் பிரதிநிதியொருவர் காலைவாருவது, மக்களை கொதிப்படையச் செய்யும். அது, உடனேயே எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது. சமூகவலைத் தளங்களில் பலரும் தமது கண்டனக் கருத்துக்களைப் பதிவு செய்தனர். அன்றிலிருந்து இன்று வரை காக்கை வன்னியர்கள் இருக்கவே செய்கின்றனர் என்றும் பதிவிட்டனர். மிக மோசமாக, சபைக்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பிரயோகித்து வியாழேந்திரனை வசைபாடிப் பதிவிட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க் கலைஞர் சங்கத்தின் முக்கியஸ்தர் தி.பார்த்தீபன் தெரிவித்ததாவது, எமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் போராடி வருகின்றது. 'வீடு'தான் எங்கள் சின்னம். அந்தச் சின்னத்தில் போட்டியிட்டவர்களுக்கு அமைச்சுப் பதவியைப் பெறுவதற்காக நாம் வாக்களிக்கவில்லை. கொள்கையின் வழியில் நின்று எமது உரிமையைப் பெறுவதற்காகவே நாம் வாக்களித்தோம். எங்கள் வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான சதாசிவம் வியாழேந்திரன் நேற்று மகிந்தவிடம் சரணாகதி அடைந்துவிட்டார். பிரதி அமைச்சுப் பதவியைப் பெறுவதற்காக தமிழினத்தின் கொள்கையைப் பல கோடிகளுக்குப் பேரம் பேசி மகிந்தவின் கரங்களை இறுகப் பற்றியுள்ளார். இவரை ஒருபோதும் மன்னிக்க முடியாது. இவர் பச்சைத் துரோகி என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேந்திரன், கிழக்கில் அமைச்சுப் பதவிகளை வைத்துள்ள முஸ்லிம்கள் தமிழர்களை ஒடுக்கி தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கின்றனர். அதனைத் தடுக்க வேண்டுமாக இருந்தால் கிழக்கில் தமிழர்களும் அமைச்சு அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருக்கத்தான் வேண்டும். அதனைக் கருத்தில்கொண்டே கிழக்கு மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சுப் பதவியை வியாழேந்திரன் பொறுப்பேற்றுள்ளார் எனவும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. இதனை நாம் ஏற்கமாட்டோம். பல கோடிகளைப் பெற்று மைத்திரி மகிந்தவின் கால்களில் விழுந்துதான் அமைச்சுப் பதவி பெறவேண்டிய அவசியம் கிடையாது. அவர் தனது சுகபோக வாழ்க்கைக்காகவே அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ளார். இவரை வரலாறு மன்னிக்காது.

தமிழினத் துரோகி பிள்ளையானின் கட்சியிலிருந்த இவரை புளொட் அமைப்பே இழுத்து வந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட வைத்தது. வியாழேந்திரனின் பச்சைத் துரோகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பே பொறுப்பாகும். புளொட் அமைப்பின் சார்பிலேயே இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டார். விரைவில் இவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தக்க பாடம் புகட்டும் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் அணி உறுப்பினர் மாணிக்கவாசகர் குலேந்திரன், கிழக்கில் இன்னொரு துரோகி வெளிப்பட்டுள்ளான். சலுகைகளுக்கு கோடிகளுக்கு ஆசைப்பட்டு தமிழ்த் தேசியத்தை விற்றுவிட்டார். இவரைத் தமிழினம் மன்னிக்காது என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.புவிதரன், பதவிக்காகவும் பணத்துக்காகவும் ஆசைப்பட்டு சர்வாதிகாரி மகிந்தவிடம் சரணடைந்த வியாழேந்திரனை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள். மாவட்டத்தை விட்டு இதுவரை விரட்டியடிப்பார்கள் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் சிவில் அமைப்புக்களின் இணைப்பாளர் வடிவேல் சுரேஸ், நேற்றுக் காலையில்தான் கனடாவில இருந்து இலங்கை வந்த வியாழேந்திரன் தனது வீட்டுக்குக்கூடப் போகாமல் வானூர்தி நிலையத்திலிருந்து நேரே மகிந்தவின் வீட்டுக்குப் போயுள்ளார். அங்கு அவர் பல கோடி ரூபா பணத்தைக்கண்டு மகிந்தவின் கால்களில் விழுந்து பிரதி அமைச்சுப் பதவியைப் பேரம் பேசி எடுத்துள்ளார். இது அவருக்குப் படுகேவலமானது. எமது வாக்குகளினால் நாடாளுமன்றம் சென்ற இவரை நாம் சும்மா விடலாகாது என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் சிவில் அமைப்புகளின் உறுப்பினர் சிவராஜா கஜன், தலைமை அமைச்சர் தொடர்பில் த.தே.கூட்டமைப்பு எடுக்க இருக்கும் முடிவு ரணிலுக்கானதோ அல்லது மகிந்தாவுக்கானதோ அல்ல. அது தமிழினத்தின் விடுதலைக்கானது. அந்த முடிவு இனத்தின் பிரதிநிதி என்னும் அடிப்படையில் எடுக்கப்படுமே அன்றி எண்ணிக்கை அடிப்படையில் எடுக்கப்படாது. துரோகிகளின் வெளியேற்றம் அம் முடிவை எவ்வகையிலும் பாதிக்காது. வியாழேந்திரன் ஒரு பச்சைத்துரோகி என்றார். (5)

## நம்பிக்கையில்லாத்...

கரு ஜெயசூரியவிடம் நேற்று மாலை கையளித்துள்ளது. நாடாளுமன்ற அவைத் தலைவர் என்ற முறையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தாம் கையெழுத்திட்டு, சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளதாக, லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

'அரசமைப்பின் 46 (1) மற்றும் 48 ஆகிய பிரிவுகளின் அடிப்படையில், பதவியில் உள்ள தலைமை அமைச்சர் இறந்து போனால், பதவி விலகினால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால், அல்லது, அரச கொள்கை அறிக்கை அல்லது வரவுசெலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அல்லது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோற்கடிக்கப்பட்டால் மாத்திரமே தலைமை அமைச்சர் பதவி வெற்றிடமாகும். ஆனால் அவ்வாறு பதவி வெற்றிடமாகவில்லை.

இதேவேளை அண்மையில் அரசிதழில் தலைமை அமைச்சராக அறிவிக்கப்பட்ட மகிந்த மீது நம்பிக்கையில்லை' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி இதனைச் சமர்பித்துள்ளது. (5)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி
### மேரி வீர்ஜினி குரூஸ் தி.கு.




வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி வீர்ஜினி குரூஸ் நேற்று (02.11.2018) வெள்ளிக்கிழமை இறை பதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி இன்று (03.11.2018) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் (மாகாணத் தலைவி)**



### கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர்
(ராசாத்தி)
(ஸ்ரீகிருஷ்ணா வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர்)

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகிருஷ்ணா வெல்டிங்வேக்ஸ் உரிமையாளர் கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர் கடந்த (31.10.2018) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பாய்க்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் ஈமச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டு மு.ப. 11 மணியளவில் பருத்தித்துறை கோரியடி மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாதனை, பருத்தித்துறை.**
**077 2247874**

தகவல்:
**இ. காண்டீபன்.**

நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம்: 716 வர்ணம்: நீலம்
திகதி: 2018.11.02
வெற்றி இலக்கங்கள் 29 45 50 65 ஆங்கில எழுத்து W
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,477,876/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 876
சீட்டிழுப்பு திகதி 2018.11.01 வியாழக்கிழமை
P 11 31 41 71
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,967,824/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2018.11.03ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.11.2018 வெற்றி வாரம் 2393 வர்ணம் சிவப்பு
தனுசு
வெற்றி இலக்கங்கள் 05 17 18 51
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,459,064/=
2018.11.04 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 362
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.11.02
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 101,052,453/-
A 03 22 34 66
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு: 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 422
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.11.02
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 65,702,415/-
வெற்றி இலக்கங்கள் 19 33 38 50 ஆங்கில எழுத்து L
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

*The 67th Annual Festival of Carols*
*By the*
***Combined Choirs Of***
***Schools and Colleges of the North***
*will be held on*
*Sunday, 4th Nov., 2018*
*at 4.00 pm*
*at the St. John's College Hall*
***Admission : By Hymn Sheet - Rs 20/=***

The Thinnai GET
**மாணவர்களுக்கான இலவச**
**ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி**

த திண்ணை ஹோட்டல் ஞானம் எடியுகேஷன் டிரஸ்டின் அனுசரணையுடன் முற்றிலும் இலவசமான 40,000/= பெறுமதியுள்ள 3 மாத ஹோட்டல் முகாமைத்துவ ***Food & Beverage (Restaurant Waiters) & Cookery*** பயிற்சியை 20.11.18 ஆரம்பிக்க உள்ளது.


கீழ்காணும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வயதெல்லை 18 - 28
- G.C.E. O/L
- ஆங்கில அறிவு
- விண்ணப்பப் படிவங்களை த திண்ணை ஹோட்டலில் பெற்றுக் கொள்ளமுடியும்.
- விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முடிவுதிகதி 10/11/2018

அனுப்பவேண்டிய முகவரி:
**த திண்ணை 86, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல: **021 203 0400**
மின்னஞ்சல்: **hr@thethinnai.com**

பயிற்சியின் முடிவில் தகுதியுடையோர் தகுந்த ஊதியத்துடன் தொழில் ரீதியாக உள்வாங்கப்படுவார்கள்.

# ‘மரபணு’




## கலங்கள் உயிர்ப்போடு தரும் அடிப்படைக்கூறு!

■ தமிழ்நம்பி

யானையின் கன்று யானை போலவும், பூனையின் குட்டி பூனை போலவும் பிறக்கிறது. ஆனாலும், கருத்தரித்த சில வாரங்களுக்குள் கருப்பையில் உருவாகின்ற கருவைப் பார்த்தால், மனிதன் முதல் மீன் வரை எல்லா உயிரினங்களிலும் அதன் வடிவம் ஒரே மாதிரியாக இருக்கிறது. நாள்களின் நகர்வில் கரு, அதன் பெற்றோரின் வடிவத்தைப் படிப்படியாக அடைகிறது. இவ்வாறு பெற்றோரின் வடிவமைப்பு பிள்ளைகளுக்கு அமைவதற்கும் பாரம்பரியம் என்ற பண்பு காரணமாகிறது.

**தனித்துவம்**

பொதுவான அம்சங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் வடிவ ஒற்றுமை காணப்படுகின்ற போதிலும், சின்னச் சின்ன விடயங்களில் வித்தியாசங்களும் இருக்கும். அதன் காரணமாகவே ஒரே ஈற்றில் ஒட்டிப் பிறக்கின்ற பிள்ளைகளைக்கூட எம்மால் அடையாளம் காண முடிகிறது. இதற்குத் 'தனித்துவம்' என்று பெயர்.

**மரபணுக்களின் மாய உலகம்**

பாரம்பரியத்துக்கும், தனித்துவத்துக்கும் காரணமாவது 'மரபணு' எனப்படுகின்ற அடிப்படைக்கூறு. இயற்பி யலிலும், வேதியியலிலும் 'அணு' என்பது அடிப்படைக் கூறாக இருப்பதைப் போலவே உயிரியலில் மரபணு ஓர் அடிப்படைக் கூறாக விளங்குகிறது. தலைமயிர் கறுப்பா, சிவப்பா, பொன்னிறமா, சுருட்டையா, நீளமா, மூக்குச் சப்பையா, கிளி மூக்கா என அத்தனை அம்சங்களையும் நிர்ணயிப்பது மரபணுதான்.


தலை வழுக்கை, பார்வைக் கோளாறுகள், நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், மனநோய் போன்ற பல வேண்டாத விடயங்களும் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு மரபணுக்கள் மூலமாகவே வந்து சேர்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வொரு குணாம்சத்துக்கும் ஒரு மரபணு பொறுப்பாக இருக்கிறது. இவ்வாறான 25 ஆயிரம் குணாம்சங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. அதாவது, 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரபணு வகைகள் உள்ளன என்பது உறுதியாகிறது.

மரபணுக்கள் சரம்போல வரிசையாக அமைந்து 'டியாக்சிரிபோ நியூக்ளிக் அமிலம்' (டி.என்.ஏ) என்ற அமைப்பாக அணிவகுத்திருக்கும். அந்த அமைப்பு 'குரோமோசோம்' எனப்படும் புரத உறைக்குள் பொதிந் திருக்கும். ஏராளமான குரோமோசோம்கள் 'கலக் கரு' என்ற உருண்டையாகத் திரண்டிருக்கும். அது கலம் எனப்படும் நுண்ணறையில் குடியிருக்கும்.

**கலங்களின் வகை**

கலம் என்பது ஓர் அதிசய, அற்புதப்படைப்பு. வைரஸ் எனப்படும் நுண்ணுயிரியைத் தவிர, மற்றெல்லா உயிரினங்களுக்கும் கலங்கள் தான் கட்டுமான அலகு. கல அமைப்பு இல்லாத ஒரே உயிரி வைரஸ் தான்.




உயிர் உள்ளது என நிர்ணயிப்பதற்கு, கலங்களின் இனப்பெருக்கம் தான் சாட்சி. பிரதி எடுப்பதைப் போலவே ஒரு கலம் இரண்டாகி, இரண்டு நான்காகி கணத்துக்குக் கணம் இரட்டித்துக் கொண்டே போகிற நிகழ்வுதான் உயிர். இந்தச் செயல்நிலை நின்றுபோகும் தருணமே இறப்பு எனப்படுகிறது.

**அமைப்பு**

கலங்கள் மிக நுண்ணியவை. அதன் உறையாக 'பிளாஸ்மாச் சவ்வு' அமைந்துள்ளது. கலங்களில் உடல் கலங்கள், பாலினக் கலங்கள் என இரு வகையுண்டு. பாலினக் கலங்கள் ஆண்களின் விந்தகத்திலும், பெண்களின் முட்டையகத்திலும் மட்டுமே காணப்படும். உடல் கலங்களில் 46 குரோமோசோம்களும், பாலினக் கலங்களில் 23 குரோமோசோம்களும் உள்ளன.

**செயற்பாடு**

ஆண்பாலினக் கலம், விந்து மூலம் பெண்ணின் கருப்பையில் நுழைந்து பெண்பாலின முட்டையைச் சந்திக்கின்ற போது விந்துக் கலம் கரு முட்டைக்குள் நுழைந்து, அங்குள்ள கருவில் ஒட்டிக்கொள்ளும். தன் கருவுக்குள் 46 குரோமோசோம்கள் வந்துவிட்டன என்பதை உணர்ந்ததும் பெண் முட்டை வியப்பூட்டும் மாற்றங்களை அடைகிறது. அதனுள் பல பொருள்கள் உருவாகின்றன. அதன் பருமன் அதிகரிக்கிறது.




ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அது இரண்டிரண்டாகப் பிரிந்து, எல்லா வகையிலும் ஒத்த நகலுடைய கலங்களாக பெருகுகிறது.

சினையுற்ற கரு சிசுவாகப் பரிணமிக்கின்றபோது உருவாகும் உடல், மயிர், எலும்புகள் போன்ற எல்லா உறுப்புகளுமே அந்த ஆதியாரம்ப முட்டையின் சந்ததிகளால் தான் கட்டமைக்கப்படுகின்றன. ஆனாலும், ஒவ்வொரு கலமும் தான் இருக்கும் இடத்துக்குத் தக்கபடி குறிப்பிட்ட பணியை மட்டுமே செய்கிறது. இதயத் திசுவிலுள்ள கலங்கள் சுருங்கியும் விரிந்தும் இதயத்தைத் துடிக்கச் செய்கின்றன. எலும்பில் உள்ள கலங்கள் அசைவின்றிப் பொருந்தியிருக்கின்றன. தசைகளில் உள்ள கலங்கள் மூளையின் ஆணைகளுக்கு இணங்கி அசைவுகளை உண்டாக்குகின்றன. மூளையில் உள்ள கலங்கள் மிகப்பெரும் சிக்கலமைப்பு கொண்ட மின் வேதியியல் சுற்றுக்கள் அடங்கிய கணினியாகச் செயலாற்றுகின்றன.

**கல்லீரல், மண்ணீரல், கணைய உறுப்புகள்**
**கல்லீரல், மண்ணீரல், கணைய**

உறுப்புகளிலுள்ள கலங்கள் திறன் மிக்க வேதித் தொழிலகங்களாகச் செயற்பட்டு, விசேட வகை நொதிகளையும், இன்சுலின் போன்ற வேதிகளையும் உற்பத்தி செய்கின்றன.

குரோமோசோம்கள் பல தலைமுறைகளை இணைக்கின்ற பாலங்கள். அவற்றிலுள்ள 'டி.என்.ஏ'க்கள் பல நூற்றாண்டுகள் வரை மாறாமல் இருக்கின்றன. உதாரணமாக, மனித குலத்தில் இது வரை சுமார் 2 ஆயிரத்து 50Q தலைமுறைகள் கழிந்திருக்கும். எனினும், சில மேலோட்டமான மாற்றங்களைத் தவிர, மனித உடலின் அமைப்பில் பெரிதாக ஒன்றும் மாறிவிடவில்லை. குறிப்பாக, மனித மூளையின் பரிமாணம் கூடவோ குறையவோ இல்லை எனலாம்.

**மரபணுச் சங்கிலி**

'டி.என்.ஏ' என்பது ஒரு சங்கிலி. நியூக்ளியோடைட் என்னும் மூலக்கூறு அதன் கன்னிகள். அது பாஸ்பேட், ரிபோஸ் சர்க்கரை, நைதரசன் காரம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. 'டி.என்.ஏ' ஒரு ஏணியை முறுக்கியது போன்ற வடிவத்தில் இருக்கும் என்று கண்டுபிடித்த வாட்சன் மற்றும் கிரிக் என்ற இரண்டு விஞ்ஞானிகள் நோபல் பரிசைப் பெற்றுவிட்டார்கள். அந்த ஏணியின் கால்களாக பாஸ்பேட் சர்க்கரை இழைகளும், படிகளாக நைதரசன் காரங்களும் அமைந்துள்ளன.

பாட்டி, தாத்தா, அப்பா, அம்மா எல்லோரும் வெள்ளை நிறமுள்ளவர்களாக இருக்கின்றபோது, குழந்தை கறுப்பாகப் பிறந்திருக்குமானால், அதற்கு மரபணுவில் ஏற்பட்ட திடீர் மாற்றம் காரணமாயிருக்கலாம். மயில், புலி போன்றவற்றில் வெள்ளை உடல் கொண்டவை தோன்றவும் இதுவே காரணம். மரபணு மாற்றத்தால் ஏற்படுவதுதான் புற்றுநோய். கலங்களில் உள்ள குரோமோசோம்களின் அமைப்பு அல்லது எண்ணிக்கை கல இரட்டிப்பின்போது மாறிவிடுவது, மரபணு மூலக்கூறில் வேறுபாடுகள் ஏற்படுவது போன்றவை மரபணு மாற்றங்களுக்கு உதாரணங்கள். 'டி,என்.ஏ' இல் ஒரே ஒரு நியூக்ளியோடைட் இடம் மாறி அமர்ந்தாலும் வெளிப்படையான மாற்றங்கள் தென்படும். அணுக்கதிர் வீச்சு, வெப்பம், வேதிகள் போன்ற காரணிகள் 'டி.என்.ஏ' இன் கட்டமைப்பை மாற்றி மரபணு மாற்றங்களை ஏற்படுத்தும்.

**மரபணுக் கலப்பு**

மரபணுவில் மாற்றங்களைச் செயற்கையாகவும் உண்டாக்கி கலப்பின உயிரினங்களை உருவாக்க முடியும். மாடுகள் முதல் நெல், கோதுமை வரையான உயிரினங்களில் மரபணுக் கலப்புசெய்து சிறப்பான பண்புகளைக் கொண்ட கலப்பினங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கத்தரி, பருத்தி போன்ற செடிகளில் கிருமிகளின் மரபணுக்களைப் புகுத்தி அதிக விளைச்சல் தரும் ரகங்களை உருவாக்கியுள்ளனர். மரபணுத் திருத்தங்களின் மூலம் சில குறிப்பிட்ட நோய்களைக் குணப்படுத்த முடிந்திருக்கிறது.

மனிதர்களின் 46 குரோமோசோம்களையும் சோதித்து ஒவ்வொரு குரோமோசோமிலுள்ள குறைகளால் எவ்வாறான உடல் நலக்கோளாறுகள் ஏற்பட முடியுமென்று பட்டியலிடப்பட்டுள்ளது. புதிதாகப் பிறந்த சிசுவின் குரோமோசோம்களைப் பரிசோதித்து, எதிர்காலத்தில் அதற்கு எந்தவிதமான உடல்நலப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை ஊகித்துக்கொள்வதன் மூலம், ஏற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்காலப் பாதிப்புகளைத் தடுக்கலாம்.

இதுவரை மனித உடல் கலங்களில் மட்டுமே மரபணுத் திருத்தம் செய்ய முடிந்திருக்கிறது. அதன் மூலம் தனிநபர்களின் சில குறைகளை நிவர்த்தி செய்தாலும், பாலினக் கலங்களில் உள்ள மரபணுக்களைச் சரிப்படுத்தாதவரை அவர்களுடைய சந்ததிகளுக்கு மரபுப்பிழை மூலமான பிரச்சினைகள் வந்துகொண்டேதான் இருக்கும் என்பது தெரியவந்துள்ளது.

ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளும் முன்பாகத் தமது மரபணுக்களைப் பரிசோதிப்பதன் மூலம் மரபுக் கோளாறுள்ள சந்ததிகளைப் பெறுவதைத் தவிர்க்க முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள். ■

## தமிழ்க்...

நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி தாவியுள்ளார். புளொட் அமைப்பின் சார்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட வியாழேந்திரன் (அமல் மாஸ்ரர்) நேற்றுக் கட்சி தாவினார்.

இந்தத் தகவல் தமிழ் மக்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கூட்டமைப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி தாவியமை இராஜதந்திர மட்டத்திலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோர் கனடாவுக்கு கடந்த சனிக்கிழமை சென்றிருந்தனர். இவர்கள் மூவரும் நேற்றுக் காலை நாடு திரும்பினர். கனடா விலிருந்து கட்சித் தலைமையுடன் பேசிய வியாழேந்திரன், கட்சி தாவுவது தொடர்பில் எந்தக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

இந்த நிலையில் நாட்டை நேற்றுக் காலை வந்தடைந்த வியாழேந்திரனை, கட்டுநாயக்காக பன்னாட்டு வானூர்தித் தளத்திலிருந்து சிறப்பு மகிழுந்தில் மதப் போதகர் ஒருவர் அழைத்துச் சென்றுள்ளார். நேரடியாக மகிந்தவின் இல்லத்துக்கு வியாழேந்திரன் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அங்கு நேற்றுக் காலையிலிருந்து தொடர்ச்சியாக பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல் அறிந்து வியாழேந்திரனைத் தொடர்பு கொள்வதற்கு கட்சித் தலைவர் த.சித்தார்த்தன் பலமுறை முயற்சித்தபோதும் அவரது அலைபேசி செயலிழந்திருந்தது. அவரது உதவியாளர்களுடன் தொடர்பு ஏற்படுத்த முயன்றபோதும் பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை வியாழேந்திரன் மகிந்த அணிக்கு தாவியமையால் அவருக்கு பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்படுவதாக தகவல் வெளிவந்தது. கிழக்கு மாகாண பிராந்திய அபிவிருத்தி பிரதி அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்பாக நேற்று இரவு பதவியேற்றார். (5,105)

## மகிந்தவை...

யாழ்ப்பாணம், நவ. 3

தற்போதுள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் இரு தரப்புமே சமனாக உள்ளது. அவர்கள் தங்களுக்குள் பலப் பரீட்சை நடத்தட்டும். ஆனால், மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வரும் நிலை காணப்பட்டால் அதனை நாம் ஆதரிக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றபோதும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோடீஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வியாழேந்திரன் ஆகியோர் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கூட்டிய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றது. தனி நபர் ஆதரவுக்காக பங்கேற்கவில்லை. நாங்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்பதற்காகவே பங்கேற்றோம்.

தமிழ் மக்களின் அழிவுக்குக் காரணமான மகிந்தவை எந்தக் காரணத்துக்காகவும் ஆதரிக்க முடியாது. அதேநேரம் ரணில் விக்கிரமசிங்க வழங்கும் வாக்குறுதியையும் நம்ப முடியாது. நாம் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இன்றைய நெருக்கடி தொடர்பில் பல நாடுகளின் தூதுவர்களும் ஐ.நா. அதிகாரிகளும் என்னுடன் பேச்சு நடத்தினர். எமது நாடு ஜனநாயகத்தைப் பின்பற்றி இயங்க வேண்டும் என்பதில் மிகத் தெளிவாகவுள்ளனர். எமது முயற்சியாலும் விரட்டப்பட்ட மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு நாமே காரணமாக இருக்கலாமா என்ற கேள்வியும் உள்ளது.

ரணில் அரசும் தமிழ் மக்களிற்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற மக்களின் கோபமும் உள்ளதோடு தொடர்ந்தும் எமது மக்களையும் கட்சியினையும் பலவீனப்படுத்தும் செயற்பாடும் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்புடுகின்றது என்றார்.

இதன்போது நடுநிலை வகிக்கலாம் என்ற யோசனை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மகிந்த வெற்றி பெற்றால், நாம் அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்த கெட்ட பெயர் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினர். இருப்பினும் இந்தக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. (5,105)

## மகிந்தவின்...

முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், மேற்படி கட்சிகளின் 118 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்கள், மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கும் அதற்குப் பின்னரான நியமனங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானத்தில் ஒப்பமிட்டு, சபாநாயகரிடம் அதனைக் கையளித்தனர்.

மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்து, ஒக்ரோபர் 26ஆம் நாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழ் அரசமைப்புக்கு விரோதமானது என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா முன்மொழிந்த இந்த தீர்மானத்தை சம்பிக்க ரணவக்க வழிமொழிந்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் லக்ஸ்மன் கிரியெல்ல, மைத்திரிபால சிறிசேன கடந்த காலத்தில் இரண்டு முக்கிய தவறு இழைத்திருக்கின்றார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத மகிந்த ராஜபக்சவை அரசமைப்புக்கு முரணாக தலைமை அமைச்சராக நியமித்தமை முதலாவது தவறு. அரசமைப்பின்படி சபாநாயகருடன் கலந்துரையாடியதன் பின்பே நாடாளுமன்றத்தைப் பிற்போட முடியும். நாடாளுமன்றத்தைப் பிற்போடும் அறிவிப்பை சபாநாயகரே மேற்கொள்ள வேண்டும். அவற்றுக்கு முரணான வகையில் அரச தலைவர் தன்னிச்சையாக நாடாளுமன்ற அமர்வுகளை காலந்தாழ்த்தியுள்ளமை இரண்டாவது தவறாகும். வரலாற்றின்படி சபாநாயகர் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் வேண்டுகோளின்படி செயற்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்க்கமானதொரு முடிவை மேற்கொள்வது சபாநாயகர் வரலாற்றில் இடம்பிடிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சம்பந்தன், நாடு பெரியதொரு அரசமைப்புச் சார்ந்த நெருக்கடி நிலையினை எதிர்நோக்கியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்து நீக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணான செயற்பாடாகும். அரச தலைவருக்கு தலைமை அமைச்சரைப் பதவி விலக்கும் அதிகாரம் இல்லை. தனியொரு நபரைப் பாதுகாப்பதல்ல எமது நோக்கம். நாட்டின் அரசமைப்பைப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும் என்றார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நேற்று வருகை தந்திருந்த அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 118 பேரை அண்மித்தமையினையிட்டு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றிக் கோசங்களை எழுப்பியதுடன், நாடாளுமன்றத்தில் தமக்கே பெரும்பான்மை உள்ளது என்றும், தம்மால் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் என்றும் குறிப்பிட்டனர். (5,61)

## மைத்திரியுடன்...

தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அலைபேசியில் நேற்றுமுன்தினம் இரவு பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அலைபேசி உரையாடல் மிகவும் சினேகபூர்வமாக இடம்பெற்றதுடன், இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலமைகள் குறித்து மைத்திரிபால ஐ.நா. செயலர் நாயகத்துக்கு விளக்கிகூறினார். இலங்கையின் புதிய தலைமை அமைச்சர் நியமனமானது தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கேற்ப அரசமைப்புக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மைத்திரிபால மேலும் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க நடவடிக்கைகள் புதிய அரசின் கீழ் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்ட மைத்திரிபால, ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காக அனைத்து சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலமைகளுடன் எந்தவிதமான வன்முறை நிகழ்வுகளும் இடம்பெறவில்லை என்றும் அரசியல் நன்மைகளுக்காக சிலர் தவறான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாக மைத்திரி மேலும் குறிப்பிட்டார்.

மிக விரைவில் நாடாளுமன்றத்தை கூட்டியதும் தற்போது இருந்துவரும் சந்தேகங்கள் நீங்கி உறுதிப்பாடான நிலமை ஏற்படும் என்றும் மைத்திரி குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் வன்முறைகளின்றி செயற்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஐ.நா. செயலர் நாயகம், இலங்கை தொடர்ச்சியாக ஜனநாயகம் மற்றும் நல்லிணக்க நோக்கங்களுக்காக அர்ப்பணிப்புடன் இருந்து வருவது குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார். இலங்கை கேட்டுக்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்க தான் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பு தயாராக உள்ளதாக ஐ.நா. செயலர் நாயகம் மேலும் தெரிவித்தார். (5,61)

## ஜி.எஸ்.பி.பிளஸ்...

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு சில வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே ஜிஎஸ்பி வரிச்சலுகையை பெற்றது. இந்த அர்ப்பணிப்புகளைநிறைவேற்றாவிட்டால் நாங்கள் வரிச்சலுகையை நிறுத்துவது குறித்துச் சிந்திக்கவேண்டியிருக்கும். மகிந்த ராஜபக்சவின் மீள் வருகை நல்லிணக்கத்தை நோக்கிய முன்னேற்றத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## ரணில்...

ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களின் எண்ணிகையின் ஊடாக இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஐக்கிய தேசிய முன்னணியில் தற்போது 98 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளார்கள். நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டுமாயின் 113 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெற வேண்டும். இருப்பினும் இன்றைய தினம் அனைத்துக் கட்சிகளையும் முன்னிலைப்படுத்தி 112 உறுப்பினர்கள் மாத்திரமே வருகை தந்திருந்தனர்.

நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் 98 உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 12 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியில் 2 உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர். தனது பெரும்பான்மை பலத்தை ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்த தவறி விட்டார்.

அங்கு வருகை தந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் இருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 12 பேருமாகமொத்தம் 14 பேரும் நாடாளுமன்றத்தை விரைவில் கூட்டுங்கள் என்று குறிப்பிட்டார்களே தவிர ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றோம் என்று இதுரை குறிப்பிடவில்லை என்றுள்ளது.

**கெஹலிய**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் அரசின் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் 119 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாகக் கணக்கு கூறுகின்றார்கள். ஆனால் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் 107பேர் மாத்திரமே கலந்து கொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 93 பேர் மாத்திரமே கலந்து கொண்டுள்ளனர். அவர்களிலும் 6 பேரும் அமைச்சுப் பதவிகள் தொடர்பில் எங்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றத்திலேயே காட்ட வேண்டும். குழு அறையில் காட்டி எந்தப் பயனும் கிடையாது. நாடாளுமன்றத்தை அலரிமாளிகையாக்க முடியாது - என்றார். (5,10,61)

## மீண்டும்...

(அமல்) மகிந்த அணிக்கு தாவியுள்ள நிலையில், அதனால் எழுந்துள்ள நெருக்கடி நிலமை மற்றும் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எத்தகையை நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் இன்று காலை மீண்டும் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்ட முடிவில் சிறப்பு ஊடக அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று மாலை சுமார் இரண்டரை மணி நேரம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்காத செல்வம் அடைக்கலநாதன், கோடீஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கட்சி தாவியமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டுள்ளது. மகிந்தவையா அல்லது ரணிலையா ஆதரிப்பது. இல்லாவிடின் நடுநிலமை வகிப்பதா என்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

இதனால் இன்று காலை மீண்டும் கூடிப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தின் முடிவில் சிறப்பு ஊடக அறிக்கையும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5,105,26)

## யாருமே...

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க ஆகியோர் பங்கேற்றனர். அவர்கள் தெரிவித்ததாவது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரமே நாடாளுமன்றத்தைக் கூட்டக்கூடிய அதிகாரம் உள்ளது. அரசமைப்பின் பிரகாரம் வேறு எவருக்கும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் இல்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைத்துள்ள அரசு தொடர்ச்சியாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வளிக்கும் வகையில் பல தீர்க்கமான முடிவுகளை எடுக்கவுள்ளது.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச பல விலைக் குறைப்புகளைச் செய்துள்ளார். மக்களுக்கு மானியங்கள் வழங்கவே அரச தலைவர் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த முடிவை எடுத்திருந்தார்.

அரச தலைவர் அரசமைப்புக்கு உட்பட்டே செயற்பட்டுள்ளார். இந்தியா மற்றும் பிரிட்டன் தூதுவர்களிடம் தாம் முன்னெடுத்துள்ள செயற்பாடு தொடர்பில் அரச தலைவர் விளக்கமளித்துள்ளார். விரைவில், ஏனைய நாட்டு இராஜதந்திரிகளிடமும் விளக்கமளிக்கவுள்ளார்.

அரச தலைவர் அரசமைப்பை மீறிச் செயற்பட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியினர் அல்லது ரணில் விக்கிரமசிங்க நேரடியாக உயர் நீதிமன்றம் செல்ல முடியும். ஏன் அதனைச் செய்ய மறுக்கின்றனர். தோல்வியடைவோம் என்பதாலேயே நீதிமன்றம் செல்லாதுள்ளனர்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு கருத்துகளைக் கூறிவருகின்றனர். புதிய அரசொன்று அமையப் பெற்றதும் வரவு செலவுத் திட்டம் அல்லது இடைக்கால கணக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க சிறிது கால அவகாசம் தேவை. அதற்காகவே நாடாளுமன்றம் 16ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது - என்றார். (5,10)

## ஐ.தே.க...

மகிந்தவின் தரப்புக்குத் தாவினார். அந்தக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.நாவின்ன, உள்நாட்டு அலுவல்கள், கலாசார அலுவல்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான எஸ்.பி.நாவின்ன, மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்தார். 2015ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகிய அவர், நேற்று மாலை வரை அந்தக் கட்சியின் சார்பில் செயற்பட்டார். (5)

## கட்சியிலிருந்து...

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.வியாழேந்திரன் கட்சி தாவியதையடுத்து அவர் புளொட் அமைப்பிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அவர் தமது கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளமையினால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சியின் செயலருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வியாழேந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் புளொட் அமைப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தார். அவரை உடனடியாக கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(5,105)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 3

**சென்றலைட்ஸ் கழக கூடைப்பந்துத் தொடர்**

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது.

மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் 21 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானகலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மதியம் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# கோவில்குளம் இந்து புதுக்குளம் ம.வித்தி. ஒருநாள் ஆட்டமின்று

வவுனியா, நவ. 3

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரிக்கும் புதுக்குளம் மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கு வழங்கப்படும் கேடயங்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கோவில்குளம் இந்துக்கல்லூரியின் அதிபர் த.பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக வவுனியா நகரசபையின் உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் மோகன் கலந்துகொண்டார்.

கோவிற்குளம் இந்துக்கல்லூரியில் இருந்து பான்ட் வாத்தியங்கள் முழங்க கிண்ணம் புதுக்குளம் மகா வித்தியாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (ம-110)



## ஐக்கிய வி. கழக கால்பந்து தொடர் இன்று

யாழ்ப்பாணம், நவ. 3

மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இன்று முதல் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 32 கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)


## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், நவ. 3

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தபப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நீர்கொழும்பு மேரிஸ்ரெலா கல்லூரி அணி மோதியது.

இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம)



## காலிறுதியில் பெடரர்

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்தின் வீரர் பெடரர். நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து இத்தாலிய வீரர் பெபினோ மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர். (ம)

# அசார் ஓய்வு

பாகிஸ்தான் அணியின் இளம் வீரரான அசார் அலி பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

"டெஸ்ட் ஆட்டங்களில் கூடுதலான கவனத்தைச் செலுத்தும் நோக்கிலேயே ஒருநாள் ஆட்டங்களில் ஓய்வு பெறும் முடிவை எடுத்தேன்" என்று அவர் தெரிவித்தார்.

தனது ஓய்வு தொடர்பில் அசார் அலி தெரிவித்ததாவது:

"நான் திடீரெனத்தான் இந்த முடிவை எடுத்துள்ளேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் முழுக் கவனம் செலுத்த விரும்புகிறேன். பாகிஸ்தான் அணியில் ஒருநாள் ஆட்டங்களுக்கு அபாரமான வீரர்கள் உள்ளனர். ஆகவே என் தேவை இருக்காது. ஆனால் நான் எந்த ஒரு கசப்பான எண்ணங்களுடனும் ஓய்வை அறிவிக்கவில்லை. இது என் சொந்த முடிவு. டெஸ்ட் ஆட்டங்களில் இதே ஆற்றல், திறமையுடன் தொடர்ந்து கவனம் செலுத்த விரும்புகிறேன். அடுத்த உலகக்கிண்ணத் தொடர் மற்றும் வரவிருக்கும் தொடர்களில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற ஒரு முன்னாள் தலைவராக வாழ்த்துகிறேன். சர்பராஸ் அகமட் அணியை நன்றாகவே வழிநடத்துகிறார்.' என்றார். (ம)

## ஆஸி. கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் விலகினார்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைவரான டேவிட் பீவர் தனது பதவியில் இருந்து நேற்று விலகினார்.

ஆஸ்திரேலியா அணி அண்மையில் தென்னாபிரிக்கா சென்று விளையாடும்போது கேப்டவுன் டெஸ்டில் பான்குரொப்ட், வோர்ணர், சிமித் ஆகியோர் பந்தைச் சேதப்படுத்தி சிக்கலுக்கு உள்ளாகினர். பன்னாட்டுக் கிரிக்கெட் சபை அவர்களுக்கு ஓரிரு ஆட்டங்களில் தடை விதித்த போதிலும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஓர் ஆண்டுக்குத் தடை விதித்தது. எனினும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது முடிவை மாற்ற வேண்டும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் சங்கம் வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்து பதவி விலகினார் டேவிட் பீவர். (ம)




# டோனியை நீக்கியதில் எனது பங்கு இல்லை!

## கோக்லி இப்படித் தெரிவிப்பு

"ரி-20 ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இருந்து டோனி நீக்கப்பட்ட விவகாரத்தில் எனது பங்கு இல்லை" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"டோனியை நீக்கிய உரையாடலில் தேவையான அனைத்து விளக்கத்தையும் தெரிவுக் குழுவினர் வழங்கிவிட்டனர். இந்த விடயத்தில் மேலதிக விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன். அவருக்கு நிரந்தர ஓய்வு வழங்கப்படவில்லை. மீண்டும் ரி-20 அணியில் டோனி விளையாட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. ஒருநாள் ஆட்டங்கள் டோனி தொடர்ந்து விளையாடுவார் என்று ஒரு தலைவராக என்னால் உத்தரவாதம் தர முடியும். ஒருநாள் ஆட்டங்களில் அவரின் பங்கு அளப்பெரியது. அத்தகைய ஆட்டங்களில் அவர் இளையவர்களை வழிநடத்துவார்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரியொருவர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கையில் டோனியின் நீக்கம் தொடர்பில் கோக்லி, ரோகித் ஆகியோரின் கருத்துக்களும் பெறப்பட்டன என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# களத்தில் மெஸ்ஸி!

பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி காயத்தில் இருந்து குணமடைந்து மீண்டும் களத்துக்குத் திரும்பினார்.

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி, கழகத்தைப் பொறுத்தமட்டில் ஸ்பெய்னின் பார்சிலோனாவுக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் தலைவராகவும் அவர் உள்ளார். கடந்த சில நாள்களாக மெஸ்ஸி காயம் காரணமாக அவதிப்பட்டு வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ரியல் மட்ரிட் அணிக்கெதிரான ஆட்டத்தில்கூட காயம் காரணமாக மெஸ்ஸி விளையாடவில்லை. இந்த நிலையில் காயத்தில் இருந்து மீண்டு மீண்டும் களமிறங்கியுள்ளார் மெஸ்ஸி. (ம)




# கோக்லி எக்காலத்துக்கும் சிறந்த வீரர் அவரை எவருடனும் ஒப்பிட வேண்டாம்

## சச்சின் புகழாரம்



இந்திய அணியின் தலைவர் கோக்லி எக்காலத்துக்கும் சிறந்த வீரராகத் திகழ்வார். அவரை எவருடனும் ஒப்பிடக்கூடாது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின்.

கிரிக்கெட் அக்கடமியொன்றைச் சச்சின் மும்பையில் திறந்துள்ளார். அதன் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சச்சின் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒரு வீரராகப் பார்த்தால் விராட் கோக்லியின் வளர்ச்சி அளப்பெரியது என நான் நினைக்கிறேன். அவரிடம் எப்போதும் ஒருவிதமான நெருப்பு இருப்பதை நான் பார்த்தேன். உலகில் தலைசிறந்த வீரராக ஒருநாள் உருவாகுவார் என்றும் நினைத்தேன். இந்தத் தலைமுறைக்கு மட்டும் விராட் கோக்லி தலைசிறந்த வீரராக வருவது மட்டுமல்ல, காலத்துக்கும் தலைசிறந்த வீரராக கோக்லி உருவாகுவார்.

ஒரு வீரரை மற்றொரு வீரரோடு ஒப்பிடுவது என்பது சரியல்ல. அதற்குள் செல்ல விரும்பவில்லை. என்னுடைய காலத்தில் 60களிலும், 70களிலும், 80களிலும் விளையாடிய பந்துவீச்சாளர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று அவ்வாறு பல காலங்களில் விளையாடிய வீரர்கள் இல்லை.

ஒவ்வொரு தலைமுறையும் ஒவ்வொரு விதமாக விளையாடுகிறார்கள், ஒவ்வொரு விதிமுறையைப் பின்பற்றினார்கள். பல்வேறு கட்டுப்பாடுகள், பல்வேறு தளங்கள், மைதானங்கள், பல்வேறு பந்துகள் பயன்படுத்தப்பட்டன. ஆதலால் ஒரு தலைமுறை வீரர்களுக்கு இடையே எந்தவிதமான ஒப்பீடும் இருக்கக்கூடாது என்பதை விரும்புகிறேன்" என்று சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)

# வென்றது பார்சிலோனா



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கல்ச்செரல் லெனோசா அணிக்கு எதிரான ஆட்டத்தில் பார்சிலோனா அணி போராடி வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. மேலதிக நிமிடத்தில் லைக்னட் பார்சிலோனாவின் கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

## அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இன்னும் 3 நாள்கள் மட்டுமே உள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாள்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.



திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd 321, K.K.S. Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்) தொ.பே. இல : 077 755 4528



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்

இந்த வருடமே இறுதி வருடம்

முந்துங்கள் நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

V2 TRAVELS மூலம் பதிந்து அமெரிக்க விசா அதிஷ்டத்தை பெற்ற நான் என் எதிர்கால வாழ்க்கைத்துணைவருக்கும் விசா எடுத்துக்கொண்டு அமெரிக்கா செல்ல உதவிய V2 Travels க்கு எனது நன்றிகள்.



திருச்செல்வம்-மரியரோகினி

V2 TRAVELS
0768226243


# பொன்.விபுலானந்தன் கிண்ணம்: சென்றலைட்ஸ் புளூஸ் வென்றது



யாழ்ப்பாணம், நவ. 3

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளுஸ் அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளுஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளுஸ் விளையாட்டுக் கழக அணி 88:46 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# கொலின்ஸ் வி.கழக கால்பந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 3

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் சிவகுரு பரமேஸ்வரியின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டதிட்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக் கழக பழைய மைதானத்தில் இன்று சனிக் கிழமை ஆரம்பமாகின்றன. காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)


சிவமயம்

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்

சென்ற 24.10.2018 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

### சிவஸ்ரீ சதாசிவசர்மா சிவகடாட்சக்குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

02.11.2018 வெள்ளிக்கிழமை தசாகம் காலை 9 மணி
03.11.2018 சனிக்கிழமை இடபதானம், ஏகோதிஷ்டம், மாசிகம்
04.11.2018 ஞாயிற்றுக்கிழமை சபிண்டீகரணம்
05.11.2018 திங்கட்கிழமை கிருகயக்ஞம் (மதிய போசனம்)

05.11.2018 திங்கட்கிழமை இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
மூளாய்.

குடும்பத்தினர்.



## வீடு வாடகைக்கு அச்சுவேலி - இராஜவீதியில்


அச்சுவேலி இலங்கை வங்கியிலிருந்து இராஜ வீதியில் சரியாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் சகல வசிகளுடன் புதிதாக சீரமைக்கப்பட்ட வீடு. 2019 தைப்பொங்கலுடன் நீண்டகால வாடகைக்கு உண்டு. பயன்தரும் தென்னை, பலா.மா.முருங்கை போன்ற மரங்களும் உண்டு.

021 2232370/ 077 7110088

(CS 20923) (14.17)


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 03 . 1932



மறைவு 24 . 10 . 2008

மீசாலை

### அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

B.A, Dip in Edu., M.A

(இளைப்பாறிய கொத்தணி அதிபர் )

திதி:— அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பத்தாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாள்கள் நடந்தபடி கடந்துமிங்கு - உம் நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்

குடும்பத்தினர்.

35/1 A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.


"சிவகிரி" மீசாலை வடக்கு, மீசாலை

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(CS/20956)(11.17)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பமலர் (ஜொய்சி) தேவறஞ்சிதன்



மலர்வு 23.12.1963 உதிர்வு 02.11.2018

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமலர் (ஜொய்சி) தேவறஞ்சிதன் நேற்று (02.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மரூசலீன் - மாகிறேட் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தேவறஞ்சிதனின் (துபாலகம், இராமநாதபுரம்) அன்பு மனைவியும் அமலராஜ் (சாள்ஸ் - பிரான்ஸ்), ஞானராஜ் (றதிஸ்), நிரோஜினி (துசி - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயதாஸ் (விசியன்), தர்மதாஸ் (ரசியன்), தவமலர் (றொபின்), அமலதாஸ் (டெசியன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரூபன் (ஜேர்மனி), சைனு ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜினின் அம்மம்மாவும் வேவி, சாந்த் அன்ரன், ஸ்ரெலா, தங்கா, குணா, பவானி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (03.11.2018) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கிளிநொச்சி புனித. திரேசாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.